Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
டிச.10-16,1995

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 131

டெண்டுல்கர் வாங்கிய பணம்

## கணிப்பில் ஒரு தவறு

## புலிகளின் பொறி தகர்ந்தது எப்படி ?

இலட்சிய புருசனாக இருக்க வேண்டுமா ? அட்வைஸ்

குளு குளு சினிவிசிட்

ரகுமானுக்கு பதவி உயர்வு



ஒரு குறும்பரின் டிக்ஷனரி

www.padippakam.com

# முரசம்

## பட்டிமன்றம் தேவையில்லை

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

நாட்டின் பிரதான
எதிர்க்கட்சியின் போக்கு
எல்லோரையும் குழப்புகிறது.

பட்ஜெட் தொடர் விவாதங்களில்
ஆளாளுக்கு ஒன்று பேசுகிறார்கள்.
கௌரவ உறுப்பினர் தயாரத்ன
அரசியல் தீர்வு தற்போது
வேண்டவே வேண்டாம்
என்று வேண்டுகோள் விடுக்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவர்
பல சந்தர்ப்பங்களில்
அரசியல் தீர்வை ஆதரிப்போம்
என்று சொல்லியிருக்கிறார்.

பிரதான எதிர்க்கட்சியில்
பல உறுப்பினர்கள்
படை நடவடிக்கைகளைப்
பாராட்டிப் பேசியிருக்கிறார்கள்.

பிரதான எதிர்க்கட்சி
கடிவாளம் இல்லாத கட்சியாக
மாறியிருப்பதாகத் தெரிகிறது.

போர்த் திறனில்
யார் வல்லவர்கள் என்று
ஆளும் தரப்பும், எதிர்த்தரப்பும்
பாராளுமன்றத்தில்
பட்டிமன்றம்
நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

கிழக்கை நாம் மீட்டோம்
அதனை நீர் இழந்தீரே
என்கிறது பிரதான எதிர்க்கட்சி.

வடக்கை நாம் வென்றோம்
அன்று முடியாமல் இருந்தீரே நீர்
என்று பதிலடி தருகிறது
ஆளும் தரப்பு.

அடுத்த தேர்தலுக்கான
வாக்கு எண்ணிக்கைக்காக
இருதரப்பும்
போர்க்கணக்கு
காட்டிக் கொண்டிருக்கின்றன.

இரு தரப்புமே
ஒரு கணிப்பில் தொடர்ந்து
தவறு செய்து கொண்டிருக்கின்றன.

பிரதேசங்களை கைப்பற்றுவது
போரின் முடிவாகிவிடும்
என்று கணித்துக் கொள்கின்றன.

அதனால்தான்-
தாம் ஆட்சியிலிருந்தபோது
கைப்பற்றிய பகுதிகளை
பிரதான எதிர்க்கட்சி
பட்டியலிட்டுக் காட்டுகிறது.

தற்போது தாம் கைப்பற்றிய
பகுதிகளை ஆளும்தரப்பும்
பட்டியலிட்டுக் காட்டுகிறது.

கிழக்கை மீட்டது நாமே
என்கிறது எதிர்க்கட்சி.
மீட்கப்பட்ட கிழக்கு
இப்போது மீண்டும்
கைமாறிவிட்டதாகக்
கவலைப்படவும் செய்கிறது.

இப்போது அரசு
வடக்கை மீட்டதாக கூறுகிறது
வடக்கு மீண்டும்
கைவிட்டுப் போகாது
என்பதற்கு என்ன உத்தரவாதம்?

பிரச்சனைகள் தீராமல்
பிரதேச வசப்படுத்தல்கள் மட்டும்
நிரந்தர வெற்றி என்பது
நிச்சயம் ஒரு கனவு.
தப்பான ஒரு கணிப்பு!

இரு தரப்பும் அதனை
உணர்ந்து கொள்ள வேண்டும்.
வாக்கு எண்ணிக்கையைவிட
வருங்காலச் சிறப்பை எண்ணினால்
நிகழ்காலக் கடமையை
இருதரப்பும் ஒன்றுபட்டு
நிறைவேற்றி முடிக்கலாம்.

அரசியல் தீர்வை
எட்டும் பணியில்
மனம் திறந்த போக்கும்
பொதுநல நோக்கும்
பொறுப்புணர்வின் அடையாளமாகும்

ஏட்டிக்குப் போட்டியான
பேச்சுக்களை விடுத்து
நாட்டுக்குத் தேவையான
அரசியல் தீர்வைக் காண்பதற்கு
வழிவகை காண்பதே
தொடரும் போருக்கு
முற்றுப்புள்ளியாகும்!

▫▫

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை-

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## ஆன்மீகம்



### கொடுத்து வாழுங்கள்

ஈகை என்பது மனிதனைத் தூய்மைப் படுத்துகிறது. தான் அநுபவிக்கக் கூடியதைத் தியாகம் செய்து மற்றவர்களுக்கும் கொடுக்கக் கூடியவன் இயேசுவின் காதையில் இசைவுடன் செல்பவன். தன்னையே தியாகம் செய்த தனிமனிதனாகிய இயேசுவின் வழிநடப்பவன். எனவே, கொடுக்கும் பொழுது மனநிறைவுடன் கொடுக்க வேண்டும். கொடுக்கவேண்டியிருக்கிறதே என்று கிஞ்சித்தேனும் கவலைப்படக் கூடாது. எனவேதான்-

"விசனமாயுமல்ல; கட்டாயமாயுமல்ல, தன் மனத்தில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன்; உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறான்." (2 கொரி 9:6-7) என்று கூறப்பட்டுள்ளது. ஆம், நாம் கடவுளுக்கு ஏற்றவராய் இருக்கவேண்டுமானால், ஈகையின் பொழுது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தெளிவாக கூறப்பட்டுள்ளது.

இதுமட்டுமல்ல. இன்னும் இப்படி கூறப்படுகிறது.

"பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனை இல்லாமல் கொடுக்கக் கடவன்; பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள். அந்நியரை உபசரிக்க நாடுங்கள்." (ரோமர் 12:8-13)

ஆம், வஞ்சனையில்லாமல் கொடுக்கவேண்டும். அந்நியருக்குக் கொடுக்கவேண்டும் என்று அழகாகக் கூறப்பட்டுள்ளது. எனவே-

ஆன்மீக வாழ்வில் மேன்மை கொள்ள எண்ணுகிற எல்லாரும் எந்தவிதமான வேற்றுமைகளையும் பாராமல் திறந்த, பரந்த மனதுடன் கொடுக்கவேண்டும்.

ஏ.பி.வி. கோமஸ்.

### அதிகமாகச் சிந்தியுங்கள்

எனது உம்மத்தோர்களே! உங்களுக்கு ஐந்து விசயங்களை உபதேசிக்கிறேன். அவைகளை அதிகமாக சிந்தனை செய்வீர்களானால் உங்களுக்கு இறைவனின் அன்பும் அருளும் உண்டாகும் என நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

1. ஜனங்கள் உங்களுக்கு செய்த உபகாரங்களை அதிதம் சிந்தனை செய்வதை விட, அல்லாஹ் உங்களுக்கு செய்திருக்கும் உபகாரங்களை அதிகமாக சிந்தியுங்கள்.
2. இம்மையை அதிகமாக சிந்தனை செய்வதை விட, மறுமை வாழ்வின் இன்பங்களை அதிகமாக நினையுங்கள்.
3. நீங்கள் செய்திருக்கும் நற்கிரியைகளை அதிதமாக சிந்தனை செய்வதைவிட, உங்களில் நிகழ்ந்திருக்கும் துர்க்கிரியைகளை அதிகமாக சிந்தனை செய்யுங்கள்.
4. நீங்கள் உங்களின் ஜீவியத்தை அதிகமாக சிந்திப்பதை விட, உங்களுக்கு வரப்போகும் மரணத்தைப் பற்றி அதிகமாக சிந்தியுங்கள்.
5. பிறருடைய குற்றங்குறைகளை அதிகமாக சிந்திப்பதை விட, உங்களிடம் உள்ள குறைகளை பற்றி அதிகமாக சிந்தித்துத் திருத்திக் கொள்ளுங்கள்.

(ஆதாரம்-மிர்காத்துல் குலூப்)

தொகுப்பு:- ஏ.ஏ.எம். இக்ரம், கல்ஹின்ன.

## கவிதைப்போட்டி இல–128

### பரிசுக்குரிய கவிதை

**நிசம்**

இவை எலும்புக் கூடல்ல
"எதிர்கால வித்துகள்"
சொல்லிச் சொல்லியே
எம்மவரை இழக்கிறோம்!

கபாவலன், கண்டி.

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

**மலிவு விலை**

விலை வாசி எல்லாம்,
விண்ணுயர போன தெங்கே?
மன்டை ஓடு மட்டுமே,
மலிவு விலை இங்கே.

ம. ஜெயப்பிரியா, கல்லடி, மட்டக்களப்பு.



**நிலவறை நிதர்சனங்கள்**

முகவரி சொல்ல முகங்களில்லை
ஆற்றிடசோகம் அகங்களில்லை
கட்டியழுவதற்கு யாருமில்லை
கால்முடமானாள் கண்ணீர்த்தாய்.
எண்சாண் உடம்பில் எஞ்சியது
எலும்புக்கூடும் தசைப்பிண்டங்களும்.
நியமம் யாவும் கல்லறையாகும்
நிலவறையின் நிதர்சனங்கள்!

தெ. லோஜனா, கொழும்பு-4

**முக்கிய அறிவிப்பு**

காணாமற் போன
உங்கள் பிள்ளைகளின்
உடல் உறுப்புக்களை
அடையாளம் காட்டி
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

ஆர். பாலகிருஷ்ணன், கெந்தக்கொல்ல, மாத்தளை.

**நேற்று–இன்று–நாளை!**

நேற்று-
மானிடராய்..
இருந்தவர்கள்-
இன்று-
மறைந்து போன
மனித எச்சங்களாய்..
நாளை-இவை
இக்கால போரின்
வரலாற்று (ச்)
சின்னங்கள்.

ஆர். சாந்தசீலன்,
இன்ஸ்பெக்டர் ஏத்தம், பொத்துவில்.

**பத்திரப்படுத்து!**

நாளை ஒருநாள் விடியும்!
நாடெங்கும் இதற்கு கேள்வி கூடும்!
சீக்கிரம் பத்திரப்படுத்து
சின்னஞ் சிறுசுகளுக்கு
விளையாட உதவும்!

செல்வி. சிவாஜினி சதாசிவம், மாத்தளை.

**தொடர்கின்ற துயரங்கள்**

ஓடிவந்த வழி எல்லாம் பிணக்குவியல்-
ஒதுங்கவந்த இடத்தினிலே பட்டினிச்சா-
சீ! என்று போய் விட்ட வாழ்வினிலே-
மனம் கல்லாகிப் போய்விட்ட
போதினிலே-
துயர் கண்டுசிந்திடவும்
ஒரு துளி நீர் வரவில்லையே!

மோகன ரூபன்-மகாலிங்கசிவம், மட்/கல்லடி.

**இரசிக்கின்றார்!**

பொன்னாக கண்ணாகக் காத்தாள் எம் அன்னை
புரியாத கல்வியினை புகட்டிவிட்டார் தந்தை
எண்ணற்ற கனவுகளில் எங்கள் மனம் லயிக்க
இடை வெடித்த போரதனால் வாழ்விங்கு மடிய
இருக்குமட்டும் எண்ணியிங்கு பார்க்காத மாந்தர்
இறந்தபின்னே ஓடுகளை இரசிக்கின்றார் பாரீர்!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

**பொறுத்திரு**

முகாரிப் பெண்ணே!
இவைகளில்லா விட்டால்
இன்னுமிரு-
அடுத்த பொதியிலாவது
உன்-
தலைவனின்
தலை வந்து சேரும்!

கிண்ணியா லத்தார்.

**யார் செய்த பாவமிது....?**

'போர் புசித்து'
போட்டதை-உடன்
பிறப்பொன்று
காக்குது!
சாந்தியும்
சமாதானமும்
தோற்குது.
இதையே நிதம்
இத்தரை சுமக்குது.

இரா. இராமகிருஸ்ணன், இராணிக்காடு, பொகவந்தலாவ.

## கவிதைப் போட்டி இல-131



**கவனியுங்கள்**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 16.12.1995

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 131
தினமுரசு வாரமலர்
த.பெ.இல–1772, கொழும்பு.

## மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பதிவு செய்யப்படுகிறவர்கள் இவர்கள்:

எஸ்.எம். நஸ்லீன், திருக்கோணமலை.
முகமது வாபிர், புல்மோட்டை-01.
கோ. ரகு, நெடுந்தீவு.
எஸ். சஜேசமூர்த்தி, மட்டக்களப்பு.
ச. புவனேந்திரன், அக்கரைப்பற்று-07.
எம். கறீமா சஹான், புத்தளம்.
பர்ஷானா உஸ்மான், வரக்காமுனை.
எம்.எஸ். நபீஸத்தும்மா, கொழும்பு.
எம்.எஸ். சஹாதா, பதுளை.
என்.எம். அஜர்தீன், ஹொரவப்பொத்தானை.
செல்வன். எம். மது-மகேஸ்வரன், மட்/முறக்கொட்டாஞ்சேனை.
ம. மாசிவா, வட்டவளை.
எம்.எஸ். சியாயா, அட்டாளைச் சேனை.
பர்ஸான், பர்வின், இப்திகார்-வத்தேகம.
தி.சிவநிதன்-மோகன், செங்கலடி.
ஏ. நியூட்டன் டயஸ், காரைதீவு-மட்டக்குளி.
க. ரவி, மட்/ இலுப்படிச்சேனை.
எச்.எப். ஜனுல் ஹக், நேகம.
மொஹம்மட் டஷ்மிர், குறிஞ்சாக்கேணி-03.
எஸ். புஸ்பராணி, கஹவத்தை.
எஸ். விஜயன், அக்கரைப்பற்று-07.
திருமதி-மல்லிகா பத்மநாதன், பசறை.
ஜெயா முருகுப்பிள்ளை, குருக்கள் மடம்.
நிரோஷினி யூட் சதீஸ்குமார், மட்டக்குளி.
ரி. சசிகலா, சாம்பல் தீவு.
வி. சடகோபன், கவிற்லர்லாந்து.
எல். பவானிசங்கர், சவுதி அரேபியா.
ஏ.எச். ராஸீன் மொகமட், ஏத்தாலை.
சி. ஸ்ரீரவி, ச. குமார் ரஞ்சன், இரத்தினபுரி.
ப. யசோதா, மேரியா-பசறை.
ஹஸ்னிலாவி, மக்கொன.
சல்மியா பளீல், கிண்ணியா.

இராஜதந்திரியாரின் அரசியல் அலசலில் கயிற்றில் நடப்பது போன்ற கவனம் தெரிகிறது. யாருக்குப் படப்படுகிறார்? பயப்படாதீர் இராஜதந்திரியாரே!

என். பாலச்சந்திரன், களுவாஞ்சிக்குடி.

▫▫

'ஐ.நாவின் கவனத்தைப் பெற்றுள்ள இலங்கை' இராஜதந்திரியாரின் அலசல் அருமை.

இரா. நளினராமன் எல்லை வீதி-மட்டக்களப்பு.

▫▫

பட்டும் படாமல் ஏனோதானோவென்று விமர்சனம் செய்யாமல், ஆய்ந்து கணித்து முரசு தரும் அரசியல் கட்டுரைகள் அபாரம். நாரதருக்கு திருஷ்டி சுற்றிப் போடுங்கள்.

தயா-சிவராம், மாளிகாவத்த.

▫▫

'மனித வெடிகுண்டு' கதாநாயகன் கார்லோஸ் கெட்டித்தனமான கெட்டவன் போல் தெரிகிறது.

இல்முன் நிஷா, ஏ. ஹஸன்-திருக்கோணமலை.

▫▫

ரூபவாஹினி செய்திவாசிப்புக்களில் ஏற்படும் தவறுகளைச் சுட்டிக் காட்டிய அய்யாத்துரை யாருக்கு பாராட்டு.

கிண்ணியா.என். சவீர்.

▫▫

பட்டுக்கோட்டையாரின் தொடரும், இராமாயணமும் சூப்பர். 'தாய்' நாவல் வாராவாரம் வருடிச் செல்கிறது.

எம். உஷா பிரசாந்தி, இறக்குவானை.

எனதன்பு முரசே! கவிஞர்களையும், கற்பனையாளர்களையும் உரு வாக்குவதில் உனக்கு நிகர் நீயே.

பி.கே. தர்ஷன், பெரிய நீலாவணை-01, கல்முனை.

▫▫



## வாசகர் சாலை

சினிவிசிட் பகுதியில் ஹொலிவூட் செய்திகளையும் பிரசுரிக்கலாமே.

எஸ். அஸ்வர்தீன், சின்னச்சிப்பிக்குளம்-நேரியகுளம்.

▫▫

அப்துல் ரகுமானின் கவிதைகள்,
ரசிகனின் இலக்கிய நயம்,
இராஜகுமாரனின் இராமாயணம்,
தொடர்க உன்பணி.

எம். ஆர். எம். பைறூஸ், தித்தவெல்காளை, குருநாகல்.

▫▫

'விலை உயர்ந்த குற்றம்' தொடர்கதையும், 'கார்லோஸ்' பற்றிய தொடரும் விறுவிறுப்பாகச் செல்கின்றன. நாரதரும், இராஜதந்திரியாரும் அரசியல் விடயங்களை தருவதில் வல்லவர்கள்.

அஸீஸ் இஸ்மாயில், இர்பானா நியால்-மக்கொன.

▫▫

நாரதர் தரும் எக்ஸ்ரே ரிப்போர்ட், மற்றும் அதிரடி அய்யாத்துரையின் அசத்தலான தகவல்கள் என்னை மிகவும் கவர்ந்து விட்டன.

முரசே உன்பணி வாழ்க, வளர்க....

க. சுதர்சன், செங்கலடி.

▫▫

தன் 125வது இதழில் தடம் பதித்துள்ள முரசுக்கு என் முதற்கணண் வாழ்த்துக்கள். வாசிக்க வாசிக்கத் திகட்டாத இலக்கிய நயம், இராமாயணம், தொடர்கதை சிறுகதைகளுடன் அரசியல் அலசல்களை உடனுக்குடன் அழகாக தொகுத்து வழங்கும் முரசின் பணி பாராட்டக் கூடியதே.

கோகிலா குமாரவேல், இரத்தினபுரி.



படிப்பகம்

www.padippakam.com

# தென்மராட்சியிலிருந்தும் மக்கள் வெளியேற்றப்படலாம்

# ஊடுருவித் தாக்கும் நடவடிக்கைகள் தொடரும்

## சொந்தப்பகுதிகளுக்கு திரும்ப இடம்பெயர்ந்தோர் விருப்பம்

யாழ்ப்பாண நகர் படையினரால் கைப்பற்றபட்டதையடுத்து படையினரின் நடவடிக்கை தென்மராட்சி பகுதிக்கும் விஸ்தரிக்கப்படலாம் என்று புலிகள் அமைப்பினர் எதிர்பார்த்திருக்கின்றனர். தென்மராட்சியில் உள்ள மக்களும் வெளியேறத் தயாராக இருக்கும்படி புலிகள் அமைப்பினர் கூறிவருகின்றனர். தென்மராட்சி, வடமராட்சிப் பகுதியில் இருந்தும் பொதுமக்கள் வெளியேறினால் யாழ் குடாநாடு மழுவதுமே மக்கள் இல்லாத பகுதியாக மாறிவிடும். தற்போது தென்மராட்சியிலும் வடமராட்சியிலும் இடம் பெயர்ந்த மக்கள் உட்பட ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் இருக்கின்றனர்.

**தாக்குதல் தொடரும்**

யாழ்-குடாநாட்டில் தமது நடவடிக்கைகள் தொடரும் என்று பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

யாழ் நகரில் நிலைகொண்டுள்ள படையினரை தொடர்ந்து தொல்லைக்குள்ளாக்குவது மூலமாக, அவர்களது நடவடிக்கைகள் மேலும் விஸ்தரிக்கப்படாமல் தடுப்பதிலேயே புலிகள் அமைப்பினர் கவனம் செலுத்தி வருகின்றனர்.

தற்போது படையினரின் கட்டுப்பாட்டில் வந்துள்ள பகுதிகளில் நிலைகொண்டிருக்க பெருந்தொகையான படையினர் தேவைப் படும் சூழலை உருவாக்கும் விதமாக புலிகளது தாக்குதல் நடவடிக்கைகள் அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

தற்போது கைப்பற்றப்பட்ட பகுதிகளில் புலிகளின் ஊடுருவல் இல்லையென்றால் படைத்தரப்பினருக்கு அதிக வேலையிருக்காது. ஏனைய பகுதிகளை நோக்கியும் முன்னேறுவதற்கு முற்படுவார்கள். அதனால், தொடர்ந்தும் யாழ்ப்பாணப் பகுதிக்குள் ஊடுருவி தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கும் அவசியம் புலிகள் தரப்புக்கு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து படையினர் தென்மராட்சி நோக்கி முன்னேறினால், அங்குள்ள மக்கள் யாழ் நகர் நோக்கிச் செல்லத் தொடங்கி விடுவார்கள் என்று புலிகள் நினைக்கிறார்கள்.

யாழ் நகரில் இருந்து தென்மராட்சி நோக்கிப் படையினர் முன்னேறினால், அங்குள்ள மக்கள் கிளாலி வழியாக கிளிநொச்சிக்கு செல்ல முடியும்.

ஆனையிறவில் இருந்து படையினர் முன்னேறினால் கிளாலி வழியாக கிளிநொச்சிக்கு செல்வதைவிட, யாழ்ப்பாணத்தின் மத்திய பகுதிநோக்கி மக்கள் செல்லத் தொடங்கிவிடுவார்கள்.

அவ்வாறு சென்றால் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு மக்கள் செல்வதை அனுமதிப்பதாவிடும் என்று புலிகள் நினைக்கிறார்கள். அதனால் படையினரின் நடவடிக்கை தென்மராட்சி நோக்கி தொடரப்படும் அறிகுறிகள் தெரிந்தால் அங்குள்ள மக்களை உடனடியாக வெளியேற்றும் திட்டத்தில் இருக்கிறார்கள்.

**திரும்ப விருப்பம்**

இதேவேளை இடம் பெயர்ந்த மக்களைப் பொறுத்தவரை தமது சொந்தப்பகுதிகளுக்கு திரும்பிச் செல்வதையே பெரும்பாலானவர்கள் விரும்புகின்றனர்.

சண்டை நடக்கும்போது அங்கே வீடுகளில் இருப்பதுதான் பிரச்சனை. சண்டை ஓய்ந்தால் திரும்பச் சென்றுவிடலாம் என்றே பலரும் அபிப்பிராயப்படுகின்றனர்.

காணி நிலம், அங்கே ஒரு கிணறு, ஒரு மலசல கூடம் என்று வாழ்ந்து பழக்கப்பட்ட யாழ் குடாநாட்டு மக்களை பெருமளவில் அகதிகளாக வைத்திருப்பது புலிகள் அமைப்பினருக்கும் பல்வேறு நெருக்கடிகளை உருவாக்கும் என்று அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

'புலிகளின் குரல்' வானொலி சமீபத்தில் வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றில், கிளிநொச்சி வன்னிப்பகுதியில் விவசாய நடவடிக்கைகளுக்கு தமது பொருளாதார மேம்பாட்டு நிறுவனம் உதவிகளைச் செய்து வருவதாகவும் காணிகளை வழங்கியுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்து வந்த விவசாயிகள் கிளிநொச்சியிலும் வன்னியிலும் உள்ள தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றியுள்ளனர் என்றும் 'புலிகளின் குரல்' தெரிவித்தது.

வன்னியில் இருந்து 15 மாணவிகள் தமது இயக்கத்தில் இணைந்து கொண்டனர் என்றும் புலிகளின் குரல் தெரிவித்துள்ளது.

**பலத்த தாக்குதல்**

யாழ் நகரை நோக்கி படையினர் நெருங்கியபோது புலிகள் பலத்த பதிலடித் தாக்குதலை நடத்தியிருந்தனர்.

எனினும், புலிகள் எதிர்பார்த்திருந்த பாதைகளைத் தவிர்த்து படையினர் முன்னேறினார்கள்.

...ந்தப் பக்கத்தால் படையினர் வரப் போகிறார்கள், என்று தெரியாமல் பல முனைகளில் புலிகளின் அணிகள் பிரித்து நிறுத்தப்பட்டிருந்தன. அதனால் திட்டமிட்ட வகையில் ஒன்று குவிந்த தாக்குதலை நடத்த முடியவில்லை.

பாசையூர் அந்தோனியார் கோவில் அருகேயும், ஆரியகுளம் சந்திக்கருகிலும் பலத்த மோதல் இடம்பெற்றது.

இருதரப்பினரும் ஷெல் தாக்குதல்களை சரமாரியாக நடத்தினார்கள். பல வீடுகள் சேதமடைந்தன. கூரைகள் உடைந்து வீழ்ந்தன. மோதல் நடைபெற்ற பகுதிகளில் கூரைகள் இல்லாத வீடுகள் காணப் படுகின்றன.

கட்டிடங்கள் நிறைந்த நகர்ப்பகுதி என்பதால் புலிகளின் கெரில்லாத் தாக்குதல்களை எதிர்கொள்ள படையினருக்கு பெரும் சிரமமாக இருந்தது.

யாழ்குடாநாட்டில் சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி, ஆகிய நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. சுமார் 5 லட்சத்து 84 ஆயிரம் மக்கள் (இடம்பெயர்ந்தோர் உட்பட) இப்பகுதிகளில் இருக்கின்றனர்.

## கல்வித்திணைக்களத்தின் அலட்சியம்

## திருமலை தமிழ் பேசும் மாணவர்கள் பாதிப்பு

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை பிராந்தியக் கல்வித் திணைக்களம் மூன்றாம் தவணைப் பரீட்சை நடத்துவதற்கென சகல பாடசாலை மாணவர்களிடமும் பணம் அறவிட்டும் உரிய நேரத்தில் தமிழ் மொழி மூல மாணவர்களுக்கு உதவுவதில் அக்கறை காட்டாதது ஏன்? சிங்கள மொழி மூல மாணவர்கள் விடயத்தில் கடைப்பிடிக்கப்பட்ட கண்ணியம் தமிழ் மாணவர்கள் விடயத்தில் புறம் தள்ளப்பட்டது ஏன்? இவ்வாறான கேள்விகள் மேற்படி திணைக்களத்துக்குட்பட்ட தமிழ் மொழிக் கல்வி வட்டாரங்களில் எழுந்துள்ளன.

ஆண்டிறுதிப் பரீட்சை நடத்துவதற்கென சகல வகுப்பு மாணவர்களிடமிருந்தும் கல்வித் திணைக்களம் பணம் அறவிட்டிருந்தது. பாடசாலைகள் மூடப்பட்டதால் பரீட்சை நடத்தும் தேவை இல்லாது போய்விட்டது.

எனினும் க.பொ.த.சாதாரணதர மாணவர்களுக்கும் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களுக்கும் பரீட்சைக்குத்தயார் படுத்த இக் கேள்வித்தாள்கள் பெரிதும் பயன்படும் என ஆசிரியர்கள் அபிப்பிராயப் பட்டதைத் தொடர்ந்து சிங்கள மொழி மூலக் கேள்வித்தாள்கள் அவசர அவசரமாக அச்சிடப்பட்டு உரிய மாணவர்களுக்கு உரிய காலத்தில் விநியோகிக்கப்பட்டன.

ஆனால் தமிழ் மாணவர்கள் விடயத்தில் திணைக்களம் ஏனோ தானோ என்று நடந்துள்ளது. ஆற அமரச் சிந்தித்து நவம்பர் மாத இறுதியில் க.பொ.த. மாணவர்களுக்கு சில பாடங்களில் கேள்வித்தாள்களை வழங்க நடவடிக்கை எடுத்தது.

காலம் போதாமையால் எந்த மாணவருக்கும் இதனால் பலன் எற்படவில்லை என்று ஆசிரியர்கள் சிலர் முரசுக்கு தெரிவித்தனர்.

'ஒரு வாரத்துக்கு முன்பு இக் கேள்வித்தாள்கள் வழங்கப்பட்டிருந்தால் கூட ஓரளவாவது எம்மால் மாணவர்களுக்கு உதவியிருக்க முடியும்' என மேலும் தெரிவித்த ஆசிரியர்கள், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களது வினாத்தாள்கள் வெளிவரவேயில்லை என்றும் கவலை தெரிவித்தனர்.

சகல பரீட்சைகளையும் நடத்தப் பணம் அறவிட்டவர்களால் ஓரிரு வகுப்பு வினாத்தாள்களைக் கூட உரிய நேரத்தில் வழங்க முடியாமற் போனது ஏனோ?'

## நிவாரண நடவடிக்கையில் மோசடி

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேச சபைகள் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும்போது பிரதேச செயலாளர் களுடன் இணைந்து செயற்படுமாறு அரச அதிபர் ஏ.கே. பத்மநாதன் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களைக் கேட்டுள்ளார்.

சில அரசுசார்பற்ற நிறுவனங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலும் வேறு சில மாவட்டங்களிலும் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் போர்வையில் பல மோசடிகளைச் செய்துள்ளமை தெரியவந்துள்ளது. மாவட்ட அரசாங்க அதிபர் அல்லது பிரதேச செயலாளர்களுடன் தொடர்பு கொள்ளாது, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மக்கள் அமைப்புக்களின் ஒத்தாசையைப் பெற்று செயற்பட்டுள்ளார்கள்.

இதன் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரிசமமாக உதவிகள் கிட்டாததுடன் பிரதேச நிர்வாகத்திற்கு குந்தகம் விளைவிப்பதாகவும் உள்ளது.

எனவே எதிர்காலத்தில் அரசு சார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெறுவதற்கு பிரதேச செயலாளர்களின் ஒத்தாசையைப் பயன் படுத்துமாறும் அரச அதிபர் கேட்டுள்ளார்.

## புலிகள் இயக்க உறுப்பினர் கைது

## "தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கையல்ல"

கனடாவில் புலிகள் இயக்க நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருந்த மாணிக்கவாசகம் சுரேஸ் என்பவர் கனடா பொலிசாரால் கைது செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே.

மாணிக்கவாசகம் சுரேஸை விடுதலை செய்யுமாறு கோரி கனடாவில் உள்ள தமிழ் அமைப்புக்களது சம்மேளனம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது. அந்த ஆர்ப்பாட்டம் கனடாவில் ரொரன்ரோவில் உள்ள குடிவரவு அமைச்சின் இணைப்பு பணிமனை முன்பாக நடைபெற்றது.

கனடாவின் குடிவரவுக்கான மத்திய அமைச்சர் சேர்ஜியோ மார்ச்சியையும் தமிழ் அமைப்புக்களின் சம்மேளன உறுப்பினர்கள் சந்தித்தும் பேச்சு நடத்தினார்கள்.

மாணிக்கவாசகம் சுரேஸை விடுதலை செய்யவேண்டும் என்று சம்மேளனப் பிரதிநிதிகள் வலியுறுத்தினார்கள். அதற்கு பதிலளித்த அமைச்சர் மார்ச்சி, கனடிய உளவுத்துறையின் அறிக்கைகளின்படியே தான் நடந்துகொண்டதாக தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கும் போது, சுரேசுக்கு எதிரான பாதுகாப்புப் பத்திரத்தில் தான் கைச்சாத்திட்டது தமிழ்ச் சமூகத்துக்கு எதிரான நடவடிக்கை என்று கருதக்கூடாது என்றும் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டார்.

சுரேசுக்கு எதிரான நடவடிக்கை தமிழருக்கு எதிரான நடவடிக்கை என்ற தவறான அபிப்பிராயத்தை நீக்குவதற்கு தான் விரும்புவதாகவும் அவர் கூறினார்.

"சுரேஸ் விவகாரம் தற்போது நீதிமன்றத்தின் முன்பாக இருக்கிறது. நீதிமன்றத்தின் தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்வேன்.

அரசியல்வாதி என்ற வகையில் எனக்கெதிராக கடந்தகாலங்களிலும் பல ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. வருங்காலத்திலும் நடக்கக்கூடும். ஆர்ப்பாட்டம் செய்யும் சுதந்திரம் கனடிய மக்களுக்கு இருக்கிறது" என்றும் அமைச்சர் மார்ச்சி தெரிவித்தார்.

இலங்கை அரசை கவிழ்க்க சதி செய்தார் என்பதே மாணிக்கவாசகம் சுரேஸ் மீது சுமத்தப்பட்டுள்ள முக்கிய குற்றச்சாட்டாகும்.

## திட்டம் வருமுன் சட்டம் அமுல்!

## மட்டு.-கடைத் தொழிலாளர்களுக்கு லீவு!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு வர்த்தகர் சங்கத்தால் எற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படியும் தொழிற்சங்க ஆணையாளரின் அறிவுறுத்தலின் படியும் பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும் நகரிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடி தொழிலாளர்களுக்கு லீவு வழங்க வேண்டும். எனினும் இத்தீர்மானத்தை மீறி வர்த்தகர் சங்கத் தலைவர், செயலாளர் உட்பட பலர் கடைகளைத் திறந்தனர்.

இதனால் இதனை எதிர்க்கும் ஏனைய வர்த்தகர்கள் இவர்களுக்கெதிராகத் தீர்மானமெடுக்கும் இரகசிய கையெழுத்து வேட்டையில் இறங்கியபோது விசயம் கசிந்துவிடவே தலைவரும் செயலாளரும் முந்திக் கொண்டு 26.11.95 தொடக்கம் பிரதி ஞாயிறு தோறும் கடைகளையும், வர்த்தக நிலையங்களையும் மூடி கண்டிப்பாக தொழிலாளர்களுக்கு லீவு வழங்கக் கேட்டுக் கொள்ளுவதாக துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டு விட்டனர்.

"கலகம் பிறந்தால்தான் வழி பிறக்கும்" என்கிறார்கள் கடைத் தொழிலாளர்கள். "ஊருக்கல்ல உபதேசம்-உனக்கு" என்கிறார்கள் எதிர்த்து கையெழுத்துச் சேர்த்த ஏனைய வர்த்தகர்கள்.

எவ்வாறாயினும் இத் தீர்மானம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டால் மட்டக்களப்பு நகரிலுள்ள பல நூற்றுக்கணக்கான தொழிலாளர் நன்மை பெறுவது நிச்சயம்.

## தலைநகரில் சந்தேகப் பார்வைகள்

## காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலும் துருவல்

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கொழும்பு அலுவலகத்திற்கு சென்ற தமிழர் ஒருவர் பல சங்கடங்களை எதிர்நோக்கவேண்டி இருந்தது. இத்தனைக்கும் அவர் ஒரு காப்புறுதிக் கூட்டுத்தாபன வாடிக்கையாளர்.

அடையாள அட்டையை பார்வையிட்ட பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு தமிழ் பெயர் என்றவுடன் சந்தேகம் வந்துவிட்டது. துருவித் துருவி விசாரித்தார். அப்படியும் சந்தேகம் தீராமல் உள்ளே போய் சில அதிகாரிகளோடு குசு குசுத்தார்.

உள்ளேயிருந்து வந்த அதிகாரிகளும் தமது பங்குக்கு கேள்விகளைத் தொடுத்தனர்.

"அடையாள அட்டையை பார்த்து, உடல் பரிசோதனை செய்துதானே உள்ளே அனுமதிக்கிறீர்கள். பின்னர் எதற்காக இத்தனை விசாரணை" என்று அந்த வாடிக்கையாளர் ஆட்சேபம் தெரிவித்தாராம்.

கொழும்பில் பல அரச அலுவலகங்களில் இவ்வாறான சந்தேகப்பார்வைகள் சகஜமாகி வருவதாகவும், அதனால் அலுவல்கள் நிமித்தமாகச் செல்வதற்கே தயங்க வேண்டியிருப்பதாகவும் பலரும் குறைபட்டுக் கொள்கின்றனர்.

சமீபத்தில் கொழும்பு அரசாங்க பொது மருத்துவமனையில் தனது நண்பர் ஒருவரைப் பார்வையிடச் சென்ற தமிழ் இளைஞர் ஒருவர் வாயில் காவலரால் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அந்த இளைஞர் பல தடவை தனது நண்பரைப் பார்வையிடச் சென்று வந்திருக்கிறார். அது தெரிந்தும் வாயில் காவலர் அவ்வாறு நடந்து கொண்டிருக்கிறார்.

## மின் கம்பத் தண்டனை!

ஏறாவூர்ப் பகுதியில் ஐயன்கேணி, மாவடிவெம்பு ஆகிய கிராமங்களில் ரி.அரியரெத்தினம் (19), எஸ்.சோதிநாதன் (21) ஆகியோருக்குப் புலிகள் மின் கம்ப மரண தண்டனை வழங்கியுள்ளனர். இவர்கள் முன்னர் புலிகள் இயக்கத்தில் நிதி சேகரிப்பாளர்களாக இருந்ததாகவும், பின்னர் இயக்கத்தை விட்டு விலகி கொள்ளை, கொலைச் சம்பவங்களில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மறைந்திருந்த மக்கள்

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் செட்டித் தெருவில் 150க்கு மேற்பட்ட மக்கள் ஒரு வளவுக்குள் மறைந்திருந்தனர்.

புலிகள் அமைப்பினர் அவர்களை வெளியேறுமாறு சொன்னபோது, அதற்கு உடன்பட்டு வெளியேறுவது போல மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக் கொண்டு பின்வளவுக்குள் சென்று மறைந்துகொண்டார்கள்.

வீடுகளுக்குள் வந்து பார்த்துவிட்டு யாரும் இல்லை என்று நினைத்துக் கொண்டு புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் சென்றுவிட்டனர்.

படையினர் நல்லூர் பகுதிக்குச் சென்ற போது மறைந்திருந்த மக்கள் வெளியே வந்தனர். அவர்கள் தெருவில் வந்து கொண்டிருப்பதை கண்ட படையினருக்கு அவர்கள் புலிகளாக இருக்கலாமோ அல்லது புலிகளது ஏதாவது தந்திரமோ என்று சந்தேகம் வந்துவிட்டது. எனவே நிலை எடுத்து தாக்குதலை எதிர்கொள்ளும் தயார் நிலையில் நின்றனர். அப்போது மக்கள் அபயக் குரல் எழுப்பினார்கள்.

அதன்பின்னர் அவர்களை அழைத்து விசாரித்துவிட்டு தங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டது.

## மலையக இளைஞர்–யுவதிகள் கைது

## இரண்டு அமைச்சர்களும் மனக் கசப்பு

கொழும்பிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகளில் மலையகப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களும், யுவதிகளும் பெருமளவில் கைது செய்யப்படுகின்றனர்.

அவர்கள் வேலை செய்யும் நிறுவனங்களது அத்தாட்சிகள், கொழும்பில் தங்கியிருக்கும் சரியான காரணங்கள் காட்டப்பட்டாலும் கூட விடுதலை செய்யப்படுவதில் தாமதங்கள் ஏற்பட்டு வருகின்றன.

இ.தொ.கா. தலைவர் திரு.தொண்டமான், மலையக மக்கள் முன்னணித் தலைவர் திரு.சந்திரசேகரன் இருவரும் அமைச்சரவையில் இருக்கின்றனர். ஆயினும்கூட கைது நடவடிக்கைகள் தொடர்பான அவர்களது சிபாரிசுகள் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்ற குறை நிலவுகிறது.

இது தொடர்பாக அவர்கள் இருவருமே அதிருப்தியோடு இருப்பதாகத் தெரிகிறது.

அடையாள அட்டைப் பிரச்சனை மலையக இளைஞர் யுவதிகளுக்கு பெரும் பிரச்னையாக இருக்கிறது. தலைநகரில் பணியாற்றும் மலையக இளைஞர் யுவதிகளுக்கு விசேஷ அடையாள அட்டை வழங்கப்பட்டால் பிரச்சனை ஓரளவு குறையும் என்று மலையக மக்கள் முன்னணித் தலைவரும், பிரதி அமைச்சருமான சந்திரசேகரன் கூறிவருகிறார்.

## "இராணுவத்தினர் பக்குவமாக நடக்கின்றனர்"

## கூட்டணித் தலைவர் சிவா புகழாரம்

"யாழ் குடாநாட்டில் இராணுவத்தினர் இம்முறை நிதானமாகவும், பக்குவமாகவும் தமது நடவடிக்கைகளைத் தொடர்ந்து வருகின்றனர்." இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு.மு.சிவசிதம்பரம் வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இந்த விடயத்தை முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் அசித்த பெரேரா பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார். பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்த கொண்டு உரையாற்றும் போதே அவர் அதனைத் தெரிவித்தார். அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணி பா.உக்களான திரு. ஜோசப் பரராஜசிங்கம், திரு.தங்கத்துரை ஆகியோரும் அவரது உரையை செவிமடுத்துக் கொண்டிருந்தனர்.

## புலிகளால் சாய்க்கப்பட்ட மின் கம்பங்கள்

மட்டக்களப்பு-சந்திவெளியில் 33000 வோல்டேஜ் அதிவலு கொண்ட 15 மின்சார மரக் கம்பங்களை புலிகள் சென்ற 3.12.95 இரவு வெட்டி வீழ்த்தியுள்ளனர். அப்பகுதிக்கு திருத்த வேலைக்காக சென்ற மின்சாரப் பகுதி ஊழியர்களை புலிகள், திருத்தத்தில் ஈடுபடவோ புதிய கம்பங்களை நடவோ வேண்டாம் என்றும் அவ்வாறு செய்ய முயற்சித்தால் அவர்களுக்கு ஆபத்து வரும் எனவும் எச்சரித்ததாகத் தெரிவிக்கப் படுகிறது. மின்சாரக் கம்பங்கள் தறித்து வீழ்த்தப்பட்டதால் தன்னாமுனை தொடக்கம் வாழைச்சேனை வரையான 15 மைல் பிரதேசம் இருளில் மூழ்கியுள்ளது. க.பொ.த. (சா/த) பரீட்சையை மாணவர்கள் எழுதும் வேளையில் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# கொச்சிக்காப் போடியார்–எழுதுகிறார்



அய்யாத்துர அண்ண,

எல்லாம் ஒரு மாதிரி மூசாந்த போலதான் கிடக்கு. பள்ளியள மூடிப் போட்ட புறகு, வானமும் ஒருக்கா விடியாமத்தான் கிடக்கு. மாரிமழ வாற காலந் தானே அண்ண. முகத்துவாரமும் வெட்டிப் போட்டானுகள். ஆத்தில, குளத்தில, பள்ளப்பகுதியில ஒள்ளுப்பம் எண்டா தண்ணிபுடிக்கிற இடமெல்லாம் ஒருக்கா வழிஞ்சி போய்க்கிடந்த தண்ணி ஓடிப் பறிஞ்சித்து கடலோட.

அண்ண, கையும் வருகுதில்ல, காலும் வருகுதில்ல. எப்பம் எட்டிப் போட்டு நடந்து பாப்பம் எண்டா, முன்னத்த காலம் பேரலயா கிடக்கு. ஊரில 'நேச்சர்' நல்லதில்ல எண்டத்தால-என்ன செய்யிறது எண்டு தெரியாம கிடக்கன்.

கண்ட, நிண்டத எல்லாம் எழுதிப் போட்டு கைகட்டி நிக்கிறதையும் பாக்க சும்மா, நம்மட பாட்டோட கிடந்த தெண்டா-நல்லன் போல. சனத்தோட, ஒண்டடி மண்டடியா கிடந்தித்து- ஊர் ஓடினா ஒக்க ஓடுற, இல்லாட்டி ஒருவர் ஓடினா கேட்டுக் கேட்டு ஓடுற எண்டு சீவித்துப் போவம்.

அய்யாத்துர அண்ண, யாழ்ப் பாணத்தால நம்மட சனமும் சிலதுகள் தட்டுப்பட்டு நம்மட ஊருக்கு வந்திருக் குதுகள். படாதபாடு பட்டு வந்திருக் குதுகள். பட்டிருக்கிற கயிட்டமெண்டா அது காதால கேக்கொண்ணா. எங்கட ஊரில இருந்து-வவுனியாவுக்கு வசி போய் வாறத்தால சனமும் சில தப்பித் தவறி வருகுதுகள்.

நம்மட சாதிக்கு புடிச்ச கேடு எப்ப அண்ண போகும்? சாமியே தம்பிரானே எண்டு- கோயில் குளத்தில கும்பிடுறத-தவிர வேறென்ன .நாம செய்ய முடியும்!

ஒரு வழியாலும் புழைப்புக் கிழைப்ப நடத்த முடியாம கிடக்கிற வேலதான் வந்திரிக்கி. மாரி மழைக்குள்ள கொத்திக் கித்திப் போட்டு பய்த்த பயிர எறிவமெண்டா- ஆத்துக்கு அங்கால போகயும் பயமா கிடக்கு.

அண்ண! ஆருக்கு ஆரு அண்ண பயப்பிடுற? சும்மா எல்லாத்தையும் தூக்கி எறிஞ்சி போட்டு, இவ்விடத்தால கடவப் படுவம் எண்டாலும் பொஞ்சாதி உடுறா வில்ல. நம்மட ஊரப்போல வாய்க்குமா எண்டு ஒரே அடியா கேக்கிறா. நாம புறந்து, தவண்டு சீவிச்ச மண்ண மறக்கலாமா அண்ண?

கரிச்சான் போடியாரும்-டவுணுக்கு வந்தவரு-மாரால வடிச்சிப் போறாரு. மனுஷன் குளறுறத நித்தாட்டயும் முடியாம போயித்து. குளறு, குளறு எண்டு குளறுனாரு.

என்ன போடியாரு- இவ்வளவு கக்கிசம் எடுத்து குளறுறயள் எண்டு கேட்ட நான். சொன்னா நம்பமாட்டியள் அண்ண- பேயறஞ்ச மனுஷன் மாதிரி இரிக்காரு. போட்டுக் குடுத்த தேத்தண்ணிக் கோப்பய மடமட என்று ஒரு துளியும், கோப்பைக்க வைக்காம இழுத்துப் போட்டு, சாலுவைய உதறித்து நடந்தித்தாரு.

"மறுகா- நான் வந்தா கண்டுக்க"- எண்டு சொல்லித்துப் போறாரு. மனுஷன் சொன்னத்திலயும் விஷயம் இருக்குது அண்ண. இப்ப றோட்டால நடக்கிறதும் நிச்சயமில்ல.

கரிச்சான் போடியாரும் நல்லா சவுத்துப் போனாரு, வாழைச்சேனை வெலிக்கந்த- பக்கத்தில வெள்ளப்பட்டிமாடு. இஞ்சால புழுகுநாவி கண்டத்தில எருமை மாட்டுப் பட்டி, இஞ்சால பொத்துவில், அக்கரப் பத்துப் பாரிய சிவத்தமாட்டுப் பட்டி. நம்மட ஆக்களுக்கு என்ன அண்ண குறைச்சல். இதுதானே அண்ண சொத்து. இப்ப எண்டா மாடு பாக்கிறதுமில்ல; கண்டு பாக்கிறதுமில்ல.

காடு கரம்பயெல்லாம் துவக்கும் ஆக்களுமெண்டா எப்பிடி அண்ண பட்டி கீட்டிற? மாடும் வேணாம். கண்டும் வேணாம். பட்டியும் வேணாம். தயிரும் வேணாம். உசிரு மட்டும் இந்தக் கூட்டுக்க கிடந்தா போதும். புறகு ஆதன, பாதனத்த தேடிப் போடலாம் எண்டு சொல்லித்துப் போறாரு.

இல்லாட்டி,முதல் கிதல் கரிச்சான் போடியார் ஊட்ட வாறாரெண்டு விசளம் கிடைச்சா தயிர் முட்டி என்ன, புதிர் கோட்டையென்ன, வாழப்பழக்குலை என்ன. பூசி மினிக்கி இல்லா வந்து போவாரு. என்ன சந்தோஷம் எண்டு தெரியுமா? இப்ப எண்டா எல்லாம் நல்லா சவுத்துப் போச்சி.

"அடுத்த பயணம் வந்தா கண்டுக்க" எண்டு சொல்லித்துப் போறாரு. "வராம எங்க போறகா-போடியாரே. சும்மா அந்த இந்தக் கதைய கதைக்காம- வந்தித்துப் போடவுனுக்குள்ள" எண்டு சொல்லி அனுப் பியிருக்கன்.

# காட்டூண் மூலை




வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்களுக்கு எதிராக தென்னிலங்கையில் கடுமையான எதிர்ப் பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு நீங்கள் காண்பது 'லங்காதீப' பத்திரிகையில் வெளியான காட்டூண்.

# தொட்டால் விழும் தூண்!

## விளையாட்டாக அமைந்த சிறுவர் பூங்கா!

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர் நகரபிரதேச சபையினால் பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்கா சிறுவர் விளையாட்டிற்கு உதவாத நிலையில் நிருமாணிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இப்பூங்காவில் கட்டப் பட்டிருந்த ஒரு தூண் தானாக வீழ்ந்து விட்டது. அங்கு அமைக்கப்பட்டிருக்கும் அனைத்து வேலைகளும் ஏனோ தானோ என்ற நோக்கில் செய்து முடிக்கப் பட்டுள்ளன. சிறுவர்கள் தம் விருப்பப்படி விளையாட இப்பூங்கா செய்து முடிக்கப் பட்டுள்ள விதம் உறுதியானதாக இல்லை; அவை தாக்குப் பிடிக்கமாட்டா என்று தெரியவருகிறது. இத்தனைக்கும் இத்திட்ட அமைப்பிற்குப் பொறுப்பான தொழி னுட்ப உத்தியோகத்தரின் அசமந்தப் போக்கே காரணம் என்று இப்பிரதேச சபையின் உப தலைவர் தெரிவித்தார்.

# நியமனம் கோரி நெருக்கடி

## அரசியல்வாதிகள்பாடு திண்டாட்டம்

(கண்டி நிருபர்)

புதிதாக நியமிக்கப்பட இருக்கும் 5000 தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் நியமனம் தொடர்பாக விண்ணப்பித்த வர்களின் நெருக்குதல் காரணமாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு சார்பான அரசியல் வாதிகளுக்கும் பெரும் சிரமம் ஏற்படத் தொடங்கிவிட்டது.

1977 ஆம் ஆண்டு தொடக்கம் அரசாங்கத்தின் ஊடாகப் பழிவாங் கப்பட்டவர்கள் வயது போய்விட்டாலும் மற்றும் இன்றைய அரசாங்கத்தின் ஆதரவாளர்களாலும் அந்த நெருக்குதல் ஆரம்பித்துவிட்டது.

அரசு சார்பான அரசியல் வாதிகளை அவர்களது அலுவலகங்களில் சந்திக்கும் இளைஞர்களும் யுவதிகளும் அவர்களின் பெற்றோர்களும் தமது பிள்ளைக்கு ஆசிரியர் சேவையைப் பெற்றுத் தருமாறு ஒற்றைக் காலில் நிற்பதைக் காணமுடிகின்றது. இந்த நெருக்குதல் அரசியல் வாதிகளுக்குப் பெரும் தலையிடியையும் ஏற்படுத்தி வருவதாக கூறப்படுகின்றது.

ஆசிரியர் தெரிவு போட்டிப் பரீட்சை ஒன்றின் மூலமாகவே நடைபெற உள்ளது. திறமை அடிப்படையில் நியமனம் வழங்கினால் நீண்டகாலமாகப் பாதிக்கப்பட்டு வந்த வயது சென்ற தமது பிள்ளைகளின் கதி என்னவாகும் எனவும் பெற்றோர் குரல் எழுப்புகின்றனர்.

பரீட்சையே இன்னும் நடைபெறாமல் இருக்கும் இவ்வேளையில் ஆசிரியர் நியமனத்தைப் பற்றி இப்பொழுது பிரஸ்தாபிப்பதில் என்ன பயன் உண்டு என அரசியல் வாதிகள் தம்மைச் சந்திக்கவருவோரைச் சாந்தப்படுத்துகிறார்களாம். ஆசிரியர் நியமனத்திற்குரிய வயதெல்லை 18-45 வரை அதிகரிக்கப்பட்டிருப்பதும் இந்த நெருக்குதலுக்கு ஒரு காரணம் எனவும் கூறப் படுகின்றது.

# ஏன் இந்த அவலம்?

(கண்டி நிருபர்)

ஹரிஸ்பத்துவ தொகுதியில் அடிக்கடி நிலவும் மின் விநியோகத் தடை காரணமாக பாவனையாளர்கள் பெரும் அதிருப்திக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அடிக்கடி மின்துண்டிப்பு நிகழ்வதால் தொலைக்காட்சி, வானொலி பாவனையாளர்கள் பல சிரமங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர். கட்டுகஸ்தோட்டை, குலுகம்மன, உகுரஸ்ஸபிட்டிய, இனிகலை, செனரத்கம, நுகவெல, படல்கும்புரை, அலதெனிய, யட்டிவாவல, குருந்துகொல்லை போன்ற கிராமங்களும் இதனால் தொடர்ந்து பாதிக்கப்பட்டுவருகின்றன.

# நிவாரண சேகரிப்பு

(காரைதீவு நிருபர்)

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாகியிருக்கும் மக்களுக்கு உதவவென அம்பாறை மாவட்டமெங்கும் 'புளொட்' அமைப்பினர் நிவாரணப் பொருட்களை சேகரித்துவருகின்றனர். மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட 'புளொட்' அமைப்பாளர் ராஜுமாமா இதனை நடைமுறைப்படுத்தி வருகின்றார்.


## தேவை

கொழும்பிலுள்ள பிரபல நிறுவனமொன்றிற்கு நன்கு அனுபவம் வாய்ந்த கணக்கியல் எழுது வினைஞர்கள் தேவை.

பொது அறிவு, தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சில் அனுபவம் உள்ளோர் விரும்பப்படுவர். தகுந்த ஆவணங்களுடன் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மே/பா தினமுரசு வாரமலர், த.பெ.இல:1772, கொழும்பு.

கொழும்பில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றிற்கு தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கு கட்டுரைகள் நூல்கள் என்வற்றை மொழிபெயர்க்கும் திறமையுடையவர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

விளம்பர இல: T95, மே/பா தினமுரசு வாரமலர் த.பெ.இல.1772 கொழும்பு.

## விளம்பரப் பகுதி

### BRIGHT ன் முன்னோடி பயிற்சி நெறிகள்

★ 1996 ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கு வெற்றிக்கனி இதழ் 7 முதல் 16 வரை நூல்கள் மூலம் தபால் மூலம் போதிக்கப்படும். விலை 50/-

★ 1996 - டிசெம்பர் க.பொ.த (சாதாரணதர) மாணவர்களுக்கு முன்னோடி பயிற்சி இதழாக "BRIGHTன் கல்வி மஞ்சரி" இதழ் 1 முதல் இதழ் 10 வரை. விஞ்ஞானம், கணிதம், வரலாறு, சமூகக்கல்வி, தமிழ் மொழியும் இலக்கியமும், வர்த்தகமும் கணக்கியலும், ஆங்கிலம் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய வினா விடை நூல் விலை 100/-

★ ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரை கல்வி பயிலும் மாணவர்களுக்காக மாதாந்தம் வெளிவருகிறது.

"EFFECTIVE ENGLISH WITH GRAMMAR"

செயல்திறனுடைய ஆங்கில இலக்கணம்

மேலதிக விபரங்களுக்கு முத்திரையிடப்பட்ட தபாலுறையுடன் கீழ்காணும் விண்ணப்ப படிவத்தை இணைத்து அனுப்புக.

விரும்பும் பாடநெறி :....................

பெயர் :....................

விலாசம் :....................

Bright Future in Your hand

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S - 27, FIRST FLOOR, P. O. BOX 162
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,
COLOMBO - 11. (T.P. 434770)

### தபால் மூலம் வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

G.A.Q., B.A., B. Com., B.B.A.
G.S.Q. B.Sc (Bio & Stats)

### புதிய மாணவர்கள் அனுமதி - 1996

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் மேற்படி பட்டங்களை வீட்டிலிருந்தவாறே படித்துப் பட்டம் பெறுவதற்கான எமது தபால் மூலம் பட்டப்படிப்புகள் பயிற்சித் திட்டத்திற்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

இப்பாடநெறிகள் பற்றிய முழுவிபரங்கள் அடங்கிய கையேட்டின் விலை ரூபா 50/-. Kotahena தபாற் கந்தோரில் பணம் பெறக்கூடியவாறு, Registrar, External Studies Academy என்ற பெயருக்கு பெற்ற ரூபா 50/- இற்கான மணியோடரையும் இரண்டு ரூபா முத்திரை ஒட்டப்பட்ட, சுயமுகவரி எழுதப்பட்ட நீள கடிதவுறையையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைத்து தபால் மூலமும் அல்லது நேரில் 50/- செலுத்தியும் கையேட்டையும், விண்ணப்பப்படிவத்தையும் பெற்றுக் கொள்ளவாம்,

முக்கிய குறிப்பு:- விண்ணப்ப முடிவு திகதி 1995 டிசம்பர் 31 ஆம் திகதியாகும். இத்திகதிக்குள் எமது நிலையத்தில் தம்மைப் பதிவு செய்யும் மாணவர்களுக்கு பல்கலைக் கழகங்களில் வெளிவாரி மாணவராகப் பதிவு செய்வதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

EXTERNAL STUDIES ACADEMY
P.O.Box: 660, No. 32, 3rd Floor,
Colombo Central Super Market,
Reclamation Road, Colombo-11.

### சுவிட்சர்லாந்தில் ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சிக்கு மாணவர்கள் தேவை

இன்று வரை பதிவு செய்யாத மாணவர்களுக்கு

சுவிட்சர்லாந்தின் சுவிஸ் ஹோட்டல் முகாமைத்துவ பாடசாலையில் மூன்று ஆண்டு ஹோட்டல் முகாமைத்துவ டிப்ளோமா கற்கையை மேற்கொள்வதற்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து ஏற்கப்படுகின்றன.

தகைமை : க.பொ.த. (சா/த) மற்றும் அதற்கும் மேற்பட்ட தராதரம் 17 வயதுக்கு மேற்பட்டிருப்பதோடு ஆங்கில மொழியில் நல்ல தேர்ச்சி இருக்க வேண்டும்.

ஒவ்வொரு கல்வியாண்டும் ஐந்து மாத வகுப்பறைக் கல்வியும் ஏழுமாத நடைமுறைப் பயிற்சியும் உள்ளடக்கப்பட்டதாக இருக்கும்.

நடைமுறைப் பயிற்சிக் காலத்தின்போது மாதாந்தம் எஸ்.எப்.ஆர். 2,000 முதல் 2,500 வரை படியாக வழங்கப்படும். ஆண்டுக்கு எஸ்.எப்.ஆர். 10,000 வரை (இலங்கை நாணயப்படி சுமார் ரூ. 430000 ) சேமிக்கலாம்.

சுவிஸ் ஹோட்டல் முகாமைத்துவ பாடசாலையின் இலங்கை பிரதிநிதியை மாணவர்களும் பெற்றோரும் 1995 மார்கழி மாதம் 10ஆம் திகதியிலிருந்து சந்தித்து சுவிட்சர்லாந்தில் ஹோட்டல் முகாமைத்துவ கற்கை பற்றிய மேல் விவரங்களையும் தேவையான விண்ணப்பப்படிவங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

தழுவத்த அண்ட் ஜெப்பே அசோசியேட்ஸ்,
LG 15, பீப்பிள்ஸ் பாக் சொப்பிங் கொம்பிளெக்ஸ்
கொழும்பு - 11.
தொ. பே. 320139
(குணசிங்கபுர தனியார் பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள கட்டிடம்)

### முத்து

தாய்க்குலத்தின் அமோக ஆதரவுடன்!




காணத்தவறாதீர்கள்! நவம்பர் 10 முதல்
ஜெஸ்மா—கிரான்ட்பாஸ், ஈரோஸ்—பாமன்கடை
திரையரங்குகளில் அரங்கம் நிறைந்த காட்சிகளாக வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

### வாசகர் கவனிக்க

முரசுடன் உங்கள் சகல கடிதத் தொடர்புகளுக்கும் ஆக்கங்கள் அனுப்பிவைக்கவும் பின்வரும் முகவரி மட்டுமே குறிப்பிடுங்கள்:

தினமுரசு வாரமலர்
த. பெ. இல. 1772
கொழும்பு.




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# புலிகளின் கணிப்பில் ஒரு தவறு

சம்பத்தில் ஆறு இராணுவவீரர்களை புலிகள் விடுதலை செய்தபோது அந்த நடவடிக்கைக்கு முன்னர் போல பாராட்டுக்கள் குவிந்துவிடவில்லை.

மாறாக, சந்தேகப்பார்வைகள்தான் எழுந்தன. போர் நிறுத்தக் காலகட்டத்தில் கூட தம்மிடம் கைதிகளாகவுள்ள படையினர் அனைவரையும் விடுதலை செய்ய புலிகள் முன்வரவில்லை.

பொருளாதார தடையை முற்றாக நீக்கினால்தான் மீதியுள்ளவர்களை விடுதலை செய்வோம் என்று புலிகள் திட்டவட்டமாகக் கூறியிருந்தனர்.

பொருளாதார தடையை அரசு சற்றுத் தளர்த்தியிருந்த போதும் புலிகள் முற்று முழுதான தடை விலக்கலை கோரியிருந்தனர்.

தற்போது, பொருளாதாரத் தடை மட்டுமல்ல, இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாகி, தமது தளப்பிரதேசமும் பறிபோயுள்ள நிலையில் தாமாகவே முன்வந்து ஆறு இராணுவத்தினரை புலிகள் விடுதலை செய்துள்ளனர்.

போர் நடைபெறும்போது போர்க் கைதிகளை விடுதலை செய்வது வழக்கமான நடைமுறையல்ல.

போரில் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கும் தரப்பு தனது எதிர்த்தரப்பின் வீரர்களை விடுதலை செய்யுமானால் அதனை பெருந்தன்மை என்று சொல்லிக் கொள்ளலாம்.

ஆனால், தற்போதைய வடபுலச் சமரில் புலிகள் பின்வாங்கும் கட்டத்தில் இருக்கிறார்கள். அடுத்துவரும் கட்டங்கள் எப்படியிருந்தாலும், தற்போதைய கட்டத்தில் படைத்தரப்பின் பலமே மேலோங்கியிருக்கிறது.

எனவே-இக் கட்டத்தில் படையினரின் ஆறு பேரை புலிகள் விடுதலை செய்ததை பலவீனத்தின் வெளிப்பாடாகவே படைத்தரப்பால் கணிக்கப்பட்டுவிட்டது.

இது புலிகளுக்கு எதிரான போரல்ல. தமிழர்களுக்கு எதிரான போர். இராணுவம் இன ஒழிப்பில் ஈடுபடுகிறது என்று தனது மாவீரர்தினச் செய்தியில் பிரபாகரன் கூறியிருந்தார்.

அப்படி கூறிவிட்டு இராணுவத்தினரில் ஆறுபேரை விடுதலை செய்ய வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதே சந்தேகங்களுக்கு காரணமாகி விட்டது.

அந்த சந்தேகங்களால் புலிகள் எதிர்பார்த்த பலன் கிடைக்காமல் போய் விட்டது.

படையினர் வடபுலப் போரில் முன்னேறிச் செல்வதற்கு முன்னர் புலிகள் இப்படி ஒரு நடவடிக்கையை எடுத்திருந்தால், அதற்கு கணிசமான வரவேற்புக் கிடைத்திருக்கும்.

எந்தவொரு நடவடிக்கையும் அது செய்யப்படும் காலகட்டத்தைப் பொறுத்தே மதிப்பிடப்படுகிறது.

உண்மையில் புலிகள் சற்றுக் குழம்பித்தான் போயிருக்கிறார்கள்.

அதற்கு முக்கிய காரணம் இராணுவ ரீதியிலானது அல்ல. யாழ் குடாநாட்டில் தமக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவு பற்றி கவலைப்படுவதைவிட, வெளியுலக அபிப்பிராயம் தமக்கு சாதகமாக இல்லாதிருப்பதே புலிகளுக்குள்ள முக்கிய பிரச்சனையாக இருக்கிறது.

யாழ்-குடாநாட்டில் படையினர் முன்னேறிச் சென்று கொண்டிருந்தபோது கிழக்கு மாகாணத்தில் இருந்த புலிகளின் அணிகள் சற்று நிதானம் இழந்து போயினர்.

சிங்கள கிராமவாசிகள்மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

சிங்கள கிராமங்களை தாக்கினால் படையினர் அங்கு அனுப்பப்படுவார்கள். அத தவிர, அரசுக்கும் நெருக்கடி ஏற்படும். எனவே, வடபுலத்தில் தனது படை நடவடிக்கைகளை அரசு தணித்துக் கொள்ளும் என்றெல்லாம் புலிகள் கருதினார்கள்.

ஆனால், இது மிகப் பழைய தந்திரம். இப்படித்தான் புலிகள் செய்வார்கள் என்று அரசாங்கம் நம்பகமாக எதிர்பார்த்திருந்த தந்திரம்.

எனவே-சிங்கள கிராமவாசிகள் மீதான தாக்குதலை அரசு புத்திசாலித்தனமாகக் கையாண்டது. படுகொலைச் செய்திகளையும், புகைப்படங்களையும் வெளியுலகின் முன்பாகக் காட்டி புலிகளுக்கு எதிரான பிரசாரமாக மாற்றிக்கொண்டது.

பொல்லைக்கொடுத்து அடிவாங்கிய கதையாக புலிகளின் நிலை மாறிப்போனது.

கொழும்பில் மக்கள் கூட்டத்தின் நடுவில் கரும்புலி ஒருவர் மனிதக் குண்டாக வெடித்ததும் வெளியுலகில் புலிகள் மீதான அபிப்பிராயத்தில் விழுந்த மற்றொரு அடியாக அமைந்தது.

நிதானமாக யோசித்திருந்தால் புலிகள் மேற்கண்ட நடவடிக்கைகளை தவிர்த்திருக்கலாம்.

வடபுலப் போரில் பொதுமக்களுக்கு பாரிய இழப்புக்கள் ஏற்படுவதாக வெளிநாடுகளில் புலிகள் கிளைகளின் பிரசாரங்கள் முடுக்கிவிடப்பட்டன.

அந்த நேரம் பார்த்து சாதாரண சிங்கள மக்களை புலிகள் தாக்கிவிட, அதனை அரசாங்கமும் சாட்சியாக கொண்டு புலிகள் மோசம் என்ற அபிப்பிராயத்தை உருவாக்கிவிட்டது.

முன்னைய அரசாங்கத்தைவிட, தற்போதைய அரசாங்கம் வெளியுலகில் நன்கு திட்டமிட்ட பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறது.

பிரேமதாசா நாட்டைவிட்டு வெளியே செல்வதே அரிதாக இருந்தது. அதுபோல வெளியுலகில் நம் நாட்டுப் பிரச்சனை பற்றி அதிகம் பேசிக்கொள்வதில் ஐ.தே. கட்சி அரசாங்கம் அக்கறை காட்டவில்லை.

அப்போது வெளியுலகப் பிரசாரத்தில் புலிகளே வெளுத்துக் கட்டிக்கொண்டிருந்தார்கள்.

குறிப்பாக, இலண்டனிலும், சுவிற்சர்லாந்திலும் கிட்டு சகல சமூகப்பான பிரசாரங்களையும் ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருந்தார்.

ஆனால், இப்போது நிலவரம் தலைகீழாக மாறியிருக்கிறது.

சந்திரிக்காவின் சாந்தமான புன்னகையும், சமாதானக் கோஷமும் வெளியுலக அனுதாபத்தை தேவையான அளவுக்கு அறுவடை செய்துவிட்டன.

பிரதமராக சந்திரிக்கா பதவியேற்ற போதே புலிகளுக்கு ஒரு தலைவலி ஆரம்பித்திருந்தது.

போர் என்றால் போர் என்று பிடிவாதமாகப் பேசும் அரசாங்கத் தலைவரோடு பிரச்சனை இல்லை.

'நாம் என்ன செய்வது, வேறு வழியில்லையே' என்று சொல்லிக்கொண்டே புலிகள் போரைத் தொடரலாம்.

விஜயதுங்கா ஜனாதிபதியாக இருந்த போது அதனை ஒரு பொறிகளாக என்றே புலிகள் நினைக்கக் கூடியதாக இருந்ததும் அப்படித்தான்.

டி.பி. விஜயதுங்காவுக்கு ஒரு கரும்புலியை அனுப்பவேண்டும் என்ற எண்ணமே பிரபாகரனுக்கு ஏற்படாதிருக்காது. ஒரு வேளை, டி.பி. விஜேதுங்கா தானாக முன்வந்து வலியக் கேட்டிருந்தாலும் கூட பிரபாகரன் கரும்புலியை அனுப்பியிருக்க மாட்டார்.

சந்திரிக்கா பதவியேற்ற வந்ததிலிருந்து நிலமை மாறிப்போனது. 'சமாதானத்திற்காக எந்த விலை கொடுக்கவும் தயார்' என்று கூறிக் கொண்டிருக்கும் ஒரு அரசுத் தலைவரை நோக்கிப் போர் பிரகடனம் செய்வது எப்படி?

ஒரே ஒரு வழிதான் புலிகளுக்கு இருந்தது. சமாதானத்தின் சின்னமாக சந்திரிக்கா நோக்கப்படுவதை மாற்ற வேண்டும்.

அதற்குரிய வழி பேச்சுவார்த்தைக்கு சென்று அந்த தளத்தில்வைத்து, சந்திரிக்காவும் ஒன்றுதான், அவருக்கு முன்பிருந்த தலைவர்களும் ஒன்றுதான் என்று உள்நாட்டிலும், வெளியுலகிலும் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

எனவே-போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை இரண்டுக்கும் புலிகள் முன்வந்தார்கள். ஆனால் எந்தவொரு கட்டத்திலும் சந்திரிக்கா மீது தமக்கு நம்பிக்கை இருப்பதாக புலிகள் வாய்தவறிக்கூட சொல்லியதில்லை.

சந்திரிக்காமீது நம்பிக்கையை இழக்க வைக்கும் சதுரங்கத்தில், அவர்மீது நம்பிக்கை இருப்பதாகப் பேசுவது பொருத்தமில்லை என்று விட்டுவிட்டார்கள்.

ஒரே ஒரு விடயம் புலிகளுக்கு மிகத் தெளிவாகத் தெரிந்திருந்தது.

சந்திரிக்கா ஏதாவது ஒரு தீர்வைக் கொண்டுவந்து போரை முடிவுக்கு கொண்டு வர விரும்புகிறார். ஆனால், அந்தத் தீர்வு தமிழீழத்திற்கு ஓரளவு ஈடானதாகவோ அல்லது, புலிகள் அமைப்பிடம் இருக்கும் நிர்வாக அதிகாரங்களை விட்டுவைப்பதாகவோ இருக்கப் போவதில்லை என்பது புலிகளுக்கு தெரிந்திருந்தது.

அப்படியொரு தீர்வை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், அப்படியான தீர்வை முதல் கட்டமாக ஏற்றுக்கொள்ளச் செய்யும் வெளியுலக நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடலாம். அதனை தடுப்பதே தமது இராஜதந்திரத்திற்கு விடப்பட்ட சவாலாக புலிகள் எடுத்துக் கொண்டார்கள்.

அது தவிர, பிரபாகரனை மிகவும் யோசிக்க வைத்த இன்னொரு விஷயம் வடபகுதி மக்களின் மனப் போக்கு.

யாழ் சென்ற அரச தூதுக்குழுவை வரவேற்க மக்கள் காட்டிய ஆர்வம் புலிகளை எரிச்சலடையவும், எச்சரிக்கையடையவும் வைத்தது.

ஹெலிகொப்டரிலிருந்து இறங்கிய தங்களுக்கு கிடைத்த வரவேற்பால் அரசு தூதுக்குழுவினர் பூரித்துப் போனார்கள். புலிகளோ பொருமிக் கொண்டிருந்தார்கள்.

தமது காவல்துறையினரையே மோதித் தள்ளிவிட்டு ஹெலிகொப்டரை நோக்கி ஓடிய மக்களை புலிகள் எரிச்சலோடு கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

இப்படியே போனால் தம்மை மீறி மக்கள் ஆதரவும், நம்பிக்கையும் சந்திரிக்காவின் பக்கம் திரும்பிவிடலாம். அதுதான் புலிகளின் கவலை.

வெளியுலக அபிப்பிராயத்தை சாதகமாக்கிக்கொள்ள வேண்டுமானால் போர்நிறுத்தத்தை படையினர் முதலில் மீறும் நிலைவரை காத்திருக்க வேண்டும். அதேநேரம் பேச்சுவார்த்தையை நீடித்து அரசை பொறியில் சிக்கவைக்கும் அரசியல் வியூகத்தை வகுக்க வேண்டும். அதன் மூலம் அரசை அம்பலப் படுத்த வேண்டும்.

ஆனால், அதற்கு கொஞ்சக் காலம் பிடிக்கும். அந்தக் கால அவகாசத்தில் உள்நாட்டில் யாருக்கு சாதகம் ஏற்படும் என்று கணக்குப் பார்த்தார் பிரபாகரன்.

நாட்டில் சமாதானம் நிலவும் சூழலைக் காட்டி வெளியுலகில் இருந்து அரசு உதவிகளைப் பெற்றுக் கொள்ளும். தன்னை உறுதிப்படுத்திக் கொள்ளும்.

ஏற்கனவே பொருளாதாரத் தடையை அரசு தளர்த்தியிருந்தது. மேலும் தளர்த்தத் தொடங்கினால் வடபகுதி மக்களிடமும் நல்ல அபிப்பிராயம் உருவாகத் தொடங்கிவிடும்.

ஜெனரேட்டர்களையும் வடபகுதிக்கு அரசாங்கம் அனுப்பியிருந்தது. அப்படியே தொடர்ந்து மின்சாரமும் யாழ் குடாநாட்டுக்கு வழங்கப்பட்டுவிட்டால் மக்கள் தமிழீழத்தை மறந்துவிட்டு மின்சாரத்தை ரசிக்கத் தொடங்கி விடுவார்கள்.

சுருக்கமாகச் சொன்னால் சண்டையே வேண்டாம். இப்படியே இருந்தால் என்ன வென்று மக்கள் நினைக்கத் தொடங்கலாம்.

ஆக, எப்படிப் பார்த்தாலும் கால அவகாசம் தமக்குப் பாதகம் என்ற முடிவுக்கு வந்தார் பிரபாகரன். அதனால்தான் அவசரப்பட்டார்.

முதலாவதுகாலக்கெடு விதிக்கப்படும் முன்னரே கரும்புலிகள் தயார் செய்யப்பட்டு, தாக்குதல் இலக்கும் நோட்டமிடப்பட்டுக் கொண்டிருந்தது.

அதனால்தான் இரண்டாவது காலக்கெடு முடிவடைந்த சூட்டோடு சூடாக திருமலைத் துறைமுகத்திற்குள் ஊருருவி துல்லியமாக தாக்குதல் நடத்த முடிந்தது.

அதற்காக, அரசாங்கம் போருக்கு தயாராகாமல் நல்லபிள்ளையாக கைகட்டிக் கொண்டிருந்தது என்று அர்த்தமல்ல. போர் மீண்டும் ஏற்படலாம் என்று கருதி ஆயுதக் கொள்வனவில் அரசும் ஈடுபட்டிருந்தது.

போர் மூளக்கூடும் என்று அரசாங்கம் எதிர்பார்த்தது. போர்மூண்டே தீரவேண்டும் என்ற உறுதியோடு தாக்குதல் இலக்குகளை புலிகள் தெரிவு செய்து கொண்டிருந்தார்கள் என்பதுதான் வித்தியாசம்.

போர் நிறுத்தத்தை முதலில் மீறியதற்காக வெளியுலக கண்டனங்கள் ஏற்படும் என்பதை புலிகள் எதிர்பார்த்தே இருந்தனர்.

தமது இராணுவ நடவடிக்கைகளின் வெற்றிகரமான விளைவுகளால் வெளியுலக அபிப்பிராயத்தை தம் பக்கம் திருப்பிக் கொள்ளலாம் என்று புலிகள் கணிப்பிட்டார்கள்.

வெளியுலக அபிப்பிராயம் ஒரு கொஞ்ச காலத்திற்கு அரசுக்கு சாதகமாக இருந்து விட்டுப் போகட்டும். அதனால் உள்நாட்டில் தமது அரசியல், இராணுவ பலத்திற்கு பாதகம் எதுவும் ஏற்பட்டுவிடப்போவதில்லை என்பதே புலிகளது நினைப்பாகவும் இருந்தது.

புலிகளின் நினைப்புக்கு இரண்டு காரணங்கள் இருந்தன.

ஒன்று: எந்தவொரு வெளிநாடும் தமிழீழக் கோரிக்கையை தாமாக முன்வந்து ஆதரிக்கப்போவதில்லை. உள்நாட்டில் நடைபெறும் யுத்தத்தின் வெற்றி தோல்வியில்தான் அது தங்கியுள்ளது.

இரண்டாவது; வெளிநாட்டு உதவிகளை பெற்றுக்கொண்டாலும் கூட படைத்தரப்பு முற்று முழுதான ஒரு போருக்கு துணிந்து முன்வரப்போவதில்லை. எனவே-வெளியுலக நிதி, ஆயுத உதவிகள் படைகளுக்கு கிடைப்பதையிட்டு அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

யாழ்-குடாநாட்டில் படையினர் தற்காப்பு யுத்தக் கட்டத்தில் இருந்தநிலையில் புலிகளது மேற்கண்ட கணிப்புக்களும், நினைப்புக்களும் சரியாகவே தோற்றம் காட்டிக்கொண்டிருந்தன.

ஆனால், இப்போது வடபுலப் போரில் படைத்தரப்பு தாக்குதல் யுத்தக் கட்டத்திற்குள் பிரவேசித்து விட்டது.

தற்காப்பு யுத்தக் கட்டத்திலும் நிலை கொள்ள முடியாத நிலையில் புலிகள் யாழ்ப்பாணத்தைவிட்டு பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

ஒரு குறிப்பிட்ட பகுதியை தக்கவைத்துக் கொள்ளக்கூடிய அளவில் சண்டையிட்டுக் கொண்டிருப்பதே தற்காப்பு யுத்த நிலையாகும். ஆனால், புலிகள் தமது தளப்பிரதேசத்தை பறிகொடுத்துள்ளனர். இனிமேல் அங்கு புலிகள் நடத்தும் தாக்குதல்கள் கெரில்லா தாக்குதல்களே தவிர தற்காப்பு யுத்தமல்ல.

கெரில்லா யுத்தத்தில் புலிகளுக்கு இருக்கும் திறனை குறைத்து மதிப்பிட முடியாது. ஆனால், சில விமர்சகர்கள் கூறுவது போல கெரில்லா யுத்தம் தற்போதைய வடபுலப் போரில் தலைகீழ் மாற்றங்களை ஏற்படுத்திவிடப் போவதில்லை.

யாழ்ப்பாணத்தில் படையினர் நிலை கொண்டுள்ள ஏதாவது ஒரு முனையில் புலிகள் பாரிய தாக்குதலை எதிர்காலத்தில் நடத்த முடியும். அப்படி நடத்தினாலும் படையினரை அங்கிருந்து விலக வைக்க முடியாது.

மண்டைதீவு இராணுவ முகாமை புலிகள் தாக்கிய போதும், மீண்டும் அங்கு இராணுவத்தினர் நிலை கொண்டது போலத்தான் முடிவு இருக்கும்.

அதாவது, தற்போதைய நிலையில் இருந்து படைக்கலப் பலம், ஆட்பலம் என்பவற்றை கணிசமாக பெருக்கி கொண்டால் மட்டுமே யாழ்ப்பாணத்தில் மீண்டும் புலிகள் தமது பலத்தை மேலோங்கச் செய்ய இயலும்.



அதற்கு வெளியுலக ஆதரவு என்பது மிக முக்கியமானது. பணத்தை கொடுத்து ஆயுதம் வாங்கி மட்டும் படைக்கலப் பலத்தை புலிகள் பெருக்க முடியாது. ஏதாவது ஒரு நாடு பின்னணியில் நின்றால்தான் அது சாத்தியம்.

ஆனால், எந்தவொரு நாடும் தமிழீழக் கோரிக்கைக்கு ஆதரவளிக்கும் நிலையில் இல்லை. அது தவிர, போர் நிறுத்தத்தை புலிகள் முதலில் முறித்துக் கொண்ட நிலையில், போரை நடத்துவது தவிர அரசுக்கு வேறு வழியில்லை என்று பிரிட்டிஷ் வெளிவிவகார அதிகாரிகள் கருத்துச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாகவே வெளியுலக அபிப்பிராயமும் அப்படித்தானிருக்கிறது.

யாழ்-குடாநாட்டில் நிர்வாக அதிகாரங்களுடன் இருந்து, நாட்டின் ஒரு பகுதியை ஆட்சி செய்பவர்கள் என்ற நிலையில் இருந்தபோது வெளியுலக அபிப்பிராயம் பற்றி புலிகள் கவலைப் படாமல் இருக்க முடிந்தது?

அழுதும் பிள்ளையை அவள்தானே பெறவேண்டும் என்று சொல்லவும் முடிந்தது. ஆனால் இப்போது மருத்துவச்சி ஒருவராவது தேவை என்ற நிலை புலிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்தக் கட்டத்தில்தான் போர் நிறுத்தத்தை முதலில் முறித்தவர்கள் என்ற அம்சம் புலிகளுக்கு பாதகமாகியிருக்கிறது. அரசுக்கு அதுவே பெரும் சாதகமாகியிருக்கிறது.

எனவே வெளியுலக அபிப்பிராயத்தை தமக்குச் சாதகமாக்க ஆறு இராணுவத்தினரை புலிகள் விடுதலை செய்தார்கள்.

சிங்கள கிராமவாசிகள்மீது தாக்குதல் நடத்தாமல் அதனைச் செய்திருந்தால், புலிகளுக்கு மனிதாபிமான ரீதியிலாவது அந்த நடவடிக்கை நல்ல பெயரை சம்பாதித்துக் கொடுத்திருக்கும். ஆனால் இப்போது காலம் கடந்து செய்தமையால் அது ஒரு தந்திரம் என்று மட்டுமல்லாமல், புலிகள் ரொம்பவும் குழம்பிப் போயிருக்கிறார்களோ என்று நினைக்கவும் வைப்பதாக முடிந்துவிட்டது.

படையினர் முற்று முழுதான போருக்கு துணியமாட்டார்கள் என்ற கணிப்பில் முதலில் போரை ஆரம்பித்தது மூலம் சர்வதேச அரங்கில் புலிகள் ஒரு நெருக்கடியில் சிக்கியிருக்கிறார்கள் என்பது மட்டும் உண்மையாகும்.

புலிகளது கணிப்பு சரியாக இருந்திருந்தால் வெளியுலக அபிப்பிராயம் பற்றி புலிகள் கவலையில்லாமல் இருந்திருக்கலாம்.

ஆனால், கணிப்பு தவறி அரசியல், இராணுவ ரீதியில் புலிகள் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள இன்றைய நிலையில், வெளியுலகமும் அரசுக்கு முழுச்சாதகமாக இருப்பது புலிகளுக்கு பெரிய பாதகம்தான்.

தொடர்ந்தும் நிதானமிழந்து, சாதாரண சிங்கள மக்கள் பலியாகக்கூடிய நடவடிக்கைகளை புலிகள் மேற்கொண்டால், சர்வதேச அரங்கில் புலிகளுக்குள்ள அனுதாபம் மட்டுமல்ல, தமிழ் மக்களுக்குள்ள அனுதாபமும் சரிந்து செல்லும். எப்படியோ பந்து இப்போது புலிகளின் கோட்டுக்குள்.

நா ர த ர்

## அதிரடி அய்யாத்துரை



கூட்டான கட்சியினர் எதிர்த்து வாக்குப் போட்டதற்கு பொன்னான தலைவரின் புத்திரர் கிழிச்ச கிழியும் ஒரு காரணமாம். எதிர்த்து வாக்குப் போட்டு விட்டீர்களே அதிகாரத் தரப்பார் குறை நினைக்க மாட்டினமோ எண்டு ஒருத்தர் கேட்டாராம். அதுக்கு கூட்டான கட்சி வெகு ஜனப் பிரதிநிதி என்ன சொன்னவர் தெரியுமோ? அடுத்த முறை இன்னொரு விஷயத்திலை ஆதரிச்சு வாக்குப் போடத்தானே போகிறோம். அதை வைச்சு சமாளிச்சுக் கொள்ளலாம்" எண்டவராம். உதுதானுங்கோ சாணக்கியம்.

வெகுஜன சபையிலை தங்கமானவர் ஒரு அறிக்கை வாசித்தவர். அதிலை அதிகாரத் தரப்பை நோகாமல் தட்டும் புத்திசாலித்தனம்தான் இருந்தது. அதெல்லாம் இருக்க அந்த அறிக்கையை வைச்சு ஒரு சர்ச்சை கிளம்பியிருக்குது. கிழக்கில் சிங்கத்தார் எதிரணித் தலைவரோடு பேசும்போது சொன்னாராம், "நான்தான் மிஸ்டர் 'தங்கா' விடம் அறிக்கை எழுதிக் கொடுத்திருக்கிறன். அவர் சபையிலை வாசிப்பார்" எண்டு. அந்த விஷயம் தங்கமானவர் காதில் விழுந்து போட்டுது. "அடப்பாவி நான் இரவிரவாக கண் முழிச்சு எழுதித் தயாரிச்ச அறிக்கை இது" எண்டு சொல்லி வேதனைப் பட்டாராம் தங்கமானவர். நல்ல கூத்து அணி.

தமிழ் சனத்தின் அனுதாபத்தைப் கிளறும் விஷயத்திலை தமிழ் கட்சிகளுக்குள் பலத்த போட்டி. மக்கள் படும் கஷ்டம் தாங்காமல் பக்கம் பக்கமாய் கண்ணீர் அறிக்கைகள் விடுகினம். அதிகாரத் தரப்புக்குத்தான் ஒரே குழப்பம். 'தனியாக கதைக்கும் போது ரெண்டு எழுத்தாருக்கு அடிக்க வேணும் எண்டும் சொல்லுகினம். வெளியாலை பேசும் போது சண்டை பிடிக்க வேண்டாம் நெஞ்சு பொறுக்குது இல்லை எண்டு புலம்புகினம். ஆக, இந்த கட்சிகளின் நோக்கமே பிடிபடேல்லையே எண்டு ஒரு அதிகாரம் உள்ளவர் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டு 'கொமன்ற்' அடிச்சவராம்.

சபையில் நடந்த ஒரு சுவாரசியமான சங்கதி கேளுங்கோ. (இதுக்கு சில வெகுஜனப் பிரதிநிதிகளே சாட்சியாக இருக்கினம்) எதிர்த்து வாக்குப் போடும் தங்கள் முடிவையும், தங்களுக்குள்ள இக்கட்டான நிலையையும் பாதுகாப்பு அதிகாரமுள்ள 'ர' விடம் சென்று கூட்டான கட்சி வெகுஜனப் பிரதிநிதிகள் விளக்கமளிச்சவையாம். சுமார் 15 நிமிசம் தாஜா பண்ணிப் போட்டுதான் சபைக்குள் போய் இருந்தவையாம். பாதுகாப்பு அதிகாரமுள்ளவர் சிங்கத்தாரைப் பார்த்து சொன்னவராம் "நீர் கிழக்கு 'காலனுக்கு' பயப்படுகிறீர்" எண்டு! சிங்கத்தார் கப்சிப்பாக ஒரு சிரிப்பை உதிர்த்தாராம். அறைக்குள் தாஜா செய்து போட்டு, அம்பலத்தில் எதிர்ப்பு நாடகம். துணிச்சல் எண்டால் அதுதானுங்கோ துணிச்சல்.

கம்பனுக்கு ஒரு இடம் வேண்டும் எண்டு யாழ்ப்பாணத்திலை மண்டபம் கட்டினவர் 'ஜெயமான ராஜ்' இப்ப அவரும் வவுனியாவிலை அகதியாக மாட்டுப் பட்டுப் போனார். கம்பனை கைவிட்டுப் போட்டு வந்ததை நினைச்ச வருந்துகிறதோ, அகதியானதை நினைச்ச வருந்துகிறதோ எண்டு தெரியேல்லை.

பிரச்சனை இல்லையெண்டால் திரும்பிப் போகலாம் எண்டு இடம் பெயர்ந்தவை சொல்லிக் கொண்டிருக்கினமாம். அதைக் கேள்விப் பட்டதிலை இருந்து ரெண்டு எழுத்தார் உஷாராக இருக்கினமாம்.

சனம் வெளிக்கிடப் பஞ்சிப்பட்டதாலை ரெண்டு எழுத்தார் முகமூடிகளோடை தோன்றி, விஷவாயு அடிக்கப் போறம் நீங்கள் தப்பி ஓடுங்கோ எண்டு ஒரு போடு போட்டவையாம். அந்தக் கதை பச்சைத் தரப்பின் காதிலும் விழுந்திருந்தது. அதுதான் கண்ணீர் புகையை தப்பாக நினைச்சு அவசரப்பட்டு அபிப்பிராயம் சொல்லிப் போட்டினமாக்கும்.

வட நிலவரத்தை அறியும் விஷயத்திலை பச்சைக் கட்சி தீவிரமாய் இருக்குதாம். ரெண்டு எழுதார் திருப்பி அடிகிற நாளை திருநாளாகக் கொண்டாடுற முதல் அணியாக அவைதான் இருப்பினம். எல்லாம் அரசியல்தான்.

இந்த முறை இளமையான ஒரு குட்டிக்கவிதை

காலம்

"பெண்ணே!
நீ சிரித்தால்
கவிதை என்கிறார்கள்
நான் சிரித்தால்
பைத்தியம் என்கிறார்கள்."

(பி.வி.ரகு)



படிப்பகம்

www.padippakam.com

# "சமாதானப் பேச்சுக்கள் பயனற்றவை"

## இந்திய சஞ்சிகைக்கு பிரபா சொன்னது

அரசியல் தொடர்

அற்புதன் ~எழுதுவது

## தலைவர்களின் படங்களும் சுவாரசியமான சில சர்ச்சைகளும்

### புதுடில்லியில் விளக்கம்

இலங்கை இனப்பிரச்சனையில் இந்திய நிலைப்பாடு, ஈழப் போராளி அமைப்புக்கள் இந்தியாவோடு கையாண்ட அணுகுமுறைகள் பற்றி 'இந்து' பத்திரிகை விமர்சகர் ஜீ.கே. ரெட்டி நல்ல விமர்சனம் ஒன்றை எழுதியிருந்தார். 1985 இல் எழுதப்பட்ட விமர்சனம் அது.

அந்த விமர்சனத்தின் மறுபகுதியையும் கவனித்துவிட்டு நாம் தொடர்ந்து சொல்லலாம்.

அதற்குமுன் ஒரு விடயத்தை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 1985 இல் போர் நிறுத்தம் முடிவடைந்தபோது இலங்கை அரசுதான் அந்த முடிவுக்குக் காரணம் என்பதை வலியுறுத்துவதில் தமிழ் இயக்கங்கள் வெற்றி பெற்றன.

இயக்கங்கள் மீது பழியைப் போட அரசு செய்த பிரசாரம் பயனளிக்க வில்லை. இயக்கங்களின் அரசியல் சாணக்கியத்துக்கு கிடைத்த வெற்றியே அது என்று கொள்ளலாம்.

இனி விமர்சனத்தைக் கவனிக்கலாம். இந்தியாவின் தவறுகளை பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறார் ஜீ.கே.ரெட்டி:

"புதுடில்லியில் தீவிரவாத இயக்கங்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது தமிழ் இயக்கங்கள் யுத்த நிறுத்தத்தை மீறியதன் எதிர்விளைவாகத் தான் இலங்கை இராணுவம் பதிலடியில் இறங்குகின்றது என்னும் தப்பெண்ணத்தை நீக்கும் வகையில் தலைவர்கள் தமது வாதங்களை முன்வைத்தனர்.

ஒவ்வொரு சம்பவத்தின்பின்னரும் இராணுவத்தினர் தமிழ் மக்களது உடமைகளை எரித்து அவர்களை வீடுகளை விட்டு ஓடவைப்பதில் முனைந்து விடுகின்றனர் என்பது தெளிவாக வலியுறுத்தப்பட்டது.

தமிழர்களின் பிரதேசங்களில் திட்டமிட்ட முறையில் சிங்கள மக்களைக் கொண்டுவந்து இலங்கை அரசாங்கம் குடியேற்றியது. அதற்கு முன்னர் இலங்கையின் மூன்றில் ஒரு பகுதியில் தமிழர்கள் வாழ்ந்து வந்தனர் என்பதும் தீவிரவாதத் தலைவர்களால் புதுடில்லிக்கு எடுத்து விளக்கப்பட்டது.

இனவிகிதாசாரத்தை மாற்றும் வகையில் கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட குடியேற்றங்கள் நடத்தப்பட்டன.

உதாரணமாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோணமலையில் 1948 ஆண்டு 7,606 ஆக இருந்த சிங்கள மக்களின் தொகை, 1981 இல் 86, 341 ஆக உயர்ந்துள்ளது.

1921 இல் திருக்கோணமலையில் 2.8 வீதமாக இருந்த சிங்கள மக்களின் தொகை 1971 இல் 28.8 வீதமாகி 1981 இல் 33.8 வீதமாக உயர்ந்துள்ளது.

இதே காலகட்டத்தில் அங்குள்ள தமிழர்களின் தொகை 54 வீதத்திலிருந்து 36 சதவீதமாக இறங்கியுள்ளது. 1921 இல் 37 வீதமாக இருந்த தமிழ் பேசும் முஸ்லிம்களின் தொகை 1981 இல் 29 சதவீதமாக இறங்கியது. இன விகிதாசார சமத்துவத்தன்மையில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது.

### இந்தியாவின் தவறு

மாறி மாறிவந்த இலங்கை அரசுகள் மேற்கொண்ட இந்த குடியேற்ற விவகாரத்திற்கு புதுடில்லி கொள்கை வகுப்பாளர்கள் போதிய கவனம் கொடுக்க வில்லை.

வடக்கையும், கிழக்கையும் இணைப்பது என்ற தமிழ் மக்களின் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதோ அல்லது எல்லைகளை மீள வரைவதன் மூலம் தமிழ் பிரதேசங்களை வரையறுப்பதோ பிரிவினைக்கு இட்டுச் செல்லும் என்பது இலங்கையின் வாதம்.

இந்த வாதத்தோடு ஒத்துப்போக இந்தியா தயாராக இருப்பது, வடக்கு-கிழக்கு மாகாணங்களில் காணிக் குடியேற்றத் திட்டங்களைச் மேற்கொள்ள இலங்கை அரசு தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறது என்பதை கவனத்தில் எடுக்க தவறியமையாகும்.

உள்நாட்டில் (இந்தியாவில்) பாரிய எதிர் விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய இந்தச் சிக்கலான வெளிநாட்டு பிரச்சனையைக் கையாள்வதில் நேர்மையான தரகரின் பங்குக்கும், அப்பாவி போன்று நடிக்கும் தீக்கோழிக்கும் இடையில் ஒரு சரியான வேறுபாடு வரையறுக்கப்படவேண்டும்.

தமிழ் தீவிரவாதிகள் மேலும் கோரிக்கைகளை தமது நிலைப்பாட்டின்பால் வற்புறுத்துவார்கள்.

ஆனால் மிதவாதிகள் தங்கள் நாட்டுப் பிரச்சனையை தீர்த்துவைக்க இந்தியாவே முன்முயற்சி எடுக்கவேண்டும் என்று முற்றிலும் விட்டுவிடுவார்கள்.

நல்லெண்ணத்தின் அடிப்படையில் இந்தியா பணியாற்றி வருவதால் இப் பிரச்சனையில் விரைவான தீர்வொன்று காணப்பட வேண்டும்.

### ராஜீவ் எதிர்ப்பு

அயல் நாடுகளுடன் உன்னதமான உறவுகளைப் பேணுவது என்ற கொள்கையை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி பின்பற்றி வருகிறார்.

தமிழர்களின் நாட்டுப் பிரிவினைக் கோரிக்கைக்கான தனது முற்று முழுதான எதிர்ப்பை எந்தவித இரகசியமுமின்றித் தெரிவித்துவிட்டார்.

சுதந்திர ஈழம் என்ற சிந்தனைக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்த ராஜீவ், இலங்கையின் ஐக்கிய அமைப்பு வரையறைக்கு அப்பால் அமையக்கூடிய சமஷ்டி அமைப்பைக்கூட நிராகரித்துவிட்டார்.

திரு. காந்தியின் கருத்துப்படி இலங்கைத் தமிழர்களின் அபிலாசைகளைப் பூரணப் படுத்துவதற்கு இந்தியாவின் மாநிலங்களில் உள்ள சுயாட்சி அமைப்பு போதுமானது.

இந்தியாவின் பெருந்தன்மையான பல வந்தம், சிநேகித பூர்வமான வழிநடத்தல் என்பவற்றின் மூலமாக தமிழ் தீவரவாதப் பிரிவினரும், மிதவாதத் தலைவர்களும் ஒன்று சேர்க்கப்பட்டனர். அதன் மூலம் நிச்சயமற்ற தன்மை நீக்கப்படுவதற்காக திம்புப் பேச்சு மேசைக்கு கொண்டு வரப்பட்டனர்.

ஆனால் துரதிஷ்டவசமாக இரு பிரிவினருக்கும் இடையிலான அணுகுமுறை வேறுபாடு தொடர்ந்தது.

இலங்கை ஆயுதப்படைகளின் அட்டூழியங்கள் மீது கவனத்தை திசை திருப்பியது மூலம் திம்புப் பேச்சுவார்த்தையின் முறிவானது தமிழ் முகாமுக்குள் இருந்த பாரிய கருத்து வேறுபாடுகள் வெளியில் தெரியாமல் செய்ய உதவிவிட்டது.

### போர் நிறுத்தம்

தற்போது செய்யக்கூடியது யாதெனில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் தமக்கிடையில் நம்பிக்கையை வளர்க்க முனையும்வரை பேச்சுவார்த்தைகளை தொடர வைப்பதே.

யுத்த நிறுத்தம் என்பது வெறுமனே விரோத செயற்பாடுகளை நிறுத்துவது மட்டுமல்ல. மீண்டும் கூடிய சாதகமான நிலையில் இருந்து தாக்குதலைத் தொடுப்பதற்கு வசதியாக ஒவ்வொரு தரப்பும் தமது சக்தியையும், வளத்தையும் பெருக்காதிருப்பதுமாகும்."

இதுதான் ஜீ.கே.ரெட்டி எழுதிய விமர்சனத்தின் முக்கிய பகுதிகள்.

நீளமாக இருந்தபோதும், இந்தியா இலங்கை இனப்பிரச்சனையின் மீது கொண்டிருந்த கண்ணோட்டத்தை தற்போதைய நிலையில் பலர் மறந்திருப்பர். வேறு பலர் தெரிந்திராது இருப்பர்.

இந்த அரசியல் தொடரைப் படித்து வரும் பல்லாயிரம் வாசகர்கள் தெரிந்திருக்க வேண்டிய முக்கிய விடயம் அதுவாகும் என்பதால் நீளம் அதிகமானாலும் அந்த விமர்சனத்தை தரவேண்டியிருந்தது. எனினும் சில பகுதிகளை நீளம் கருதி சுருக்கியே தந்தேன்.

### பிரபா பேட்டி

இந்தியாவில் இருந்து வெளிவரும் 'ஜென்டில்மென்' பத்திரிகை நிருபர் ஜஸ்விந்தர்சிங், புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்தார்.

திம்பு பேச்சுவார்த்தை முறிவு, போர் நிறுத்த முறிவு பற்றிய கேள்விகளைத் தொடுத்தார்.


**கேள்வி:-** ஆயுதமேந்துமளவுக்கு உங்களை நிர்ப்பந்தித்த காரணிகள் எவை?




ரெலோ 1985 இல் வெளியிட்ட கலண்டர்

**பிரபா:-** ஈழத் தமிழ் மக்கள் அடைந்து வரும் அவலநிலைதான் துப்பாக்கி ஏந்த வேண்டிய தவிர்க்க முடியாத நிலைக்கு என்னைத் தள்ளியது. எமது மக்கள் திட்டமிட்டு இனப்படுகொலைக்கு உள்ளாக்கப் பட்டதை உணர்ந்தேன். எனவேதான் எமது மக்களைப் பாதுகாத்து, எமது நாட்டின் விடுதலையை மீட்க ஆயுதப்போராட்டமே ஒரே வழி என்னும் முடிவுக்கு வந்தேன்.

**கேள்வி:-** சுதந்திரமாக இயங்கும் பத்திரிகைகள் மூலமாகவும், பாராளுமன்ற ஜனநாயகத்தின் மூலமாகவும் உங்கள் குறைகளை எடுத்து விளக்கி நிவாரணம் கண்டிருக்கலாம் என்று நீங்கள் எண்ணியதில்லையா?



**பிரபா:-** முப்பதாண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்கள் தமது குறைகளையும், கோரிக்கைகளையும் நாடாளுமன்றம் மூலம் எடுத்துக் கூறியாகிவிட்டது.

சிறீலங்காவின் பாராளுமன்றம் என்பது பெரும்பான்மை இனத்தின் கொடுமைகளது மொத்த வடிவமாகவே இருக்கிறது. பத்திரிகைகள் அனைத்தும் அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. அவற்றில் எழுதுபவர்கள் தீவிர இனவாதிகளான சிங்கள பத்திரிகை ஆசிரியர்கள். பாராளுமன்ற ஜனநாயகம் மூலம் எமது அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்கு இலங்கையில் எதுவிதமான வாய்ப்பும் இல்லை.

**கேள்வி:-** உங்கள் குடும்பப் பின்னணி என்ன? உங்கள் பெற்றோருடன் இன்னும் தொடர்புண்டா?

**பிரபா:-** நான் மிகச் சாமானியக் குடும்பத்திலே பிறந்தவன். எனது தந்தை சிறீலங்கா அரச ஊழியராக இருந்தவர். எனது இரண்டு மூத்த சகோதரிகளுக்கும் திருமணமாகி விட்டது. சிறிய வயதிலேயே போராட்டத்தில் இணைந்து தேடப் படுபவன் ஆகிவிட்டேன். 19 வது வயதில் வீட்டைவிட்டு வெளியேறி தலைமறைவாகிவிட்டேன். அன்றிலிருந்து பெற்றோருக்கும் எனக்குமிருந்த தொடர்பு அறுந்துவிட்டது.

**கேள்வி:-** தமிழீழ தீவிர வாதத்தின் அடையாளச் சின்னமாக நீங்கள் சித்தரித்துக் காட்டப்படுகிறீர்கள். உங்கள் இயக்கமே உங்களை ஒரு பெரிய வீரனாக எடுத்துக் காட்டுகிறது. அழுத்தமான கொள்கைப் பிடிப்பு உள்ளவர் என்ற முறையில் இந்தத் தனிநபர் வழிபாடு சரியான தென்று கூறுகிறீர்களா?

**பிரபா:-** இதுமாதிரி என்னை மக்கள் உருவகப் படுத்துவதற்கும், அப்படி ஒரு வீரப்பாத்திரமாக என்னைக் கருதுவதற்கும் நான் என்ன செய்யமுடியும்? எனது மக்களுக்கு நான் கொண்டுள்ள இலட்சியப்பற்று நன்கு தெரியும். சரியான பாதையில் அவர்களை வழி நடத்திச் செல்வேன் என்று அவர்கள் நம்புகிறார்கள். மக்கள் என் மீது கொண்டுள்ள பாசத்தின் எடுத்துக்காட்டே இம் மாதிரியான புகழ்ச்சி மொழிகள்.

**கேள்வி:-** இலங்கையின் இன்றைய நிலை பற்றி எவ்வாறு கணிக்கிறீர்கள்?

**பிரபா:-** இன்றைய நிலை மிகவும் பயங்கரமானது. போர் நிறுத்தம் என்ற திரையின் பின்னால் சிறீலங்கா அரசு ஈவிரக்க மற்ற ஒடுக்குமுறைகள், இராணுவ ஆக்கிரமிப்பு போன்றவற்றில் ஈடுபடுகிறது. இன்றைய அரசுக்கு சமாதானப் பேச்சுக்கள் மூலம் நியாயமும், நீதியுமுள்ள தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டுமென்பதில் அக்கறை கிடையாது.

இராணுவத் தீர்வையே சிறீலங்கா அரசு நம்பியுள்ளது.

### பேச்சு பயனற்றது

**கேள்வி:-** தமிழர் பிரதிநிதிகளுக்கும், சிறீலங்கா அரசுப் பிரதிநிதிகளுக்கும் இடையில் திம்புவில் நடந்த பேச்சுவார்த்தைகள் குறித்து உங்கள் கருத்தென்ன?

**பிரபா:-** சமாதானப் பேச்சுக்கள் என்பது ஒரு பயனற்ற முயற்சி. இது உலக நாடுகளை ஏமாற்றுவதற்கு ஜயவர்த்தனா ஆடிவரும் கபட நாடகம். ஜயவர்த்தனா தன்னை ஒரு சமாதானப்பிரியர் போலக் காட்டிக்கொண்டாலும், அவருக்கு சமாதானத் தீர்வு ஏற்பட வேண்டும் என்பதில் உள்ளூர ஆர்வம் கிடையாது. எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை ஈடுசெய்யக் கூடிய எந்தவொரு ஆலோசனையையும் அவர் இதுவரை முன்வைக்கவில்லை.

**கேள்வி:-** போர்நிறுத்த அவகாசத்தைப் பயன்படுத்தி ஜயவர்த்தனா அரசு தமது இராணுவக் கட்டமைப்பை பலப்படுத்துவதாக நீங்கள் குற்றம் சாட்டி இருந்தீர்களே?

**பிரபா:-** அது உண்மைதான். போர் நிறுத்த உடன்படிக்கை என்ற திரைமறைவில் ஜயவர்த்தனா அரசு மிகவும் திட்டமிட்ட இராணுவக் கட்டமைப்பு முயற்சியிலீடுபட்டது. தனது இராணுவ பலத்தைப் பெருக்குவதற்கு சிறிலங்கா அரசு தனது பட்ஜெட்டில் பெருமளவு தொகையை ஒதுக்கியுள்ளது. எல்லாவகையான நவீனரக ஆயுதங்களும் பெருமளவு கொள்வனவு செய்யப் பட்டுள்ளன. முழுச் சிங்கள இனமும் யுத்தத்துக்கு தயார்படுத்தப்பட்டு வருகிறது. பாகிஸ்தான் உட்பட வெளிநாட்டுக் கூலிப் படைகள் சிறீலங்கா இராணுவத்திற்கு பயிற்சி கொடுக்கின்றன. இவ்வாறு இராணுவ மயப்படுத்தும் ஜயவர்த்தனாவின் போக்கு, சமாதானப் பேச்சு மூலம் உடன்படிக்கை காண்பதைவிட, இராணுவத்தீர்வு ஒன்றிலேயே அவர் அதிக அக்கறை கொண்டுள்ளார் என்பதை தெளிவாக்குகிறது."

அதுதான் பிரபா வழங்கிய பேட்டி.

### தனிநபர் வழிபாடு

பிரபாவின் பேட்டியில் தனிநபர் வழிபாடு பற்றிய விடயமும் வந்திருக்கிறதல்லவா?

இதுபற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும். ஆரம்பத்தில் புலிகள் அமைப்புத்தான் தமது தலைவரது புகைப்படத்தை பத்திரிகைகள் மூலமாக வெளிவரச் செய்தது.

இந்திய ஆங்கில சஞ்சிகை ஒன்றில்- 'சண்டே' இதழ் என்று நினைவு-பிரபாவின் புகைப்படம் முகப்பில் இடம்பெற்றிருந்தது. சப்-மெஷின்கன் துப்பாக்கியுடன் பிரபாகரன் தோன்றியிருந்தார்.

அதனைப் பார்த்துவிட்டு ஏனைய இயக்கத்தினர் கேலி செய்தனர். "பிரபா ஒரு நடிகராகி விட்டார்; போஸ் கொடுத்திருக்கிறார்" என்றெல்லாம் விமர்சித்தனர்.

அதெல்லாம் ஒரு கொஞ்ச நாளுக்குத்தான். பின்னர் ஏனைய இயக்கத் தலைவர்களுக்கும் தங்கள் முகங்களைக் காட்டும் ஆசை வந்துவிட்டது.

ரெலோ இயக்கம் சிறீசபாரத்தினத்தின் புகைப்படத்தை வெளியிட்டது.

'ரை' கட்டியபடி போஸ் கொடுத்திருந்தார் சிறீசபாரத்தினம். புளொட் தலைவர் உமா மகேஸ்வரனின் படமும் வெளியானது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்திற்குள் மட்டும் படம் வெளியிடுவதில் பிரச்சனை ஏற்பட்டது.

யாழ்-பிராந்தியக் கமிட்டி உறுப்பினர்கள் படம் வெளியிடப்படுவதை விரும்பவில்லை. "ஒரு தனிநபரை முக்கியத்துவப் படுத்துவது சரியல்ல; நாம் ஒரு புரட்சிகர அமைப்பினர்" என்று கூறிக் கொண்டிருந்தனர்.

எனினும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். அரசியல் பிரசார வேலைகளுக்கு பொறுப்பாக இருந்த ரமேஷ், 'செந்தணல்' என்னும் பெண்கள் அமைப்புக்கான பத்திரிகையில் பத்மநாபாவின் பேட்டியை வெளியிட்டதோடு, பத்மநாபாவின் புகைப்படத்தையும் பிரசுரித்திருந்தார்.

அதுவரை தோழர் ரஞ்சன் என்றே இயக்க உறுப்பினர்களால் அழைக்கப் பட்டுவந்த பத்மநாபா, முதன் முதலில் தனது சொந்தப் பெயரில் அறிமுகமானார்.

'செந்தணல்' சஞ்சிகை தமிழ்நாட்டில் அச்சடிக்கப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சஞ்சிகையை விரித்துப் பார்த்தார்கள் யாழ்-பிராந்தியக் கமிட்டியினர். பொத்துக் கொண்டு வந்தது கோபம்.

'செந்தணலின்' ஐயாயிரம் பிரதிகளையும் கொண்டுபோய் ஒரு குழி வெட்டிப் புதைத்து விட்டார்கள்.

தனிநபர் வழிபாடு உருவானால் கூட்டுத் தலைமைத்துவம் பாதிக்கப்படும் என்பதுதான் யாழ்-பிராந்தியக் கமிட்டியின் வாதம்.

யார் தலைவர் என்பதை மக்கள் அறிய விரும்புவார்கள். செயலாளர் நாயகத்தை தெரியப்படுத்த வேண்டும். ஆனால் அவரால் தன்னிச்சையான முடிவுகள் எடுக்கப்படாத வகையில் உட்கட்சி ஜனநாயகம் இருக்க வேண்டும் என்பது மறுதரப்பு வாதம்.

அதற்கே ஆதரவு கிடைத்தது. ஈ.பி.ஆர். எல்.எஃப். அமைப்பும் தமது செயலாளர் நாயகத்தின் படத்தை வெளியிட ஆரம்பித்தது.

எனினும் சகல புகைப்படங்களிலும் மிக எளிமையாகவே தோன்றியிருந்தார் பத்மநாபா.

1984ம் ஆண்டு ஜூன் மாதம் ஈ.பி.ஆர். எல்.எஃப். அமைப்பின் முதலாவது காங்கிரஸ் தமிழ்நாட்டில் கும்பகோணத்தில் நடைபெற்றது.

செயலாளர் நாயகத்தின் புகைப் படத்தை வெளியிடலாமா, கூடாதா என்பது பற்றியே ஒரு நாள் பூராவும் விவாதம் நடந்தது.

விவாதத்தின் முடிவில் வெளியிடலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

56

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

### உளவுப்பிரிவு

அந்தக் காங்கிரசில் நீண்டநேர விவாதத்திற்கு உள்ளாக்கப்பட்ட மற்றொரு விடயம் உளவுப் பிரிவு சம்பந்தப்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கு மக்கள் ஆய்வுப் புரிவு (MAP) என்னும் உளவுப் பிரிவு இருந்தது.

பத்மநாபா, மணி, ரமேஷ், வெற்றி, ஜேம்ஸ் ஆகியோர் அதன் தலைமைக் குழுவில் இருந்தனர்.

இயக்கத்திற்குள்ளும் கண்காணிப்பு இருக்கவேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டிருந்தது.

இயக்க உறுப்பினர்களை உளவுப் பிரிவு கண்காணிக்கக் கூடாது என்று காங்கிரசில் கலந்து கொண்ட ஒரு சாரார் வலியுறுத்தினார்கள்.

செழியன், கண்ணன், கபூர் ஆகியோர் உளவுப்பிரிவு தொடர்பாக அச்சம் தெரிவித்தனர்.

உளவுப்பிரிவு தலைமைக் குழுவில் இருந்த ரமேஷால் ஒரு இரகசிய பிரிவினர் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர். தலைமைக்கு விரோதமானவர்களை தீர்த்துக்கட்ட உத்தரவு வழங்கப் பட்டுள்ளது என்று கூறி காங்கிரஸ் உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்ட முயன்றனர்.

உளவுப்பிரிவு அவசியம். இயக்கத்திற்குள் கண்காணிப்பும் அவசியம் என்று காங்கிரசில் வாதிட்டவர்களில் ரமேஷ், யாழ் மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப். தளபதி சுபத்திரன், தயாபரன், மட்டக்களப்பு மாவட்ட தளபதி சிவா ஆகியோர் முன்னணியில் நின்றனர்.

இறுதியில் அவர்கள் கருத்து காங்கிரசால் ஏற்கப்பட்டது.

1985 இன் இறுதிப்பகுதியில் ஈ.பி.ஆர். எல்.எஃப். அமைப்புக்கும், புலிகள் அமைப்புக்கும் இடையில் பிரச்சனை ஒன்று ஏற்பட்டது.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

# நல்லூர் இராஜதானியில் 'ரிவிரெச' துருப்புகள்

## 'விடாப் பிடி' நிலையில் அரசு–எல்.ரி.ரி.ஈ

## தீர்வு முயற்சிகளுக்கு மூன்றாவது சக்தியின் தலையீடு அவசியமாகிறது

அலசுவது–இராஜதந்திரி



புராதன இலங்கையில் இராஜதானிகள் பல இருந்தன.

வடக்கே இருந்த இராஜதானியே நல்லூராகும்.

நல்லூரின் சிறப்பை எடுத்தியம்புவதாகவே அங்குள்ள நல்லூர்க் கந்தசுவாமி கோயில் விளங்குகின்றது.

வடபகுதி மக்களின் மனதில் மட்டுமல்ல, உலகில் பரந்து வாழும் பல கோடிக்கணக்கான முருக பக்தர்களின் மனதில் இடம் பிடித்த ஒரு ஆலயமாகவே நல்லூர் கந்தசுவாமி ஆலயம் விளங்குகின்றது.

ஒல்லாந்தர்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது, அன்றிருந்த நல்லூர் கந்தசுவாமி கோயில் கட்டிடத்தைத் தகர்த்து, அக் கட்டிடக் கற்களை யாழ்ப்பாணக் கோட்டையை நிர்மாணிக்கப் பயன்படுத்தினர் என்று வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தவிர பண்டைய சிங்கள மன்னர்களின் படையெடுப்புகளுக்கும் நல்லூர் கந்தன் ஆலயம் உட்பட்டதுடன், புவனேகபாகு என்ற சிங்கள மன்னர் இக் கோயிலின் அறங்காவலராக இருந்தவர் எனவும் தெரிவிக்கப்படுவதுண்டு.

இதன் காரணமாகவே நல்லூர் சந்தசுவாமி கோயில் திருவிழாக் காலங்களில் சுவாமி வீதி வலத்துக்காகப் புறப்படுமுன்னர் கூறப்படுகின்ற கட்டியத்தில் புவனேகபாகு மன்னரின் பெயர் இன்றுங்கூட இடம்பெறுகின்றது.

சுருங்கக்கூறின், சிங்கள-பௌத்த மக்களுக்கு கண்டியின் தலதா மாளிகை எவ்வளவு தூரம் சிறப்பு மிக்கதோ, அதே போன்றே இலங்கையின் தமிழ்-இந்து மக்களுக்கும் நல்லூர் கந்தசுவாமி கோயில் பெருஞ்சிறப்புடையதாக இருக்கின்றது.

வருடந்தோறும் ஆகஸ்ட் மாதப்பகுதியில் கண்டியின் எசல பெரஹறா தலதா மாளிகையில் இடம் பெறும்போதே, நல்லூர் கந்தசுவாமி கோயில் ஆலய மகோற்சவமும் களை கட்டியிருக்கும்.

அங்கப் பிரதட்சணங்கள், காவடிகள், பஜனைகள், இசைக்கச்சேரிகள் என்று நல்லூர்ப்பிரதேசம் முழுவதுமே பக்திப் பரவசமான சூழ்நிலையில் காணப்படும்.

கடந்த 12 வருடகால யுத்தத்தில்கூட நல்லூர்க் கந்தன் ஆலய மகோற்சவம், பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலும் வருடந்தோறும் அதன் சிறப்புக்குன்றாது இடம் பெற்று வந்தது.

இந்த ஆண்டிலும் கடந்த ஆகஸ்ட் மாதம் நல்லூர் கந்தன் ஆலய மகோற்சவம் வெகு சிறப்பாகவே இடம் பெற்றிருந்தது.

இது தவிர ஒரு மாதத்துக்கு முன்னர் கந்தக் கடவுளுக்காக அனுஷ்டிக்கப்படும் 'கந்த சஷ்டி' விரதமும் வடபகுதிப் பக்தர்களினால் அனுஷ்டிக்கப்பட்டு, அவ்விரதத்தின் இறுதி நாளான்று 'சூரசங்கார' உற்சவமும் இடம் பெற்றிருந்தது.

நல்லூரில் இடம் பெறும் சூரசங்கார உற்சவம் ஒரு கண்கொள்ளாக் காட்சியாகவே இருக்கும்.

தேவர்களை வதைத்து வந்த அசுரனான சூரபத்மனை முருகப் பெருமான் போரிட்டுக் கொன்ற புராணக் கதையை மையமாகக் கொண்டதாகவே சூரசங்காரத் திருவிழா விளங்குகின்றது.

இது தவிர வடக்கே வாழ்ந்த சித்தர்கள், யோகிகள் என்பவர்கள் கூட நல்லூர் ஆலயச் சுற்றாடலிலேயே நடமாடித் திரிந்துள்ளனர்.

இத்தகைய மகான்களில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த தேரடிச் செல்லப்பா சுவாமிகள் அவரது சீடரான யோக சுவாமிகள் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

எனவே யாழ்ப்பாணத்தின் நல்லூர்க் கந்தன் ஆலயம் என்பது, வடபகுதி மக்களின் இறை வழிபாட்டுடன் கூடிய வாழ்க்கை முறையின் அடி நாதமாகவே இருந்து வருகின்றது.

நல்லூர்க் கந்தன் ஆலயம் மட்டுமல்ல, வடக்கே வேறு பிரதான ஆலயங்களும் இருக்கவே செய்கின்றன.

அவற்றில் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயம், மாவிட்டபுரம் முருகன் ஆலயம், மற்றும் வல்லிபுரம் ஆழ்வார் கோயில், நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆகியன தலச்சிறப்புடன், வடபகுதி மக்களின் மனதில் பெரிதும் இடம் பிடித்தவையாகவே உள்ளன.

கடந்த 12 வருட கால யுத்தத்தில் வடக்கேயுள்ள ஆலயங்கள் பலவும் சேதமாகியுள்ளன. இந்து ஆலயங்கள் மட்டுமல்ல, கத்தோலிக்க தேவாலயங்களும் குண்டு வீச்சினால் சேதமடைந்துள்ளன.

இவை தவிர வடக்கே ஆயுதப் போராட்டங்கள் ஆரம்பித்த காலத்தில் யாழ் நகரின் மையத்திலிருந்த பௌத்த விகாரையொன்றும் இடித்து நாசமாக்கப்பட்டிருந்தது.

வல்வெட்டித்துறைப் பிரதேசத்தை அண்டிய தொண்டமானாறில் உள்ள செல்வச்சந்நிதி முருகன் ஆலயம் மிகவும் பிரசித்தமானதொன்றாகும்.

இங்கே பத்து வருடங்களுக்கு முன்னர் பலகோடி ரூபா செலவில் புதிய சித்திரத் தேர் ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் அத்தேரைக்கூட விஷமிகள் தீயிட்டுப் பொசுக்கியிருந்தனர்.

இச்சம்பவம் வடபகுதி மக்களை பெரிதும் புண்படுத்தியிருந்ததுடன் அவர்களது மனதில் ஆழமான வடுக்களையும் ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கைளில் ஈடுபட்டுள்ள படையினர் நல்லூர்க் கந்தன் ஆலயத்தை எதுவித சேதமுமின்றித் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படும் தகவல்கள் வடபகுதி இந்துக்களுக்கு மன ஆறுதலைக் கொடுப்பதாகவே இருக்கும்.

நல்லூர்க் கந்தன் ஆலயம் இந்திய அமைதிப்படையினரின் இராணுவ நடவடிக்கைகள் இடம் பெற்றபோது ஒரு பெரும் அகதிமுகாமாகவும் மாறியிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

நல்லூர் ஆலயத்தினுள் ஆயிரக் கணக்கான வடபகுதி அகதிகள் தஞ்சமடைந்து தமது உயிர்களைக் காப்பாற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தவிர 1987ம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர், அந்த ஒப்பந்தம் மீதான அதிருப்தியை வெளியிடும் வகையில் எல்.ரி.ரி.ஈ.யினரின் சிரேஷ்ட உறுப்பினரான திலீபன் நல்லூர் ஆலய வீதியிலேயே சாகும்வரை உண்ணாவிரதமிருந்தார்.

இறுதியாக அந்த ஆலய வீதியிலேயே அவர் தமது உயிரையும் நீத்தார்.

எனவே தற்போது யாழ் குடாநாட்டில் நல்லூர்ப் பிரதேசத்தை கைப்பற்றியதுடன் அங்கே தமது விஸ்தரிப்பை மேற்கொண்டிருக்கும் ஆயுதப்படையினர் எத்தகைய கோணத்தில் எதிர்காலத்தில் நடந்து கொள்வார்கள் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை இன்று அப்பிரதேசம் மக்கள் எவருமே அற்ற ஓரு சூன்யப் பிரதேசமாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

யாழ்ப்பாண மக்கள் அனைவரும் தென்மராட்சி, வடமராட்சி, கிளிநொச்சி, வன்னி ஆகிய பிரதேசங்களுக்கு இடம் பெயர்ந்திருக்கக் காணப்படுகின்றனர்.

இது தவிர யுத்தச் சூழ்நிலைகள் காரணமாக கொழும்புக்கும், நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும்கூட யாழ்ப்பாண மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

மேலும் கடந்த பன்னிரெண்டு வருடகாலத்தில் இலங்கையை விட்டுப் புலம் பெயர்ந்த யாழ்ப்பாண மக்களின் எண்ணிக்கையும் அபரிமிதமானதாகவே இருக்கின்றது.

கூடவே யாழ்ப்பாணம் தவிர ஏனைய வடக்கு-கிழக்குப் பிரதேச மக்களும் பெருமளவில் அகதிகளாக, எதுவித அரசியல்-சமுக நிலைக்கும் முகங் கொடுக்க முடியாதவர்களாக பரிதவித்துப் போயிருக்கின்றனர்.

இந்நிலையில், இன்று சின்னாபின்னப்பட்டும், அல்லோல கல்லோலப்பட்டும் போயுள்ள வடக்கு-கிழக்கு மக்கள், அடுத்து நடக்கப் போவது என்ன? என்ற கேள்வியை எழுப்பியவர்களாகவே இருக்கின்றனர்.

கடந்த மாதம் 26ம் திகதி எல்.ரி.ரி.ஈ. இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் தமது மாவீரர் வாரச் செய்தியை வெளியிட்டிருந்தார்.

அதே சமயம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவும் தொலைக்காட்சி, வானொலி மற்றும் பத்திரிகைகள் வாயிலாக தமது அரசின் நிலைப்பாட்டையும் தெரிவித்திருந்தார்.

திரு.பிரபாகரனின் செய்தி, வடக்கே இராணுவ அழுத்தம் இருக்கும் வரை பேச்சுவார்த்தைகளுக்கு இடமில்லை என்பதனை வலியுறுத்தித் தெரிவிப்பதாகவே இருக்கின்றது.

இதேவேளை, ஜனாதிபதியின் நாட்டு மக்களுக்கான செய்தி என்பது, எல்.ரி.ரி.ஈயினரைப் பலவீனப்படுத்தி அவர்களை பேச்சுவார்த்தைக்கு வரச் செய்வதை வலியுறுத்துவதாகவே இருக்கின்றது.

இந்த இருவரதும் செய்திகள் ஒருவரையொருவர் விட்டுக் கொடாது 'கயிறு இழுப்பது' போன்றதாகவே இருக்கின்றது.

ஆனால் ஜனாதிபதியை விரும்பும் வடக்கு-கிழக்கு மக்கள் இரு சாராரும் தமது கெடுபிடி நிலையைத் தளர்த்தி முகத்துக்கு முகம் பார்த்து அரசியல் பேச்சுக்களை நடத்த வேண்டுமென்பதனையே விரும்புகின்றனர்.

இந்நிலையில் ஒரு பரந்துபட்ட பேச்சுவார்த்தையே வடக்கு-கிழக்கு மக்களின் பிரச்னை தீர உதவுமென்பது நிதர்சனமாக இருக்கின்றது.

அரசாங்கத்தினதும், எல்.ரி.ரி.ஈ.யினரதும் தற்போதைய விடாக்கண்டன் நிலையை தளர்த்துவதற்கு வெளிச்சக்தி ஒன்றே தலையிடுவது இன்றியமையாததாகின்றது.

கடந்த வாரம் இந்தியாவின் தமிழகத்தில் வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்களின் பாதிப்புக் குறித்து பெரும் வேலைநிறுத்த நடவடிக்கை இடம்பெற்றது.

இந்த வேலை நிறுத்தம் இலங்கைத் தமிழர் குறித்து தமிழக மக்கள் தொடர்ந்து கரிசனை கொண்டிருப்பதையும், கடந்த காலங்களில் இலங்கை-இந்திய உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்கள், தமிழகத்தவரின் உணர்வலைகளில் எவ்வித மாற்றத்தையும் கொண்டுவரவில்லை என்பதனையே உணர்த்தியது.

தமிழகத்தின் ஆளுங்கட்சியான-முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக்கழகம், மற்றும் தமிழகத்தின் பிரதான கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்திருந்தன.

இலங்கையில் பேச்சுவார்த்தைகள் மூலமான ஒரு தீர்வைக் கொண்டு வரவும், இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தவும் இந்திய மத்திய அரசு முன்வர வேண்டுமென இக்கட்சிகள் குரலெழுப்பின.



தென்மராட்சியில் பாண் வாங்குவதற்கு நீண்ட வரிசையில் மக்கள்.

இந்நிலையில், இந்தியாவாக இருக்கலாம், அல்லது அமெரிக்காவோ, பிரான்ஸ், பிரிட்டனாகவோ இருக்கலாம்.

இதில் ஏதாவது ஒரு நாடு இனப்பிரச்னை தீர்வு விடயத்தில் மூன்றாவது சக்தியாக தலையிட வேண்டிய கட்டம் ஏற்பட்டுள்ளது.

எவ்விதத்திலும் ஒரு மூன்றாவது சக்தியின் தலையீட்டின் மூலமே வடக்கு-கிழக்கில் ஏற்பட்டுள்ள கெடுபிடி யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வர முடியுமென்பது தற்போது தெளிவாகியுள்ளது. ●

13

# மனித வெடிகுண்டு

பாலஸ்தீன விடுதலை'முன்னணிக்கு (பி.எஃப்.எல்.பி) நிதி தேவைப்பட்டது.

தளபதி வாடி ஹாட்டாட் தனது திட்டத்தை செயற்படுத்தும் பொறுப்பை கார்லோஸிடமும், மௌக்கார்பெல்லிடமும் ஒப்படைத்தார்.

திட்டத்தைப் பற்றி நேரில் பேச மௌக்கார்பெல்லை பெய்ரூட்டுக்கு வருமாறு அழைத்தார் தளபதி வாடி ஹாட்டாட். மௌக்கார்பெல் பெய்ரூட்டுக்குப் பறந்தான்.

மௌக்கார்பெல் பெய்ரூட்டுக்குச் செல்வதற்கிடையில், தளபதி வாடி ஹாட்டாட்டுக்கு கார்லோஸ் ஒரு இரகசியச் செய்தியை சங்கேத மொழியில் அனுப்பி வைத்தான்.

"பிரிட்டனில் உள்ள துபாய் தூதர் நல்ல குறி. கடத்தினால் சுளையாகப் பணம் கறக்கலாம். துபாயிடம் இல்லாத பணமா? உத்தரவு தந்தால் உடனடியாக ஒழுங்குகளில் இறங்க வசதியாக இருக்கும்."

அதுதான் செய்தி. தளபதி வாடி ஹாட்டாட்டுக்கும் அந்தத் திட்டம் பிடித்துவிட்டது.

உடனடியாகப் பதில் அனுப்பினார்.

"நல்ல யோசனை. முன் ஏற்பாடுகளை முதலில் செய்யவும். அனைத்தும் தயாரானவுடன் அறிவிக்கவும்."

கார்லோஸுக்கு கொள்ளை மகிழ்ச்சி இலண்டனுக்கு புறப்பட ஆயத்தமானான் கார்லோஸ்.

★✦★

## நோட்டமிடும் உளவுப் பிரிவு

எழுதுவது
ரசிகன்



"பங்களா பிடித்திருக்கிறதா?" என்று கேட்டார் உரிமையாளர்.

அந்த விசாலமான பங்களாவை அன்ரன் பௌலியரும், அவருடைய மனைவியும் 'பரவாயில்லை' என்பது போல தமது தோள்களை குலுக்கினார்கள்.

பங்களா கைமாறியது. தம்பதிகள் குடியேறினார்கள்.

திருவாளர் அன்ரன் பௌலியர் தனது மனைவியை தன்னோடு அணைத்துக்கொண்டு உதடுகளால் அவள் இதழ்களை தேடிச் சென்றான்

"இந்தப் பெரிய பங்களாவில் நாம் மட்டும் தனியாகவா இருக்கப்போகிறோம்?!" என்று வியந்தவளை, விழிகளுக்குள் பார்த்தபடி திருவாளர் அன்ரன் பௌலியா சொன்னான்:

"வருவார். இன்னும் ஒரு விருந்தாளி வருவார். சாதாரண விருந்தாளியல்ல. வி.ஐ.பி. விருந்தாளி."

"யார் அது?"

"அவசரப்படாதே. அறியத்தானே போகிறாய். இப்போது நம்மை நாம் அறிவோம்!" என்று அவள் இடுப்பிலே கிள்ளினான்-அன்ரன் பௌலியா என்ற பெயரிலே பங்களாவை வாடகைக்கு எடுத்துக் கொண்ட கார்லோஸ்.

மனைவியாக நடித்தவள்-நடியா. கார்லோஸின் காதலிகளில், கார்லோஸைப் பற்றி-அவனது மறுபக்கம் பற்றி அறிந்து கொண்டவள் நடியா.

அவளோடு வந்து இலண்டனில் ஒரு பங்களாவை வாடகைக்கு பிடித்திருந்தது-ஒரு திட்டத்தோடுதான்.

துபாய் தூதரை கடத்திவந்து வைத்திருக்க ஒரு வீடு வேண்டாமா? பெரிய பங்களா என்றால் பொலிசாரும் சந்தேகப்பட மாட்டார்கள்.

மேற்கு லண்டனில் நொட்டிங் ஹில் என்ற பகுதியில் பங்களா சகல வசதிகளுடனும் இருந்தது.

"ஆபத்து ஒன்றுமில்லையே?" என்றாள் நடியா கார்லோஸின் மார்பில் சாய்ந்து கொண்டு.

"ஆபத்தா? இருக்கிறது. அந்த ஆபத்து நீதான்." என்று கண்ணடித்தான் கார்லோஸ். நடியாவை கைகளில் அள்ளிக் கொண்டு போய், பங்களாவின் விசாலமான படுக்கையறையின் கதவடைத்தான் கார்லோஸ்.

விடிந்ததும் உற்சாகமாக எழுந்து, இன்னும் எழாமல் தூங்கிக் கொண்டிருந்த நடியாவின் நெற்றியில் முத்தமிட்டு, சிலிர்த்துக் கண் திறந்தவளுக்கு 'குட் மோனிங்' சொல்லிவிட்டு, குளித்து முடித்துப் புறப்பட்டான். குளிர் சற்று குறைந்திருந்தது.

தளபதி வாடி ஹாட்டாட் லண்டனுக்கு அனுப்பும் தகவல்களை கார்லோஸுக்கு வழங்கவென்றே ஒரு ஆளை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அவனுக்கு கார்லோஸ் தங்கியிருக்கும் இடம் தெரியாது. கார்லோஸ் வந்தால் தகவல் கொடுப்பது மட்டும்தான் வேலை.

தளபதி வாடி ஹாட்டாட் தகவல் அனுப்பியிருந்தார்.

"மௌக்கார்பெல் பாரிஸ் போகிறான். அங்கு போய் சந்திக்கவும். விபரங்களை கூறியிருக்கிறேன்."

நடியாவை பங்களாவில் இருக்கச் சொல்லிவிட்டு, விமானத்தில் பாரிஸ் நகருக்குப் போனான் கார்லோஸ்.

❧ ❤ ❢ ❧

பாரிஸ் விமானநிலையத்தில் ஒரு அதிகாரிக்கு கார்லோஸ் மீது சந்தேகம் வந்துவிட்டது.

"தயவு செய்து உங்கள் கடவுச்சீட்டைத் தரமுடியுமா?" "ஓ..தாராளமாக!" கொடுத்துவிட்டு ஒரு சிகரெட் பற்றவைத்துக் கொண்டான் கார்லோஸ்.

கடவுச் சீட்டு ஈக்குவேடர் நாட்டுக்கு உரியது. அதிகாரியின் முகத்தில் இருந்த சந்தேகம் தொலைந்துபோனது.

"சிரமத்திற்கு மன்னிக்கவும். நன்றி"

"நோ...உங்கள் கடமையைத்தானே செய்தீர்கள்!" கார்லோஸ் நழுவினான்.

கார்லோஸ் பாரிஸ் வந்து சேர்ந்த மறுநாள்தான் மௌக்கார்பெல் வந்து சேருவதாக ஏற்பாடு.

ஆனால், மூன்று நாட்களாகியும் அவன் வந்து சேரவில்லை. பொறுமையிழந்த கார்லோஸ் தளபதி வாடி ஹாட்டாட்டுடன் தொடர்பு கொண்டான்.

அங்கிருந்து தளபதி வாடி ஹாட்டாட் செய்தி அனுப்பினார்: "மௌக்கார்பெல் பாரிஸ் புறப்பட்டு இரண்டு நாளாகிவிட்டன. சந்திக்கவும்."

கார்லோஸுக்கு சந்தேகம் பிடித்துவிட்டது. ஏதோ தவறு நேர்ந்துவிட்டது. 'மௌக்கார்பெல் எங்கே?' கார்லோஸ் யோசித்தான்.

விடை இரண்டு நாளில் கிடைத்தது. பாரிசிலுள்ள ரு ரௌலியர் இல்லத்தில் தனது காதலிகளைச் சந்திக்கப் போயிருந்தான் கார்லோஸ்.

காதலிகள் இருவருக்கும் இடையே கார்லோஸ் இல்லாத நாட்களில் விரிசல் ஏற்பட்டிருந்தது.

இருவரையும் சமாதானம் பண்ணி வைக்காவிட்டால் ஆளாளுக்கு புகார் சொல்லி கார்லோஸின் மண்டையை வெடிக்கவைத்து விடுவார்கள் போல் இருந்தது.

பகல் உணவை இருவருடனும் உண்பது. அப்போது இருவருக்கும் இடையே சமரசம் செய்து வைப்பது என்று முடிவெடுத்தான் கார்லோஸ்.

பகல் உணவுக்கு தயாராகிக்கொண்டிருந்தபோது, மௌக்கார்பெல் திடீரென்று வந்து சேர்ந்தான்.

கார்லோஸுக்கு ஆச்சரியம். மௌக்கார்பெல்லின் முகத்தில் களைப்பும், பதட்டமும் ஒன்றாகத் தெரிந்தன.

மரியாவுக்கும், நான்சிக்கும் சந்தேகம் வராமல் தனியறை ஒன்றுக்குள் மௌக்கார்பெல்லை அழைத்துப் போனான் கார்லோஸ்.

வழக்கமான அதிகாரத் தோரணையை சுத்தமாக இழந்துவிட்டு, பேசுவதற்கே தடுமாறிய மௌக்கார்பெல்லை பார்த்தபோது, 'இவனா பி.எஃப்.எல்.பி.யின் ஐரோப்பிய நடவடிக்கைகளின் தளபதி?' என்று கார்லோஸுக்கே சந்தேகம் வந்துவிட்டது.

திக்கித் திணறி மௌக்கார்பெல் சொன்ன தகவல்கள் கார்லோஸை கதிகலங்கவைத்துவிட்டன.

பெய்ரூட்டிலிருந்து பாரிஸ் வரும் பயணிகள் மீது கடும் கண்காணிப்பு இருப்பது வழக்கம். பாலஸ்தீனக் கெரில்லாக்களை தடுக்கவே அந்த உஷார்.

அது தெரிந்திருந்தும் பெய்ரூட்டிலிருந்து பாரிஸ் விமான நிலையத்தில் நேரடியாக வந்திறங்கினான் மௌக்கார்பெல்.

ஃபிரான்ஸ் உளவுப் பிரிவான DST யின் பார்வையில் பட்டுவிட்டான்.

மரியாதையோடு அழைத்துப் போய் கைப்பையை சோதனையிட்டார்கள்.

மூன்று போலி கடவுச் சீட்டுக்கள் மாட்டின. மேலும் துருவ, சங்கேத மொழியில் எழுதப்பட்ட குறிப்புக்கள் இருந்தன.

மௌக்கார்பெல்லை தனியறையில் அமர்த்திவிட்டு கடவுச் சீட்டுக்களோடும், கைப்பற்றப்பட்ட ஆவணங்களோடும் வெளியே போய், பதினைந்து நிமிடத்தில் திரும்பி வந்தார்கள்.

ஆவணங்ளை கொடுத்துவிட்டு, கடவுச் சீட்டுக்கள் பற்றி விசாரித்தார்கள். தனது நண்பர் ஒருவர் தந்தனுப்பியவையே அவை என்றும், அவை கடவுச் சீட்டுக்கள் என்று தனக்குத் தெரியாது என்றும் சொன்னான் மௌக்கார்பெல்.

"அதனை ஒப்படைக்க வேண்டிய முகவரி சொல்லுங்கள்?"

"நான் தங்கியிருக்கும் ஹோட்டலின் பெயரை நண்பர் அறிவித்திருப்பார். உரியவர் அங்கு வந்து வாங்கிக் கொள்வார்."

"ஓ.ஹோ."

ஃபிரான்ஸ் உளவு நிறுவனம் யோசித்தது. கடவுச் சீட்டுக்களை மட்டும் எடுத்துக் கொண்டு, எச்சரித்துவிட்டு மௌக்கார்பெல்லை விடுதலை செய்தது.

மௌக்கார்பெல் இரண்டு நாட்கள் ஒரு ஹோட்டல் எடுத்து தங்கிவிட்டுத்தான் இங்கு வந்திருக்கிறான்.

மௌக்கார்பெல் எல்லாவற்றையும் விபரித்துக்கொண்டிருக்க, கார்லோஸுக்கு அவன் மீது இருந்த வெறுப்பு பல மடங்கு அதிகரித்தது.

'முக்கிய ஆவணங்களை கைப்பையில் கொண்டு திரிந்திருக்கிறானே முட்டாள்' என்று கோபம் வந்தது.

"அந்த ஆவணங்களை அவர்கள் பிரதி எடுத்திருக்கலாம் என்று நினைக்கிறேன்," என்றான் கார்லோஸ். "வாய்ப்பில்லை" என்று மறுத்தான் மௌக்கார்பெல். அவனை ஓங்கி அறையலாம் போல் இருந்தது கார்லோஸுக்கு.

கைப்பையை பத்திரமாக வைத்திருக்குமாறு கார்லோஸிடம் கொடுத்தான் மௌக்கார்பெல்.

அதற்குள் இருந்த ஆவணங்களில் என்ன தகவல்கள் இருக்கின்றன என்று அறிய விரும்பினான் கார்லோஸ்.

மௌக்கார்பெல் பதில் சொன்னபோது கார்லோஸ் தன்னை மறந்து, அவன் தனது பொறுப்பாளர் என்பதையும் மறந்து, "சுத்த முட்டாள் நீ!" என்று கூவியே விட்டான்.

அதேநேரம் வெளியே ரு ரௌலியர் இல்லத்தை ஃபிரான்ஸ் உளவு நிறுவன ஆள் ஒருவர் கவனித்துக் கொண்டிருந்தார்.

(தொடர்ந்து வரும்)

## ஹலோ டாக்டர்

## உதட்டிலே என்ன காயம்?



"வணக்கம் டாக்டர்! இன்று உதடுகள் பற்றிய ஆராய்ச்சி."

"என்ன..?"

"உதட்டு நோய் தொடர்பான கேள்விகள் என்று சொல்ல வந்தேன்."

"அதுதானே பார்த்தேன். கேளுங்கள்."

"சிலருக்கு பதட்டமோ, அதிர்ச்சியோ ஏற்பட்டால் கீழ் உதட்டில் ஒருவித எரிச்சல் ஏற்படுகிறது. பதட்டத்தினாலும் உதட்டுப்புண் வருமா டாக்டர்?"

"உதட்டுப் புண்ணை ஏற்படுத்தும் வைரஸ் உணர்வாலும் ஏற்படக்கூடியது என்பதால் சோர்வு, பதட்டம் போன்ற உணர்ச்சிகளால் உதட்டுப்புண் வரும் வாய்ப்புள்ளது."

"உதட்டுப்புண் வந்ததும் அதைத் தடுக்க முடியாதா டாக்டர்?"

"முடியாது. வலியைக் குறைக்க மருந்து சாப்பிடலாம். அது உடைந்து காயும் வரை பொறுமையாகத்தான் இருக்க வேண்டும்."

"உதட்டு வெடிப்பு எப்படி ஏற்படுகிறது டாக்டர்?"

"'ஹார்பஸ் சிம்பலக்ஸ்' என்னும் வைரஸ் கிருமியால் ஏற்படுகிறது. இதன் தாக்குதலைத் தடுக்க நம் உடலிலேயே பாதுகாப்பு முறை உள்ளதால் ஒரிரு நாட்களில் குணமாகிவிடுகிறது. குழந்தைகளுக்கு வந்தால் தாங்க முடியாது. வலி எரிச்சல் என்பன ஏற்படும்."

"பனி வெடிப்பு என்று இதனை அழைப்பது ஏன் டாக்டர்?"

"அது காலத்தினால் ஏற்பட்ட பெயர். பனிக்காலத்தில் நம் உடலின் எதிர்ப்பு சக்தியை மீறி வைரஸ் தாக்கும். அதே போல தொண்டைக் கோளாறு, இதயக் கோளாறு, விஷக்காய்ச்சல் போன்ற சமயங்களிலும் வைரஸ் கிருமியின் தாக்குதல் அதிகமாக இருக்கும். அப்போது நம் உடலில் உள்ள பாதுகாப்பு சக்தியை முறியடித்துவிட்டு வைரஸ் வெற்றி பெற்றுவிடும். உதட்டில் வெடிப்பு ஏற்படும்."

"குழந்தைகளுக்கு முத்தம் கொடுத்தால் உதட்டுப்புண் ஏற்படுகிறதே?"

"குழந்தைகளின் மென்மையான உதட்டில் எளிதாக வைரஸ் புகுந்துவிடும். அதனால், அடுத்தவர் முத்தம் தருவது அனுமதிக்கப்படக்கூடாது. அதுவும் உதட்டில் முத்தமிட்டால் உதட்டுப்புண் ஏற்பட பெரும்பாலும் வாய்ப்புண்டு. அதனால் குழந்தைகளுக்கு உதட்டில் முத்தம் கொடுப்பதை தடுக்கவேண்டும்."

"உதட்டுப் புண்ணால் ஆபத்து ஏற்படுமா?"

"இல்லை. ஆனால், புண் மோசமாக இருக்கும் போது, புண்ணைத் தொட்டால் பரவும் அபாயமும் உண்டு."

"உதட்டுப் புண்ணுக்கு சிகிச்சை இல்லையா டாக்டர்?"

"இதற்கு சிகிச்சை என்று தனியாகக் கிடையாது. உதட்டுத் தோலில் வைரஸ் நுழைந்துவிட்டால் அதை அழிக்க மருந்து தரப்படுகிறது. அம்மைக்கு தரப்படும் தடுப்புசி மருந்தை தருவார்கள். ஆனாலும் முழுக் குணம் ஏற்படாது. படுக்கையில் ஓய்வெடுத்து, வெயில், காற்று படாமல் உதட்டைப் பாதுகாக்க வேண்டும். உதட்டில் வெடிப்பு ஏற்படும் முன்னரே தடுப்புச் சிகிச்சை இப்போது உள்ளது."

"வருமுன் தடுக்க வேண்டுமானால், அறிகுறி என்னவென்று தெரியவேண்டுமே?"

"அறிகுறி இரண்டு நாட்களுக்கு முன்னரே தெரிய ஆரம்பித்துவிடும். உதட்டில் ஒரிரு பகுதியில் சுரீரென்று எரியும். அப்போதே மருந்துவரிடம் காண்பித்து 'லோஷன்' தடவலாம். புண் பெரிதானால் மஞ்சள், வெள்ளை சீழ் வரும். பொறுமையாக இருந்தால் மூன்று நாட்களில் புண் உடைந்து குணமாகத் தொடங்கும்."

"ஓ.கே. டாக்டர். உதட்டுப் புண்ணுக்கு விளக்கம் சொன்னீர்கள். உதட்டுப் புன்னகைக்கு ஒரு ஜோக் சொல்லுங்களேன்."

"ஒப்பரேசன் தியேட்டரிலிருந்து டாக்டர் அழுதுகொண்டு வெளியே வாறாரே! என்ன ஆச்சு? என்று நர்சிடம் கேட்டாராம் ஒருவர்."

"அதற்கு நர்ஸ் என்ன சொன்னாராம்?"

"ஒன்றுமில்லை, முதன் முதலாக ஒரு ஒப்பரேசன் சக்ஸஸ் ஆகியிருக்கு, அந்த சந்தோசத்திலை ஆனந்தக் கண்ணீர்," என்றாராம் நர்ஸ். போதுமா?"

"போதும், வருகிறேன் டாக்டர்."

## உஷாரான டயானா



இளவரசி டயானா பி.பி.சி. தொலைக்காட்சிக்கு பேட்டியளித்து மேலும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டார்.

டயானாவை இடையில் சில காலம் மறந்துவிட்டு தன்பாட்டில் சென்றுகொண்டிருந்த உலகத்தை காதில் பிடித்து நிறுத்தி, தன்னைக் கவனிக்கச் செய்திருக்கிறார் டயானா.

தன்னை எல்லோரும் கவனிக்க வேண்டும் என்பதில் டயானாவுக்கு அலாதிப்பிரியம்.

இறுக்கமான மினி உடைகள் என்றாலும் டயானாவுக்கு கொள்ளை ஆசை. மினி உடையில் காரில் சென்று டயானா இறங்கும் காட்சியைக் காணவே ஏகப்பட்ட கூட்டம். போதாக்குறைக்கு கமராக்களின் கண் சிமிட்டல்கள், இலண்டனில் உள்ள நண்பி ஒருவர் வீட்டுக்கு டயானா சென்று இறங்கும்போது எடுக்கப்பட்டது இக்காட்சி.

கமராக்கள் கண் திறந்து காத்திருப்பதை அறிந்து கொண்ட டயானா வெகு உஷாராகத்தான் காரில் இருந்து இறங்குகிறார்.

www.padippakam.com

# 4 வயதில் நெத்தியடி


ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தை காட்டுவதெல்லாம் சரிப்பட்டுவராது. கன்னமே காணாமல் போய்விடும். அடிக்கு அடி கொடு. புகுந்து தூள் பண்ணு. அதுதான் மரியாதை. ஆகையினால் யாவரும் தற்காப்புக் கலை கற்றுக் கொள்மின்.

படத்தில் காலை உயரத் தூக்கி உதைக்கும் குட்டிப் பெண்ணுக்கு ஆக நாலே நாலு வயது. பெயர், கோகிலா. இந்தியாவில் ஆந்திராவின் விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த ராமராவ், துளசிவேணி தம்பதிகளின் செல்ல மகள்.

கோகிலா பிறந்தபோது பெற்றோருக்கு ஒரே கவலை. அவளது கால்கள் சீராக இருக்கவில்லை. ஒப்பரேசன் செய்தும் கால்கள் முழுதாகச் சீராகவில்லை. கோகிலாவை மூன்று வயதிலேயே காராத்தே பயிற்சியில் சேர்த்து விட்டனர். 14 மாதங்களில் அந்தப் பேராச்சரியம் நிகழ்ந்தது. கால்கள் சீரானது மட்டுமல்ல, கராத்தேயில் ஒரு கலக்குக் கலக்கி, கராத்தேயில் முதல் நிலைத் தகுதிக்கான கறுப்புப் பட்டியையும் பெற்றுவிட்டாள் கோகிலா.



உலகில் 4 வயதில் கறுப்புப் பட்டி பெற்ற கராத்தே சாதனையாளர் என்று கூற கோகிலாவை விட்டால் வேறு யாரும் இல்லை. இப்போது கோகிலாவின் பெயரை கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்ய தகுந்த ஆதாரங்களோடு தகவல் அனுப்பியிருக்கிறார்கள். கடுகு சிறிது காரம் பெரிது.



# கறுப்பில்லை வெளுப்புமில்லை

மைக் கோல்போர்னுக்கு 48 வயது. விபத்தொன்றில் தனது செல்ல மகனை பறி கொடுத்து விட்டார். மிருகக் காட்சிச் சாலை பொறுப்பாளரான மைக் அந்தச் சோகத்தோடு கொரில்லாக் குரங்குக் கூட்டினருகே குந்தியிருந்தார். திடீரென்று அவரது தோளில் ஒரு கை விழுந்து வருடியது. திரும்பிப் பார்த்தால் கொரில்லாக் குரங்கார் நடியாதான் அது.

நடியாவின் கண்களிலும், வருடலிலும் ஒரு பரிவு. ஆறுதல் சொல்ல அதனிடம் வார்த்தையில்லையே தவிர, மனது இருந்தது. நெகிழ்ந்து போனார் மைக். அன்று முதல் நடியாதான் மைக்கின் பிள்ளையானது. அப்படி ஒரு ஒட்டுதல். நிறபேதம் மட்டுமல்ல, இன பேதம், உயர்திணை அஃறிணை பேதமும் பறந்து போனது. அன்புக்குண்டோ அடைக்கும் தாழ்.

# துள்ளும் மீன்



அமெரிக்காவின் புளோரிடா மியாமி கடலில் சுழியோடி பயிற்சியெடுத்துக் கொண்டிருந்த மிஸ்டர் டேவிட் உடைய மூக்கில் யாரோ சுரண்டுவது போல் இருக்க என்ன அது... அட... அழகிய மீன். நீருக்கடியில் செல்லும் போது தெளிவாகத் தெரியப் பயன்படும் கண்ணாடி உடைந்துவிட்டது. அந்த உடைவின் மூலம் உள்ளே வந்து விட்டது மீன். கண் தப்பியது பெரும் புண்ணியம். அப்படியே நீருக்கு வெளியே வந்த போது புகைப்படம் எடுத்தவரும் பராட்டுக்குரியவர்.

# அதேநேரம்–அதே காலில் வித்தியாசமான இரட்டையர்

இரட்டையர்கள் சிலரது வாழ்க்கையில் அபூர்வ சம்பவங்கள் நடப்பதுண்டு. அப்படியும் நடந்திருக்குமா என்று நாமெல்லாம் சந்தேகப்படும்படியான சம்பவங்களாக அவை இருக்கும்.

இங்கிலாந்தில் உள்ள நோட்டிங்ஹாம் என்னும் பகுதியைச் சேர்ந்த இரட்டையர்கள் இயான்-ஜோர்பொன். இருவருக்கும் சிறு வயது முதலே ஒரு அபூர்வ ஒற்றுமை இருந்து வருகிறது. இயானுக்கு தலையிடி வந்தால், ஜோர்பொன்னுக்கும் தலையிடி வந்து ஒட்டிக் கொள்ளும். ஜோர்பொன்னுக்கு காதலிக்கும் 'மூட்' வந்துவிட்டால், இயானும் டிப்டாப்பாக வெளிக்கிட்டு தனது காதலியை கவனிக்கப் புறப்பட்டுவிடுவார்.

இரட்டையர் இருவருமே உதைப்பந்தாட்ட வீரர்கள். ஆனால் வெவ்வேறு குழுக்களில் விளையாடுபவர்கள்.

சொல்லிவைத்தது மாதிரி இருவரது குழுக்களுக்கும் ஒரே தினத்தில் வெவ்வேறு மைதானத்தில் போட்டிகள் இருந்தன. இயான் விளையாடிக் கொண்டிருக்கும் போது தரையில் விழுந்து காலில் பலத்த முறிவு. அதே நேரம் வேறொரு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த ஜோர்பென்னுக்கும் எதிர் தரப்பு வீரர் ஒருவர் மீது மோதி வீழ்ந்து காலில் முறிவு ஏற்பட்டுவிட்டது. அது மட்டுமல்ல, இருவருக்குமே இடது காலில் தான் முறிவு ஏற்பட்டது.

விசித்திரமான இந்தச் சம்பவத்தை கேள்விப்பட்ட பத்திரிகையாளர்கள் இருவரையும் ஓய்வெடுக்கவே விடாமல் புகைப்படம் எடுத்து அன்புத் தொல்லை கொடுத்துவிட்டார்கள்.




# வழிகாட்டும் கார்

படத்தில் இருப்பது நவீன கார். ஜப்பான் நிறுவனம் ஒன்றின் தயாரிப்பு. இதில் உள்ள புதிய வசதி யாதெனில்: காருக்குள் ஒரு கம்பியூட்டர் திரை தெரிகிறதல்லவா. அதிலே பல சமாச்சாரங்கள் இருக்கின்றன. பின்னாலே வரும் வாகனம், அருகில் செல்லும் வாகனம், எதிரில் வரும் வாகனம் அனைத்தும் கம்பியூட்டர் திரையில் விழுந்து கொண்டிருக்கும். அருகில், முன்னால், பின்னால் எல்லாம் நன்கு கவனித்து என்ன வேகத்தில் சென்றால் நல்லது என்ற சங்கதியையும் கம்பியூட்டர் சொல்லும். தெருக்களின் வரைபடங்களை கம்யூட்டரில் கொடுத்து வைத்திருந்தால் வாகனம் செல்லும் போதே கம்பியூட்டர் திரையில் வழி காட்டப்பட்டுக் கொண்டிருக்கும். ஜப்பானின் இளைஞர்களுக்கும், இளைஞிகளுக்கும் ரொம்பப் பிடித்து விட்டதாம் இந்தக் கார். தற்போது அறிமுகப்படுத்துவதற்காக 50 கார்களை மட்டுமே வெள்ளோட்டம் விட்டுள்ளார்கள்.



# வீசாதே அழகாகும்

பழுதான பல்புக்களை வீசிவிடாமல் கலைப் பொருளாக்கி வருகிறார் ஒரு பொறியியலாளர். அவரது பெயர் மிஸ்டர் டான். பல்புக்களின் அடிப் பாகத்தை பக்குவமாய் பிரித்து உள்ளே மொடல் பொம்மையை வைத்து முடிக்க பல மணி நேரம் செல்கிறது. ஆனால் என்ன, நல்ல கலைப் பொருள் கிடைக்கிறது என்ற திருப்தி போதுமல்லவா. நீங்களும் பல்புகளை வீசாதீர்கள் என்ன!





படிப்பகம்

# சுகன்யாவின் படங்கள்

ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்தவர் சுகன்யா. தற்போது அவரை அதிகமாகக் காணவில்லையே என்று தேடுகிறவர்களுக்கு இந்தத் தகவல்.

மகாபிரபு, புதிய பராசக்தி, இந்தியன், ஞானப்பழம், பரிவட்டம் ஆகிய படங்களில் மீண்டும் பிஸியாக நடித்துக் கொண்டிருக்கிறார் சுகன்யா.

வெளிவந்துவிட்ட 'மிஸ்டர் மெட்ராஸ்' படத்தில் தனது திறமைக்கு தீனி கிடைக்கவில்லை. ஞானப்பழம், பரிவட்டம், ஆகிய படங்கள் வெளியானால் தனது திறமை வெளிப்படும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார் சுகன்யா.

தனிக் கதாநாயகியாக கொடி கட்டிப் பறந்த சுகன்யா தற்போது இரண்டு கதாநாயகிகள் உள்ள படங்களில் நடிக்க தயங்குவதேயில்லை.

# ஹீராவுக்கு அதிர்ச்சி

எப்படித்தான் கவர்ச்சியான போஸ் கொடுத்துக் கலக்கினாலும் இந்தியில் ஒரு நல்ல இடம் கிடைக்கவில்லை. துணிச்சல்கார நடிகை என்று பெயரெடுத்ததுதான் மிச்சம். அதனால்தானோ என்னவோ சின்ன தாய் ஒரு துணி மட்டும் போட்டுக் கொண்டு நடிக்கவே பல அழைப்புக்கள் வந்ததாம். வாழ்க்கையே வெறுத்தது மாதிரி சென்னைக்கே திரும்பி விட்டார் ஹீரா.

# காதோடு சொல்லுகிறோம்

'விக்ர' இயக்குநரால் வஞ்சிக்கப்பட்ட 'ரோ'னா 'தி'னா நடிகை இப்போது கமராக்காரர் ஒருவரைக் காதலித்து வருகிறார். அடிக்கடி கிளிக் பண்ணி... மன்னிக்கவும், 'மீட்' பண்ணிக் கொள்கிறார்கள்.

'மணி' யான இயக்குநரின் காதலியான மலரின் பெயர் உள்ள நடிகைக்கு சமீபத்தில் ஒரு சிகிச்சை நடந்திருக்கிறது. கருப்பையை சுத்தம் செய்யும் சிகிச்சை. தற்போது ஆரோக்கியமாக இருக்கிறார். டும். டும்மை பொறுத்து வைத்துக் கொள்ளலாம் என்று கூறிவிட்டாராம் 'மணி' அதுதான் சுத்தப்படுத்தல் சிகிச்சை.

தமிழில் இருந்து வடக்கே சென்ற பிரபல நடிகைக்கு வாய்ப்பில்லை. இப்போது வேறு தொழிலை ஆரம்பித்துவிட்டார். உயர்மட்ட இடங்களில் ஏதாவது காரியம் சாதிக்க வேண்டுமா? கைக்குள் போட வேண்டியவர்களை மடக்கி காரியத்தைச் சாதித்துக் கொடுப்பாராம் நடிகை. அவரது பெயரில் 'தே' இருக்கிறது.

'க' வில் பெயர் தொடங்கும் மூன்றெழுத்து பிரபல தமிழ் நடிகருடன் எப்படியாவது ஒரு படத்தில் நடித்துவிடவேண்டும். அப்படிச் சொல்லிக் கொண்டிருவப்பவர் யார் தெரியுமா? மீன் நடிகைதான். இதே நடிகை 'தே....மகன்' படத்தில் நடிக்க அழைத்த போது பிகு பண்ணியவர்.

'விசி' த்திரமான கவர்ச்சி நடிகை விட்டில் இருக்கும்போதும் கவர்ச்சியாகவே உடை அணிந்து காணப்படுகிறாராம். பேட்டிக்குச் செல்லும் நிருபர்கள் படம் எடுக்க முற்பட்டால் 'ஃபிளீஸ் வேண்டாமே' என்று சொல்லி.... அதென்ன அது.. ஆ... வெட்கப்படுகிறாராம்.

# இரட்டை வேடத்தில் பிரசாந்த்

கல்லூரிவாசல், படகோட்டி பாபு, ஜோக்கர், வைரம், கிருஷ்ணா ஆகிய படங்கள் பிரசாந்தின் கைவசம் இருக்கின்றன.

இளையராஜாவின் அண்ணன் மகன் தயாரிக்கும் புதிய படமொன்றிலும் நடிக்கப் போகிறார் பிரசாந்த். அதில் பிரசாந்த்துக்கு இரட்டை வேடம். கதை விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.



ஜெயசுதா
படம் : அந்திமந்தாரை

# நக்மாவின் வாரிசு

நக்மாவுக்கு இரண்டு தங்கைகள். ராதிகா,ஜோதிகா, அவர்களில் ராதிகா படத்தில் நடிக்க ஆசைப்பட்டு அக்காவிடம் அனுமதி கேட்டார். அக்கா நக்மா பச்சைக் கொடி காட்டிவிட்டார். தெலுங்குப் பட அதிபர்களிடம் சிபாரிசும் செய்திருக்கிறார். நக்மாவின் சிபாரிசு அல்லவா. வாய்ப்புக் கிடைக்காமல் போகுமா? கிடைத்துவிட்டது. வெங்கடேஷ் நடிக்கும் தெலுங்குப் படமொன்றில் திறமையைக் காட்டப் போகிறார் ராதிகா. அது சரி ராதிகா தமிழுக்கு வருவதென்றால் பெயரை மாற்றிக்கொள்ள வேண்டியிருக்குமே.



முகப்பில்
ஊர்வசி
படம்:- அருவாவேலு
ஏ.ஆர். ரஹ்மான்



விக்னேஷ்,அமிர்தா
படம் : டேக் இட் ஈசி ஊர்வசி

# கனகா தனியாக

'பெரிய குடும்பம்' படம் சூப்பர் ஹிட். அதில் நடித்துள்ள கனகாவுக்கும் சூப்பர் குஷி.

பெரிய குடும்பம் படத்தில் கனகா நடித்துக் கொண்டிருந்தபோது அவரது அம்மா தேவிகா துணையாக வருவதில்லையாம். அதனால் மிகத் தாராளமாக நடித்து உடலைக் காட்டியிருந்தார் கனகா.

'பெரிய குடும்பம்' படத்தைப் பார்த்த தெலுங்குப்படத் தயாரிப்பாளர்கள் கனகாவை தேடி படையெடுக்கத் தொடங்கினார்கள்.

தெலுங்கில் இயக்குநர்களின் விருப்பம்போல கவர்ச்சி விஷயத்தில் ஒத்துழைத்துக் கொண்டிருக்கிறார் கனகா.

கவர்ச்சியே கைகொடுக்கும், கைநிறையவும் கொடுக்கும் என்பதால், இப்போதெல்லாம் படப்பிடிப்புக்கு மகளை தனியாகவே அனுப்பிவைக்கிறார் தேவிகா.

# மினி சினி

* 'பகம் பொன்' படத்தின் கதை- வசன கர்த்தாவான சீமான் முதன் முறையாக இயக்குநராக அரங்கேறும் 'பாஞ்சாலங் குறிச்சி' படத்தில் கதாநாயகனாக நடிக்கும் பிரபுவிற்கு இரண்டு ஜோடிகள். ஒருவர்- மதுபாலா. மற்றவர் 'கருத்தம்மா' மகேஸ்வரி.
* ஏ.வி.எம். நிறுவனம் தயாரிக்க அரவிந்தசாமி-பிரபுதேவா இணைந்து நடிக்கும் படத்திற்கு 'மின்சாரக் கனவுகள்' என்று பெயரிடப்பட்டுள்ளது. 'பம்பாய்' பட ஒளிப்பதிவாளரான ராஜீவ்மேனன் இயக்கும் இப்படத்தில் மீனா-கஜோல் கதாநாயகிகளாக நடிக்கிறார்கள்.
* முதன் முறையாக டி.ராஜேந்தர் இயக்கத்தில் 'இளங்காதலர்கள்' படத்தில் நடிக்கும் வடிவேலு. இந்தப்படத்தில் சொந்தக் குரலில் இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார்.
* நடிகர் 'திலகம்-மோகன்லால்' நெப்போலியன் மலையாளத்தில் நடித்து வரும் 'ஸ்வர்ணசாமரம்' படத்தில் மோகன்லாலுக்கு ஜோடியாக ரஞ்சிதா நடித்து வருகிறார். இப்படத்தில் மதுபாலாவும் நடித்து வருவது அறிந்ததே.
* ரேவதியின் கணவரான சுரேஷ்மேனன் இயக்கிய 'பாசமலர்கள்' படத்தை மலையாளத்தில் மொழிமாற்றி வெளியிடத்திட்டமிட்டுள்ளார்கள். மலையாளத்தில் இது 'சூர்யபுத்திரிகள்' என்ற பெயரில் வெளிவரவுள்ளது.
* கே.எஸ்.அதியமான் இயக்கும் 'தொட்டாச் சிணுங்கி' படத்தில் ஒரே ஒரு பாடல் காட்சியில் ரோஷாவும், கஸ்தூரியும் நடனமாடவுள்ளார்கள்.
* சரத்குமார் கதாநாயகனாக நடிக்கும் 'அரவிந்தன்' படத்தில் முதன் முறையாக நட்புக்காக ஒரு பாத்திரத்தில் நடிக்கவுள்ளார் பார்த்திபன். கௌரவ வேடத்தில் பார்த்திபன் இதுவரை ஒரு படத்திலும் நடிக்கவில்லை.
* 'கிழக்கு முகம்' படத்தில் கார்த்திக்கிற்கு ஜோடியாக நடித்து வருபவர் ரேஷ்மா. இவர் 'மாங்கல்யம் தந்துனானே', 'ஒண்ணா இருக்க கத்துக்கணும்' ஆகிய படங்களில் ஜீவா என்ற பெயரில் நடித்துள்ளார்.
* கே.டி.குஞ்சுமோன், கதிர் இயக்கும் 'காதல் தேசம்' படத்தையும், புதிய இயக்குநர் ரகுராஜ் இயக்கும் 'சக்தி' படத்தையும் தயாரித்துவருகிறார். 'சக்தி' படத்தில் வினித்-யுவராணியுடன் முக்கிய வேடங்களில் சிவகுமார்- ராதிகா நடிக்கின்றனர்.
* விஜய்-சங்கவி ஜோடியாக நடிக்கும் 'கோயமுத்தூர் மாப்பிள்ளை' படத்தை இயக்கி வருபவர் ரங்கநாதன். இவர் ஆர்.சுந்தர்ராஜன் இயக்கிய 'ஒயிலாட்டம்' படத்தில் கதாநாயகனாக நடித்தவர்.

# காதலன் பாணியில்

'காதலன்' படம் இந்தியிலும் வியப்பை ஏற்படுத்தியதால், காதலன் படப் பாடல்,ஆடல்களைத் தழுவி பல இந்திப் படங்கள் வெளிவந்து விட்டன.

தற்போது ஜாக்கிஷெராப், மனிஷா கொய்ராலா நடித்துவரும் படம் 'ராம்சாஸ்திரா', 'காதலன்' படத்தில் வரும் 'முகாப்லா' பாடல் காட்சியைப் போல ஸ்பெஷல் எபெக்டுடன் ஒரு பாடல் காட்சி 'ராம்' சாஸ்திரா' வுக்காக எடுக்கப்பட்டு வருகிறது. அதற்காக ஹொங்கொங்கில் தீவிர ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.



ஜாக்கி ஷெராஃப், மனிஷாகொய்ராலா
படம் : ராம்சாஸ்திரா

# இந்தியனில் ஒரு இரகசியம்

"அபூர்வ சகோதரர்கள்" படத்தில் குள்ள அப்புவாக நடித்தார் கமல். எப்படி நடித்தார் என்பதை இதுவரை படு இரகசியமாக வைத்திருக்கிறார்.

இப்போது மற்றொரு இரகசியம். இந்தியன் படத்தில் கமலுக்கு இரட்டை வேடம். அதில் ஒன்று பற்றி இரகசியம் காத்துவருகிறார் கமல். படம் வரும் வரை சஸ்பென்ஸ்.

'இந்தியன்' படம் கைவிடப் பட்டதாக திட்டமிட்டு வதந்தி கிளப்பியவர்களையும் சாடியிருக்கிறார் கமல். "இப்படியான கிசு-கிசுக்கள் பற்றி கவலையே படக்கூடாது. வயிற்றெரிச்சல் படுகிறவர்கள் வதந்தி கிளப்பத்தான் செய்வார்கள்" என்கிறார் கமல்.

# மீசையிழந்த பிரபு

'நாட்டாமை', 'முத்து' படங்களின் இயக்குநர் கே.எஸ்.ரவிகுமார் பிரபுவை வைத்து இயக்கிவரும் படம் 'பரம்பரை'.

படம் முழுக்க பிரபு பெரிய...ய...ய மீசையோடு தோன்றுகிறார். அதற்காக சொந்த மீசையை சுத்தமாக இழந்து விட்டார் பிரபு, பெரிய மீசையை ஒட்டி நடிக்கும் போது தடை இருக்கக் கூடாதல்லவா அதற்காகத்தான் அந்தத் தியாகம்.



'மலையாளத்தில்' கா
என்ற பெயரில் திரைம
சிறைக்கைதியாக ந
தமிழ் இளைஞன். அ
தப்பி இந்தியா வரை
பிரபு. கதாநாயகன்
அந்தமானில் ப
படமாக்கினார்கள்.
குதிரைகளைப் பா
அந்தமான் பொ
அந்தமானில்
வாழும் அவர்க
படப்பிடிப்பி
இந்தி நடி



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com




# ஊர்மிளா சொன்ன சங்கதிகள்

'ரங்கீலா' படத்தின் பின்னர் ஊர்மிளா மீது சிறு சிறு முத்திரை வெகு உறுதியாக பதிந்துவிட்டது.

அரை நிர்வாண போஸ் கொடுத்து இந்திப் படவுலகை கலங்கடித்தவர் மம்தா குல்கர்னி. அந்த மம்தாவே இப்போது ஊர்மிளாவை நினைத்துப் பயப்படுகிறார்.

தமிழில் 'இந்தியன்' படத்தில் கமலோடு தோன்றுகிறார் ஊர்மிளா என்ற செய்திக்குப்பின்னர் நக்மாவும் யோசிக்கத் தொடங்கிவிட்டார்.

ஊர்மிளாவின் பேட்டியைப் பாருங்கள். பதில்களிலும் கவர்ச்சி பளிச்.

**கேள்வி:-** 'ரங்கீலா' படப் பாடல்களில் படு கவர்ச்சி காட்டியிருக்கிறீர்கள். உங்களுக்கும் கவர்ச்சியின் மறு பெயரான மம்தாவுக்கும் இடையில் போட்டி நிலவுகிறதாமே?

**ஊர்மிளா:-** அப்படி எல்லாம் ஒன்றுமில்லை. படத்தின் இயக்குநர் என்ன சொல்கிறாரோ அதன்படி நடிக்க வேண்டும் என்று நினைப்பவள் நான். ஒரு நடிகையாக இருப்பதால் எல்லாவிதமான உடைகளையும் அணிந்துதான் ஆக வேண்டும். அதற்காக நான் ஒன்றும் வெட்கப்படவில்லை.

**கேள்வி:-** ரங்கீலாவில் உங்கள் நடிப்பைப் பார்த்துவிட்டு, உங்கள் குடும்பத்தார் என்ன சொன்னார்கள்?

**ஊர்மிளா:-** நான் ஆபாசமாக நடிக்கவில்லை என்பது அவர்களுக்குத் தெரியும். என்மீது அவர்களுக்கு முழு நம்பிக்கை இருக்கிறது.

**கேள்வி:-** 'ரங்கீலா' படக்காட்சிகளில் அளவுக்கு மீறிய உடைக்குறைப்பு ஏன்?

**ஊர்மிளா:-** ஒரு கடற்கரைக்குச் செல்கிறீர்கள். அங்கு எத்தனை பெண்கள் குட்டை உடைகளுடன் இருப்பதைப் பார்க்கிறீர்கள். சூழலுக்கு ஏற்ப உடையணியும் போது, காட்சிக்கு ஏற்ப உடையணிவது தப்பில்லை.

**கேள்வி:-** உங்களைப் பற்றி உங்கள் கருத்து?

**ஊர்மிளா:-** கடுமையாக உழைக்கக் கூடிய திறமையுள்ள, உணர்ச்சிகரமான ஒரு நடிகை நான். யார் மனதையும் புண்படுத்தக் கூடாது என்பது என் கொள்கை.

**கேள்வி:-** இனி உங்கள் படங்களில் எப்படிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்த விரும்புகிறீர்கள்?

**ஊர்மிளா:-** என்னுடைய திறமையின் எல்லாப் பக்கங்களையும் வெளிப்படுத்த விரும்புகிறேன். தீர்ப்பு சொல்லவேண்டியது ரசிகர்கள்தான்.

**கேள்வி:-** செக்ஸ் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

**ஊர்மிளா:-** அது அவரவரின் தனிப்பட்ட அந்தரங்கம். அதில் வேறு ஆட்கள் மூக்கை நுழைப்பது சரியல்ல. நான் எப்படி வாழ வேண்டும் என்பதை வேறு ஒருவர் தீர்மானிக்க முடியாது.

## தூண்டிவிடும் அப்பா

இயக்குநர் மணிவண்ணனுக்கு நடிப்பது நிரந்தர தொழிலாகிவிட்டது. மாமன் மகள் படத்தில் தனது மகள் மீனாவை காதலிக்க சத்யராஜுக்கு ஐடியா கொடுக்கிறார் மணிவண்ணன்.

'கல்லூரி வாசல்' படத்தில் தனது மகள் பூஜாபட்டை காதலிக்க பிரசாந்தை தூண்டிவிடுகிறார் மணிவண்ணன்.

தானும் ஒரு இயக்குநராக இருந்தாலும் பிற இயக்குநர்களின் படங்களில் நடிக்கும் போது அவர்கள் வேலையில் தலையிடுவதில்லை மணிவண்ணன்.




வந்தது வசந்த காலம்
பூமியில் புதிய கோலம்

சந்தன மரங்கள் தோறும்
மன்மதக் குயில்கள் பாடும்

இளமையே எழு
அழகையே தொழு
ஒரு காதல்
சங்கீதம் பாடு

மின்னலைப் பிடிக்க வேண்டும்
மேகத்தை உடுத்த வேண்டும்

வானத்தில் பறக்க வேண்டும்
ஆயிரம் சிறக்க வேண்டும்

பருவமே படை
சிறைகளை உடை
இது கண்ணன் சொல்லாத கீதை.

-கவிஞர் வைரமுத்து.

## பாடல் கசெட் இலவச

அமீர்கானும், மனிஷா கொய்ராலாவும் நம்பிக் கொண்டிருக்கும் படம், 'அக்கேலே ஹம் அக்கேலே தும்' படு பயங்கரமாகச் செலவழித்து விளம்பரம் செய்திருக்கிறார்கள். பம்பாய் சினிமா சஞ்சிகை ஒன்றுடன் 'பாடல் கசெட்டை' இலவசமாக விநியோகித்து அசத்தியிருக்கிறார்கள்.

பாடல்கள் படு பிரபலமாகியுள்ளன. நடனங்கள், பாடல்கள், முற்றிலும் இளமையின் ஆக்கிரமிப்பு. அது போதும் படம் வெற்றி பெற என்று நினைக்கிறார்கள்.

'ரங்கீலா' படத்தின் வெற்றியால் உற்சாகமாக இருக்கும் அமீர்கானுக்கு 'அக்கேலே ஹம் அக்கேலே தும்' மேலும் உற்சாகத்தை கொடுக்கிறதா என்பது படம் வெளியான பின்னர்தான் தெரியும்.

## ...க்கலாமா?

இணைந்து நடிக்கும் படம் ...யடு' என்பது தெரிந்த ...ப்பு பாடி ஆடுவது போல ...

...து சொல்லிபுட்டேன்
...து என்னணிக்கிட்டான்
...புடிச்சான் சண்டியடு
...புடிச்சான்...." என்று தொடர் ...

இசை தேவா ... திரைக்கு வரும் படம் இது. கே.ஆர்.விஜயா, செந்தில், ...ஷ்த்தல், வெண்ணிற ஆடை ...யோரும் நடிக்கின்றனர்.

## ரகுமானுக்கு பதவி உயர்வு

ஏ.ஆர்.ரகுமானின் கொடி இந்தியிலும் பறக்க ஆரம்பித்துவிட்டது. இந்த நேரத்தில் ஏ.ஆர். ரகுமான் வீட்டில் விசேஷம். அவருக்கு பதவியுயர்வு. அதாகப்பட்டது, அப்பாவாகப் போகிறார் ஏ.ஆர்.ரகுமான். சாயிரா கர்ப்பமாக இருக்கிறார்.

"இந்தியில் புகழ் பெற்றாலும் தமிழ் படவுலகில் தொடர்ந்திருப்பேன். வருகின்ற வாய்ப்பையெல்லாம் ஏற்றுக்கொள்வது என் பழக்கமல்ல. குறைவான படங்கள். நிறைவான இசை அதுதான் என் பாணி" என்கிறார் அவர்.

'முத்து' படத்தில் ரஜினிக்காக மிகுந்த ஈடுபாட்டோடு இசையமைத்தார் ஏ.ஆர். ரகுமான். இப்போது கமலுக்காக 'இந்தியன்' படத்திற்கு சிரத்தையோடு இசையமைக்கிறார்.

தனது படங்கள் அனைத்துக்கும் இளையராஜாதான் இசையமைப்பார் என்று கூறிய கமல் தனது முடிவை மாற்றிக் கொண்டார். 'நம்மவர்', 'குருதிப் புனல்' இரண்டிலும் மகேஷ் இசை பொழிந்தார். இந்தியனுக்கு ஏ.ஆர்.ரகுமான்.

ரகுமான் போட்டுள்ள இசை கமலுக்கும் பிடித்துவிட்டதாம். ஊர்மிளாவும் இருப்பதால் இசை துள்ளலாகவும், துள்ளவைப்பதாகவும் இருக்கும்.

## நேற்று அசுரன்–நாளை அரக்கன்

'அசுரன்' என்ற பெயரில் ஒரு படம் வெளிவந்தது ஞாபகமிருக்கலாம். இப்போது 'அரக்கன்' என்ற பெயரில் மற்றொரு படம் தயாராகிக் கொண்டிருக்கிறது.

இது மொழிமாற்றுப்படம். மலையாளத்தில் 'சூரியோதயம்' என்ற பெயரில் வெளியான படத்தைத்தான் தமிழில் 'அரக்கன்' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

மம்முட்டி, ரகுவரன், சவுக்கார் ஜானகி, வைஷ்ணவி, வினோதினி ஆகியோர் நடித்துள்ளனர்.

## அன்று குஷ்பு–இன்று நக்மா

நடிகை நதியா பிரபலமாக இருந்தபோது நதியா நதியா என்றொரு பாடல் வந்தது. பின்னர் குஷ்பு பிரபலமானபோது, கூடையிலே என்ன பூ குஷ்பு என்றொரு பாடல் கலக்கியது.

இப்போது 'நக்மா' சீசன். பார்த்தார் கங்கை அமரன். வேறு யாராவது எழுதித் தொலைப்பதற்கு இடையிலே முந்திக் கொண்டார்.

'பூஞ்சோலை' படத்திற்காக கங்கை அமரன் எழுதியுள்ள பாடலின் ஆரம்ப வரிகளைப் பாருங்கள், "நக்மா, நக்மா, நக்மா. இந்த நக்மா நம்ம கையில் சிக்மா..." என்று தொடர்கிறது பாடல். வரலாற்று முக்கியவத்துவம் வாய்ந்த (?) இப்பாடலுக்கு இசையமைத்துள்ளார் இளையராஜா.

## மூக்குடைஞ்ச பொன்னம்மா

'கிழக்கு முகம்' படத்தின் படப்பிடிப்பு முடிவடையும் கட்டத்தில் இருக்கிறது. கார்த்திக், ரேஷ்மா இருவரும் கொஞ்சிக் குலவி ஆடிப்பாடும் காட்சிகள் படு அசத்தலாய் படமாக்கப்பட்டுள்ளதாம்.

'முத்து முத்து கண்ணம்மா மூக்குடைஞ்ச பொன்னம்மா...' என்னும் ஒரு கருத்தாழமுள்ள (?) பாடல் படத்தில் இடம் பெறுகிறது. ராதாரவி, ஆஷா, டெல்லிகணேஷ், ஆனந்தராஜ், சார்லி, வடிவுக்கரசி, அலெக்ஸ், மதுஸ்ரீ, குமரிமுத்து, சத்யப்பிரியா என்று ஒரு நட்சத்திரப் பட்டாளமே நடித்துக் கொண்டிருக்கிறது.

## அம்மா சத்யராஜ்

'மாமன் மகள்' படத்திற்காக முதன் முதலாக பெண் வேசம் போட்டுள்ளார் சத்யராஜ். அதற்காக அடி வயிறு முழுக்க ஷேவ் செய்ய வேண்டி ஏற்பட்டதாம். சத்யராஜின் அம்மாவாக சத்யராஜை நடிக்க வைத்துவிட்டார் இயக்குநர் குருதனபால். கவுண்டரோடு நடிக்க சத்யராஜின் உடல் முழுக்க இருக்கும் ரோமங்கள் தடையாக இருந்ததால், சேலை கட்டி நடித்துள்ளார்.



பிரபு, மோகன்லால்
படம் : சிறைச்சாலை

# வி சி ட்

## ...யார் நிலையில் சிறைச்சாலை

...னி என்ற பெயரில் வெளியாகும் அதே நேரத்தில், தமிழில் 'சிறைச்சாலை' ...கிறது. மலையாளத்திலும் தமிழ் பேசியே நடித்திருக்கிறார் பிரபு.

...ார் பிரபு. இந்திய சுதந்திரத்திற்காக போராடியவன் முகுந்தன் என்னும் ... சிறையில் அவனை அடைத்தார்கள். மூன்று முறை சிறையில் இருந்து ...ந்தான். உண்மையாகவே நடந்த சம்பவம் அது. முகுந்தனாக நடிப்பவர் ...ன்லால்.

...ப்பு நடக்கும்போது குதிரைகளையும் கொண்டு போய் காட்சிகளைப் ...ானில் இருக்கும் மக்கள் குதிரையைப் பார்த்தே கிடையாது. அதனால் ...ட்டம் திரண்டுவிட்டதாம். படப்பிடிப்பு முடிந்த பிறகு குதிரைகளை ... ஒப்படைத்துவிட்டு வந்து விட்டார்கள்.

...முங்குடியினரும் படத்தில் நடிக்கவைக்கப்பட்டிருக்கிறார்கள். காடுகளில் ...ண்டு பிடித்து நடிக்கவைப்பதில் பல நாட்கள் சென்றதாம்.

...முடிந்து திரைக்கு வரத் தயாராகிவிட்டது சிறைச்சாலை. ... கவர்ச்சியாக நடித்து ரசிகர்களுக்கு விருந்தளித்திருக்கிறார்.



படம் : கோயம்புத்தூர் மாப்ளே
விஜய், சங்கவி



படிப்பகம்

www.padippakam.com

# எதையும் சாதித்துக் கொள்ளும் சாமர்த்தியசாலியா நீங்கள்?

சிலர் எதிலும் வெற்றி காண்பார்கள்; சாதிக்க முடியாததை எல்லாம் சாதித்து விடுவர். 'அவர்களுக்கு அதிர்ஷ்டம் இருக்கிறது; அதனால் ஜெயிக்கிறார்கள், நமக்கு அதிர்ஷ்ட தேவதை கை கொடுப்பதில்லையே!' என்று நொந்து கொள்வதுதான் பலரது வழக்கமாக உள்ளது. உண்மையில் எந்த ஒரு விஷயத்திலும் சாதிக்க திறமை, விடா முயற்சி மட்டும் இருந்தால் போதாது. சாதிப்பதற்கு என சில சாதுர்யங்கள் தேவை. அனுபவம், திறமை இல்லாதவர்கள் கூட இத்தகைய சாதுர்யம் கைவரப் பெற்று இருந்தால் சாதித்து விடுவார்கள்.

உங்களுக்கு இருக்கிறதா இந்த சாதுர்யம்? அதையும் பார்த்து விடுவோமே!

கீழே உள்ள கருத்துகள் சரியா, தவறா என்று சொல்லிக் கொள்ளுங்கள். இந்த முறை நாம் எத்தனை 'தவறு' வருகிறது என்பதற்குத்தான் விடை பார்க்கப் போகிறோம்.

***சுய சோதனையை ஆரம்பிக்கலாமா?***

1.யாராவது, எந்த உதவியாவது என்னிடம் கேட்டால், எனது முதல் பதிலே, 'முடியாது' என்பது தான்.

2.எந்த ஒரு விஷயத்திலும் சடக்கென பேசி விட மாட்டேன். மனதில் நன்றாக சிந்தித்து அதன்படிதான் நடப்பேன். இதற்காக பெருமைப்படுகிறேன்.

3.அதில் முதலீடு செய்தால் இவ்வளவு லாபம் கிடைக்கும் இதில் போட்டால் இவ்வளவு பணம் கிடைக்கும் என்று ஆருடம் பார்த்தெல்லாம் பணம் போட மாட்டேன். வங்கியில் போட்டால் கணிசமான வட்டி கிடைக்கிறது. அது போதும். அதுவே பாதுகாப்பு என்று திருப்திப்படுபவன் நான்.

4.எந்த காரியத்தில் வெற்றி பெற வேண்டும் என்றாலும் நன்றாக உடை உடுத்திச் செல்ல வேண்டும். அப்பொழுது தான் நினைத்ததை சாதிக்க முடியும் என்பது என் கருத்து!

5.சிலர் எதற்கும் மசியவே மாட்டார்கள். சிலர் நம்ப முடியாத அளவுக்கு மாறி விடுவார்கள். இதை நான் பெரும்பாலான விஷயங்களில் பார்க்கிறேன்.

6.சில சமயத்தில் நான் செய்வது தவறு என்று தெரிகிறது. இருந்தாலும், என்னால் என் கோபத்தை அடக்க முடியவில்லை.

7.எத்தனை மணி நேரம் தாமதமாக வீடு திரும்புகிறேன் என்பதைப் பற்றி நான் கவலைப்பட மாட்டேன். தினமும் சரியான நேரத்திற்குள் அலுவலகத்துக்கு சென்று விட வேண்டும் என்று நினைப்பவன் நான்.

8.ஏதாவது புது பொறுப்பு வந்தால், அதை ஏற்க தயாராக இருப்பேன். ஆனாலும், நானாக அதை ஏற்க முன்வந்தால், இவனுக்கு என்ன தெரியும், என்றுதான் எல்லாரும் நினைக்கின்றனர்.

9.இரகசியமான விஷயம் வைத்திருக்கிறீர்களா என்னிடம் தயவுசெய்து சொல்லாதீர்கள். என்வாய் சும்மா இருக்காது.

10.எந்த ஒரு பிரச்சனையிலும் தீர்வு காண்பதில் எனது கருத்துக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறேன். என்னை மீறி இன்னொருவர் கருத்து மேலோங்கினால் கடுப்பாகி விடுவேன்.

11.ஓட்டலுக்கு சென்றால் நடுவில் உள்ள மேஜையை தேர்ந்தெடுக்க மாட்டேன். ஓரமாக உள்ள மேஜை காலியாகும் வரை பொறுத்திருப்பேன்.

12.கம்பெனி மேலாளருடன் ஒத்துப் போகவில்லை என்றால், உடனடியாக இன்னொரு வேலை தேட மாட்டேன். பொறுத்திருப்பேன்.



***அவ்வளவே தாங்க! எவ்வளவு 'தவறு' என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டீர்களா? இதோ அதற்கேற்ற விடைகள்... அதை படித்து, நீங்கள் சாதிக்கக் கூடிய தகுதி உள்ளவரா என்பதை தெரிந்து கொள்ளுங்கள்!***

## மதிப்பெண்:

**9-12 'தவறு':** எதிலும் வெற்றி காணும் சாதனை வீரர் நீங்கள். சாதித்துக் கொள்ளக் கூடிய சாதுர்யங்கள் உங்களிடம் நிறைய உள்ளது. நல்ல பர்சனாலிட்டி உண்டு. அடுத்தவர்களிடம் சரளமாக, சகஜமாக பேசும் திறமை இருக்கிறது. இதை முழுமையாக பயன்படுத்துங்கள். எந்ததுறையாக இருந்தாலும் அதில் தலைமை பொறுப்பில் இருக்க வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு உண்டு. அதற்கான திடமான தீர்மானமும், விடா முயற்சியும் உங்களிடம் இருக்கிறது. அதனால் வெற்றிக்கு எல்லா சாதுர்யமும் இருப்பதால் விடாதீர்கள் முழுமையாக முயற்சி செய்யுங்கள்! சாதித்து விடலாம்.

**5-8 'தவறு':** பெரும்பாலான சமயங்களில் மனதில் உள்ளது எதையும் வெளிக்காட்ட மாட்டீர்கள். அதே போல தன்னிச்சையாக மனம் போன போக்கில் முடிவு எடுப்பவர் நீங்கள் அது சரியானதாகவும் இருக்கும். நீங்கள் அலட்டிக் கொள்ளாமல் செய்யும் எந்த செயலும் மற்றவர்களுக்கு மலைப்பாக இருக்கும். உங்களது பேச்சு தோற்றத்தால் கவரப்பட்டு பலர் உங்களிடம் உதவி கேட்டு வருவார்கள். கொஞ்சம் சிந்தித்து செயல்பட்டால் எல்லாவற்றிலும் சாதிக்கலாம். எதையும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளும் போக்கு, சில சமயம் வெற்றியைத் தராது.

**0-4 'தவறு':** வேலைப் பளு, பொறுப்பு இவற்றுக்கிடையில் சிக்கும் நீங்கள் சீக்கிரம் முடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் விதிமுறைகளை கண்டு கொள்ள மாட்டீர்கள். எதையும் சவாலாக ஏற்று செயல்படுவதால் தீர்க்கமான சிந்தனையுடன் செயல்பட முடியாது. இதனால் வெற்றிக் கோட்டை தொட முடியாமல் திணறுவீர்கள். ஆனாலும், உங்களால் முடியும். உங்கள் மனதுடன் பேசுங்கள். சரியான அடிப்படை ஏற்படுத்தி சிந்தித்து செயல்படுங்கள். வெற்றி கிடைக்கும்!

# லேடீஸ் ஸ்பெஷல்

# காதல் கண்ணாடி

மதுவை மதுவே அறியாது;
குடிப்பவனே அறிவான்.

பெண்ணை பெண்ணே
அறிந்து கொள்ள முடியாது.

பெண்ணை ஆணே அறிவான்.
அதற்காகவே
அவன் படைக்கப்பட்டிருக்கிறான்.

ஆண் இல்லையென்றால் பெண்
தன்னை
அறியாமலே போயிருப்பாள்.

அழகு பெண்ணாகவும், காதல்
ஆணாகவும்
பிறந்திருக்கின்றன.

அழகைக் காதல் அறியும்.

அழகுக் காதலே கண்ணாடியாக
இருக்கிறது.



காதல் அழகை மேலும் அழகாக்குகிறது.

காதல் காதலியிடம் உள்ள, அவளே
அறியாத
அழகுகளையும் கண்டு பிடித்து
விடுகிறது.

தேவையே ஒரு பொருளின் மதிப்பை
உயர்த்துகிறது.

பெண் ஆணின் தேவையாக
இருக்கிறாள்.
ஆனால் தான் பெண்ணின் மதிப்பு
உயர்கிறது.

ஆணே பெண்ணின் கனத்தை
உணர்த்தும்
எடைக்கலவாக இருக்கிறான்.

காதலிக்கப்படும்போதுதான் அழகுக்கு
அங்கீகாரமும் மதிப்பும் கிடைக்கின்றன.

வெறுங்கண்ணாடியில் முக அழகு மட்டும் தான்
தெரியும்.

காதலன் பார்வையில் காதலி பேரழகியாகத்
தெரிகிறாள்.

காதல் பார்க்கும் அழகு, அழகின் அழகு
மட்டுமல்ல காதலின் அழகும் தான்.

கவிஞர் மீரின் கவிதை இது—
எப்போதும் கண்ணாடியையே
பார்த்துக் கொண்டிருக்கிறாயே?
அதில் என்ன இருக்கிறது?
உன்னைக் காணத் துடிக்கும்
காதலன் பக்கத்தில்
ஒரு கணம் அமர்ந்து பார்.

(அப்துல் ரகுமான்)

# உத்தம புருஷனாகலாம்

பெண்களும் வேலைக்கு செல்லும் முன்னேற்றம் மலர்ந்துவிட்ட காலம் இது.

பல குடும்பங்களில் கணவனும், மனைவியும் வேலைக்குச் செல்கிறார்கள்.

வேலை முடிந்து மாலை வீடு திரும்பும் போது இருவருக்குமே அசதியாக இருக்கும்.

இரவுச் சாப்பாட்டை திருப்தியாக சாப்பிடுவதற்கு ஆசையும் இருக்கும்.

குழந்தைகள் இருக்கும் வீட்டில் அவர்களோடு கொஞ்சவும், அன்பைப் பரிமாறவும் நேரத்தை ஒதுக்கியாக வேண்டும்.

இல்லாவிட்டால் குழந்தைகள் ஒட்டுதல் இல்லாமல் போய்விடும்.

அசதி ஒரு பக்கம், ஆசையும், அவசரப் பணிகளும் மறு பக்கம்.


சகல வேலைகளையும் ஒரே ஆளே சுமந்தால் மூச்சுத் திணறும்.

அநேகமாக என்ன நடக்கிறது என்றால், வேலைக்குச் சென்று திரும்பும் பெண்தான் வீட்டு வேலைகளையும் முழுக்க, முழுக்கச் சுமக்க வேண்டியேற்படுகிறது.

கணவன்மார் சிலர் ஹாயாக சோபாவில் சரிந்து பேப்பர் படித்துக் கொண்டும், தொலைக்காட்சி பார்த்துக்கொண்டு அல்லது வானொலி கேட்டுக்கொண்டு இருப்பார்கள்.

அல்லது நண்பர்களோடு அரட்டை. மனைவி மட்டும் பம்பரமாக சுற்றி முறிந்து கொண்டிருப்பாள்.

அவளுக்கும் சோர்வு வரும். அசதி இருக்கும். விரைவாக வீட்டு வேலையை முடித்துவிட்டு குழந்தைகளோடு கொஞ்சும் ஆசையிருக்கும் என்பதை கணவன்மார் கருத்தில் எடுக்க வேண்டாமா?



வீட்டு வேலையில் பங்குகொள்வது 'ஆம்பிளைக்கு அழகல்ல' என்று நினைத்துக் கொள்கின்றனர்.

பெண்ணை மதித்தல் என்பதுதான் ஆண்மை. அதுபோல ஆணை மதித்தல் என்பதுதான் பெண்மைக்கு அழகு. பரஸ்பர மதித்தலே வாழ்க்கைக்கு சிறப்பு.

சஞ்சிகைகள், சில பத்திரிகைகளில் ஆண் வீட்டு வேலை செய்வதை கேலி செய்யும் ஜோக்குகள் வெளியிடப்படுவதுண்டு.

– தங்கள் கையாலாகாத்தனத்திற்கு ஆண்மை என்று முத்திரை குத்தும் சில ஆண்களால் எழுதப்படும் ஜோக்குகள்தான் அவை என்பதை மறந்துவிடவேண்டாம். அந்த ஜோக்குகளை பெண்களே ரசித்து சிரிப்பது தான் கொடுமை.

வீட்டு வேலைகளில் மனைவியோடு பங்கெடுங்கள். சமமாக பகிர்ந்து செய்யுங்கள்.

தன் கணவர் உயர்ந்தவர் என்று உங்கள் துணைவி தன் மனதில் எண்ணத் தொடங்கி விடுவாள். அது வாழ்க்கையைச் சுலபமாக்கி விடும்.

அடுத்தவர் என்ன நினைப்பார்கள் என்று பார்த்துக் கொண்டிருப்பதைவிட, உங்களைப் பற்றி உங்கள் துணைவி உயர்வாக நினைக்கச் செய்யுங்கள்.

அதற்கு முதற்படியாக, வீட்டு வேலைகளை பகிர்ந்து செய்வது ஆண்மைத்தனமல்ல என்ற தப்பபிப்பிராயத்தையும், தாழ்வு மனப்பான்மையையும் தூக்கி எறியுங்கள்.

தூக்கி எறிந்துவிட்டால் நீங்கள் உத்தம புருஷன் மட்டுமல்ல, சுந்தரபுருஷனும் நீங்கள் தான்.

# குஷ்வந்த்சிங் டிக்ஷனரி

இந்தியாவின் பிரபல எழுத்தாளர் குஷ்வந்த்சிங். அரசியலை எழுதினாலும் நகைச்சுவையான குத்தல் இருக்கும். வேறு சமாச்சாரங்களை எழுதினாலும் நகைச்சுவை தெளிக்கும்.

குஷ்வந்த்சிங் சொன்ன குறும்புத் தனமான வியாக்கினங்களை நீங்களும் படித்துப் பாருங்களேன்.

__வழுக்கை:__ எவன் ஒருவனுக்கு அலம்புவதற்கு முடியாத அளவு பெரிய முகமும் சீவுவதற்கு முடியாத அளவு மிகக் குறைந்த தலை முடியும் இருக்கிறதோ அவனே வழுக்கைத் தலையன்.

__திருமணம்:__ ஆண் 'பேச்சிலர்' பட்டம் இழக்கிறான். பெண் 'மாஸ்டர்' பட்டம் வாங்குகிறாள்.

__அரசியல்:__ எல்லாத் தொழில்களையும் விட உறுதியாக லாபம் தருகிற தொழில். அதே போல் உறுதி மொழிகளையும் தரமுடிகிற தொழில்.

__டாக்டர்:__ பில்ஸ் (Pills) கொடுத்து நமது வியாதியைக் குணமாக்குபவர். அதே போல் பில்ஸ் (Bills) கொடுத்து நம்மைக் கொல்பவர்.

__உளவியல் நிபுணர்:__ அழகான பெண் அறைக்குள் நுழையும் போது அவளை விட்டு விட்டு எல்லாரையும் கவனிக்கும் ஆசாமி.

__கல்லூரிப் பேராசிரியர்:__ மாணவர்கள் தூங்கும் நேரத்தில் பேசுவதற்காக நியமிக்கப்பட்ட நபர்.

__சமரசம்:__ இரண்டு பிரிவினரும் தத்தம் பங்குதான் அதிகம் என்று எண்ணும் படியாகச் செய்யப்படும் ஒப்பந்தம்.

__அப்பா:__ இயற்கையில் நியமிக்கப்பட்ட வங்கி.



இதிலிருந்து எப்போது வேண்டுமானாலும் பணத்தைக் கறக்கலாம்.

__நிரந்தர பிரமச்சாரி:__ தான் மட்டும் சரியான திருமணத்தின் மூலம் அறுவடையான பயிர் என்று எண்ணும் ஆசாமி.

__புகழ்ச்சியாளர்:__ வெறும் கரண்டியால் உனக்கு அன்னமிடும் அயோக்கியன்.

# கை குலுக்கலில் ஒரு சங்கதி



கைகுலுக்கும் போது மூன்று விரல்களை மட்டும் கொடுப்பவர்கள் மனம் விட்டுப் பேச மாட்டார்கள்; இரண்டு கைகளாலும் பற்றிக் குலுக்குவது அபரிமிதமான அன்பைக் காட்டுகிறது. பட்டுக் கொள்ளாமல் கை கொடுப்பவர்கள் தன்னலத்திற்காக எதையும் செய்பவர்கள்; கையை அழுந்தப் பற்றிக் குலுக்குபவர்கள் உறுதியானவர்கள் அவர்களை நம்பலாம்.

# டெண்டுல்கர் வாங்கிய தொகை

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி நெருங்க, நெருங்க கிரிக்கெட் இரசிகர்கள் மத்தியில் டென்ஷனும், எதிர்ப்பார்ப்பும் தொற்றிக் கொள்ளத் தொடங்கி விட்டன.

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளை வைத்து தமது பொருட்களை விளம்பரம் செய்ய பல நிறுவனங்கள் போட்டா போட்டியில் ஈடுபடத் தொடங்கிவிட்டன.

'விசா இண்டர் நேஷனல்' கிரடிட் கார்ட் நிறுவனம் புதுவகையான கிரடிட்கார்ட் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த கிரடிட் கார்ட்டில் டெண்டுல்கரின் அழகான படம் ஒன்று இடம்பெற்றுள்ளது. அதற்காக டெண்டுல்கர் வாங்கிய பணம்



எவ்வளவு தெரியுமா? சொன்னால் நம்ப மாட்டீர்கள். ரூ80 இலட்சம்.

இந்திய கிரிக்கெட் வீரர்களில் எவரும் இதுவரை இப்படியொரு தொகையை விளம்பரக் கட்டணமாகப் பெற்றது கிடையாது. அந்தளவுக்கு டெண்டுல்கரின் செல்வாக்கு உயர்ந்திருக்கிறது.

சர்வதேச அரங்கில் விளம்பரம் மூலமாக பணம் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர்களில் முன் வரிசையில் இருக்கிறார் டெண்டுல்கர்.

டென்னிஸ் வீரர் அகாசி, ஸ்டெபி கிரஃப் போன்றவர்களும் விளம்பரங்களுக்கு போஸ் கொடுத்து கோடி கோடியாகச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

# கிரிக்கெட் துணுக்ஸ்

1.ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டத்தில் வேகமாக செஞ்சரி எடுத்து சாதனை படைத்தவர் இந்திய அணியைச் சேர்ந்த அஸாருதீன். நியூஸிலாந்துக்கு எதிராக ஆடிய போது 64 பந்துகளில் 100 ஓட்டங்களைப் பெற்று சாதனை படைத்தார்.

2.சைமன் ஓ டொன்னெல் நியூஸிலாந்துக்கு எதிராக ஆடிய போது 19 பந்துகளுக்கு அரை செஞ்சரியை எடுத்துச் சாதனை புரிந்திருக்கிறார். இதுவும் ஒரு நாள் ஆட்டத்தின் போதுதான்.

3.ஒரு நாள் ஆட்டத்தின் போது ஒரே ஓவரில் 31 ஓட்டங்களைப் பெற்றவர் விவியன் ரிச்சாட்ஸ். அவருக்கு பந்து வீசியவர் இலங்கை அணியைச் சேர்ந்த அஸந்தா டி மெல்.

4.ஒரு நாள் ஆட்டங்களில் தொடர்ந்து 8 அரை செஞ்சரிகளை எடுத்து உலக சாதனை படைத்வர் ஜாவிட் மியன்டாட்.

5.டெஸ்ட் ஆட்டத்தில் தனது முதலாவது இன்னிங்சிலும், கடைசி இன்னிங்சிலும் செஞ்சரிகளைக் குவித்து சாதனை படைத்த ஒரேயொரு ஆட்டக்காரர் கிரேக் சப்பல். இவர் அவுஸ்திரேலிய வீரர்.

6.நியூஸிலாந்து அணியைச் சேர்ந்த ரொட்ணி ரெட்ண்ட் மற்றும் மேற்கிந்திய அணியைச் சேர்ந்த ஆண்டி கண்டியும் ஆகிய இருவரும் தலா ஒவ்வொரு டெஸ்ட்டில் மட்டுமே ஆடியுள்ளனர். இருப்பினும் இந்த ஒரே ஆட்டத்திலேயே இவர்கள் செஞ்சரி எடுத்துள்ளனர்.

7.இந்திய அணிக்குத் தலைமை தாங்கிய மன்சூர் அலிகான் பட்டோடி ஒரு ஆட்டத் தொடரில் 5 நாணயச் சுழற்சிகளை வென்றார். அதிஷ்டக் கப்ரன்.


தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ்
பரிசுக் கூப்பன்
இல 16

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ்
இணைந்து வழங்கும்
தங்கமாலை
பரிசுப் போட்டி

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com

# தேன் கிண்ணம்

## வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை வாழ்வு

இங்கே.....
புயலொன்று
கிளிக் கூண்டினுள்
சிறைவைக்கப்பட்டுள்ளது!

அன்பின் பிரவாகத்தைத்
தடைசெய்ய
பெற்றோரின்
நியாயமற்ற நிர்ப்பந்தங்கள்–
அளப்பரிய
அணைக்கட்டுகளாக
எழுந்து நிற்கின்றன!

என் உடலில்
ஊர்ந்து செல்லும்
மரணம்
தொண்டைக் குழியை
நெருங்கிக் கொண்டிருக்கிறது!

தினமும்
எனக்குள்
எழுந்து ஓயும்
பிரளயம்
உள்ளத்தை விட்டுச் சிந்தினால்
ஊரே தாங்காது!

அவனின் கரம் கோத்து
உலாப் போன
இனிய தேசத்திலிருந்த
பளிங்கு மாளிகைகள்
பூங்காவனங்கள்,
தேன் சிந்தும் ரோஜாக்கள்
எவையுமே எனக்குச்
சொந்தமாகவில்லை!

இப்போது
விழிகளால்
வெறுமையைத்
துளைத்துக் கொண்டும்
செவிகளால்
மோனத்தை
உற்றுக் கேட்டுக் கொண்டும்
ஏகாந்த வெளியிலே
உலவுகிறேன்!

காரிருளில்
கிழக்கினைத் தேடிப்
புறப்பட்ட
ஒற்றை நட்சத்திரம் இது!
இருட்டில்
இருந்த பிரகாசமும்
பறிபோய் விட்டதான
பரிதாப உணர்வு!

பார்த்தீர்களா..
தோழர்களே!
வெள்ளையடிக்கப்பட்ட
கல்லறை வாழ்வைக்
காதல் என்னிடம்
கையளித்துப் போய்விட்டது!

செல்வி.பஹ்மா ஜஹான் ஸவாஹிர்,
தெமடகொல்ல, மெல்சிரிபுர.

## துயரக் கனல்!

சதை மடிப்பில்
ஒவ்வொரு துளியாய்
பெயர்ந்து விழும்
வியர்வை–

உடம்பை
கசக்கி
இடுப்பை முறுக்கி
காசு சேர்க்க
கஷ்ட்டப் படுகையில்
மனச் சிற்றறைக்குள்
மனைவி
அனுதாப நாற்காலி
போட்டு அமர்ந்திருப்பாள்–


விடிஞ்சதும்
"என்னங்க
இன்னிக்கு...?" என்ற
வினாக்கள்.....
விரதமிருக்கும் வரை
உழை...வருந்து '
உறுதியாக நில்!
என்று
உடல் நாருக்குள்
பசிவதைப்பு பரவியிருக்கும்!

வாழ்க்கைச்
செலவும்
வருமான நெருப்பும்
உயிர்க்
குமிழிகளை
ஊடறுத்துப் போன
அந்தக்
கவலையின் நிறை
கனத்துப் போகும்
காயத்துக்குள்......

நித்திரை
வராது......
நிம்மதியும் எழாது.....
உணர்ச்சியெங்கும்
உதறியெழும்
வெறுப்பு
உறுப்புகளெங்கிலும்
ஊத்துண்ணும்..!

காலம்
சதியென்னும்
கதிர்வீச்சுகளால்
மரியாதை என்னும்
முகத்திரையைக் கூட
மெல்லக் கிழிக்கும்...!

தமிழனியன் ஜிஹார்.



## பிஞ்சிவிட்ட ராவு

நான்–
செத்துப்போன பிறகு
நீ–
மகிழ்ந்து போ..!
அதுவரை நீயும்
இறந்து கொண்டிரு..!

கருகி எரிந்து போன
உன்
மனசின் இடுக்குகளை
உசுப்பிப்பார்..!

பொசிந்து கொண்டிருக்கும்
அந்த நினைவுகளுக்கு
கொள்ளி வை..!

சாம்பலான கனவுகளை
அள்ளி எடு!
கட்டிப் பிடித்துப் பார்....!
சுகம் இருக்காது!

உன் நெஞ்சை
ஒரு வேளைக்கு
ஏலத்திற்கு விடு!

உன் மனசை
நிலத்திற்குள்
புதைத்து விட்டு
ஞானம் தேடி
துறவியாகு!

பிச்சி விடு
அந்த ராவுகளை.....
உன் வாழ்க்கையிலிருந்து!

பெய்யே.தஸ்ரிப், அக்கரைப்பற்று.

# கண்டு பிடியுங்கள்









மேலே படத்தில் இருப்பவர்கள் அனைவருமே உங்களுக்கு நன்கு அறிமுகமானவர்கள். கண்டுபிடிக்க முடியாதவர்கள் பக்கம் 18ற்கு செல்லுங்கள்.

## மதில் பூனைகள்.

உன் மதிலின் மேல்
படுத்திருக்கும்
அந்த இரண்டு பூனைகளும்
எப்பவும் எனக்கு விருப்பமானவை.
உன் அழகிய முகத்தை
அடிக்கடி பார்த்து விட்டு
என்னைப் பார்க்கையில்
கொஞ்ச நினைக்கும்
அதன் முகத்தை......!

நீ இளைப்பாறும்
அந்த 'ஜே' மர நிழலில்
ஒரு காகம் இன்னொன்றை
துரத்தி உரசின–
உன் மாலை நேர வரவிற்காய்
என் ஜன்னலில் தொங்கி
விழிகளும் அழுதன......

அந்தப் பூனை ஒன்றின்
கழுத்திலாவது
ஒரு கடிதத்தைக் கட்டி விடேன்....!
என் ஜன்னலுக்குள்ளால்
அதை எறிந்து விட்டுப் போகட்டும்!

"கன்ஸியா"

## சூனியப் பரவல்

யுகம் யுகமாய்
யுகத்தில்
அழுகையின்
யுக ஆராதிப்புகள்........
–0–
வடக்கின்
கண்ணீர்
வடிப்புகளும்
கிழக்கின்
வேதனைக்
கிழிஞ்சல்களும்
நிர்மலமான ஆகாயத்தில்
நிரந்தரமாக்கப்பட்ட
மேக
வெடிப்புக்களைபோல்.....
–0–

'நா'த்தாகத்துக்கு
தொண்டையில்
நீருட்டலாம்.....!
இந்த வாழ்வின்
சமாதானத்தாகத்துக்கு
எதனை
சங்கமமாக்குவது.......?
ஓ...
இந்த விடியல் உதிப்புகளுக்கு
இன்னும்
அடிவானில்
கிழக்குகள்
அமைக்கவில்லையா?
–0–
போதும் போதும்
என்று
பொறுத்திருந்த
போதிலும் இங்கு
மேலும் மேலும்
மோதும் மோதும்
கண்ணீர்க்கசிவுகளை
நெஞ்சில் ஊதும்.....



வேதனைத் தீயின்
வெந்த ஜுவாலைகள்
நாக்கு
நீட்டி நீட்டி
வேகச் செய்யும்
வாழ்க்கை
அகராதியினை
வெளுத்துக்கட்டும்!
இறுதியில்
உலகம் மீதான
வெறுப்புகள்
உதிரிக்கிடக்கும்!

இது......
அன்றாடம்
இந்த மண்ணில்
அரங்கேறும்
அவல
நாட்களாகி
விட்டபோதிலும்,
சுவைத்துச்சுவைத்து
சப்புக்கொட்டும்
சூனிய ரசிப்புகள்
இன்னும்
குறையாது
கூடிக் கொண்டே......

கிண்ணியா சபறுள்ளா.



## கிராமத்துக் கீறல்கள்

அதென்ன?
ஆயுத ஆர்ப்பரிப்பும்,
மனித அலறல்களும்
நிலவெறிக்கும்
இந்தப் பொழுதில்!
புழுதி படிந்து போன
இந்த இரவில்.....!

நேற்றுத் தானே
அமைதி ஆடை
அணிந்திருந்தது என்
கிராமம்......!
யார் செய்த தோஷம்?
**

ஒரு நொடிப் பொழுதில்
உயிர் இழந்து, பிணங்கள்
தேங்கும் இடுகாடாக...
யார் மாற்றிச் சென்றது?
**
நானினி
நைந்து போக வேண்டியதுதான்,
ஈனமானவர்கள் இன்னும்
இருக்கும் வரை.....
இலவசமாகவே
ஈமக்கிரியைகள் நடத்துவர்.

எனது ஒவ்வொரு ராத்திரியும்
குருதியில் குளித்து;
அலறலில் தலை துவட்டி
அன்றாடம் விடிகிறது.
யாரிடம் சொல்ல
என் கிராமத்துக் கீறல்களை!

வாருங்களேன்,.....!
வந்து ஒரு ஹேஷ்யம்
கூறுங்களேன்!
**
நான்;
ஸ்தோத்திரம் செய்யும்
எமது இறைவனிடம்
எடுத்துச் சொல்லுவதாக உத்தேசம்!

நீங்கள்?
சமாதான
சொர்ப்பனங்காணும்
நமது அரசிடமா?
**
நிஜமானால்
ஜென்மம் நீளும்–எம்
இறைவன் பற்றிய
ஜெபங்களும் சேர்ந்து.

இஸ்லாஹிய்யா, கே.முனாஸ்.

# இந்த வாரம் உங்கள் பலன்

(10.12.95 முதல் 16.12.95 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | | |
|---|---|---|
| விருட்சிகம் | - | சூரியன். |
| தனு | - | புதன், வியாழன், வெள்ளி, செவ்வாய். |
| கும்பம் | - | சனி |
| மீனம் | - | கேது |
| கன்னி | - | இராகு |

சந்திரன்-கர்க்கடகம், சிம்மம், கன்னி. ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

### மீனம்: — சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- | இனசன நன்மை, துயர்நீங்கும். | காலை 7 மணி |
| புதன்- | அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், மனக்குறை நீங்கும். | காலை 8 மணி |
| வெள்ளி - | துன்பம் நீங்கும், பணவரவு. | பகல் 12 மணி |
| சனி- | எதிர்பார்த்த நன்மை, தொழில் சிறப்பு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: — சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | பொருள் வரவு, காரிய சித்தி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | துயர்நீங்கும், பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், கௌரவம். | காலை 7 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| சனி- | பயனுள்ள செயல், பொருள் வரவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: — சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், காரியத்தடை. | பகல் 12 மணி |
| திங்கள்- | பெரியோர் பகை, மனக்கவலை. | காலை 6 மணி |
| செவ்வாய்- | இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- | உறவினர் உதவி, தொழில் சிறப்பு. | காலை 7 மணி |
| வியாழன்- | வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | துன்பம் நீங்கும், பணவரவு. | காலை 8 மணி |
| சனி- | மனக்குறையதிகம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: — சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் உதவி, கௌரவம். | காலை 7 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 6 மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, வீண் மனஸ்தாபம். | பகல் 2 மணி |
| வியாழன்- | காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 6 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, இனசன நன்மை. | பகல் 12 மணி |
| சனி- | துன்பம் நீங்கும், காரியானுகூலம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: — சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், பணக் கஷ்டம். | காலை 7 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வீண்குறை கேட்டல், கௌரவக் குறைவு. | காலை 6 மணி |
| புதன்- | அந்நியர் சகவாசம், மனக் கவலை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | வீண் மனஸ்தாபம், பணக் கஷ்டம். | காலை 6 மணி |
| சனி- | தொழில் விருத்தி, முயற்சி நன்மை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### கர்க்கடகம்: — சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 2 மணி |
| செவ்வாய்- | துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- | பயனுள்ள செயல், மனக்குழப்பம். | காலை 7 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, பணவரவு. | பகல் 12 மணி |
| சனி- | காரிய சித்தி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: — சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரிய சித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பயனுள்ள செயல், கௌரவம். | காலை 6 மணி |
| புதன் - | தனலாபம், கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, இனசன நன்மை. | காலை 7 மணி |
| வெள்ளி- | உறவினர் பகை, பொருள் சேதம். | பகல் 12 மணி |
| சனி- | மனப் பயம், தொழில் கேடு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-2

### சிம்மம்: — சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் நஷ்டம், மனக் கவலை. | பகல் 12 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, பொருள் வரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன்- | காரியானுகூலம், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| சனி- | மனக்குறை நீங்கும், பிரயாண மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### தனு: — சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | முயற்சி பலிதம், கௌரவம். | காலை 6 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வீண்குறை கேட்டல், மனக்கவலை. | பி.ப. 2 மணி |
| புதன்- | இனசன நன்மை, கௌரவக் கேடு. | காலை 8 மணி |
| வியாழன்- | தொழிலில் பிரச்சனை, செலவு மிகுதி. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- | உறவினர் பகை, மனக் குழப்பம். | பி.ப. 2 மணி |
| சனி- | அந்நியர் உதவி, மனப் பயம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்: — சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன்- | தொழில் மந்தம், பணக் கஷ்டம். | காலை 6 மணி |
| வியாழன்- | உறவினர் பகை, மனக் கவலை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி, பணச் செலவு. | காலை 9 மணி |
| சனி- | பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: — சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| புதன்- | துயர் நீங்கும், இனசன நன்மை. | பகல் 2 மணி |
| வியாழன்- | தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 7 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- | மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கன்னி: — சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | இனசன நன்மை, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, பொருள்வரவு. | காலை 7 மணி |
| புதன்- | பெரியோர் பகை, வீண்குறை கேட்டல். | காலை 6 மணி |
| வியாழன்- | மனக்குறை நீங்கும், தொழில் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| சனி- | புதிய முயற்சி, பணவரவு. | பி.ப. 2 மணி |


அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3



படிப்பகம்

www.padippakam.com





## பாட்டி தந்த சட்டை



சட்டை நல்ல சட்டை
கட்டம் போட்ட சட்டை,
பட்டுத் துணியில் தைத்து
பாட்டி தந்த சட்டை.

கழுத்தில் பூவும் போட்டு
கொலரும் வைத்த சட்டை;
கறுப்பு மஞ்சள் கலந்து
கண்ணைக் கவரும் சட்டை.



விருப்பமுடன் பாட்டி
விடுமுறையில் தந்தாள்;
பொறுப்புடனே காத்து
போட்டுக்கொள்வேன் நானும்.

பாட்டி தந்த சட்டையில்
பாசம் கலந்து இருக்குது;
நேசமுள்ள பாட்டியின்
நினைவு எனக்கு வருகுது.

நீலா தர்மதுரை

வெள்ளத்தின் பெருக்கைப் போல்
கலைப் பெருக்கும்
கவிப் பெருக்கும் மேவு மாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும்
குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வர்!
–சுப்பிரமணிய பாரதியார்.

பாப்பா முரசு சிறுகதை

# ஆமை செய்த தவம்

ஒரு காலத்தில் ஒரு ஆமை வசித்து வந்தது. அந்த ஆமைக்கு இரண்டு வாத்துக்கள் நண்பர்களாய் இருந்தன. வாத்துக்களுக்கு இறக்கைகள் இருந்ததால் அவை பல இடங்களுக்கும் பறந்து சென்றுவரும். ஒவ்வொரு இடத்திலும் தாம் கண்டு களித்த இயற்கைக் காட்சிகள், நீந்திக்களித்த நீர் நிலைகள், சந்தித்த பறைவகள் போன்ற பல அனுபவங்களை ஆமையிடம் சொல்லி மகிழும்.

இவற்றைக் கேட்கும் ஆமைக்கோ, தானும் அவை போன்று பல இடங்களுக்கும் சென்று பல அனுபவங்களைப் பெற்று இரசிக்க வேண்டும் என்ற ஆவல் பிறக்கும்.

ஆனால், வாத்துக்களுக்கு இருப்பது போன்ற இறக்கைகள் தனக்கு இல்லையே, 'இறைவன் ஏன் என்னை இப்படி வஞ்சிக்க வேண்டும்? இந்தக் கடினமான ஓட்டால் எனக்கு என்ன பயன்? இதற்குப் பதில் வாத்துக்களைப் போல இரண்டு இறக்கைகளைப் படைத்திருந்தால் வாத்துக்கள் போன்று சுதந்திரமாய் நானும் பல இடங்களுக்குப் பறந்து சென்று, பல இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்திருப்பேனே', என்று ஏங்கும்.

ஒரு நாள் இரண்டு வாத்துக்களும் வெளியூர் சென்று விட்டு, தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள ஆமையிடம் வந்தன.

"ஆமை நண்பா! இந்த முறை எங்களுக்கு என்ன அற்புதமான அனுபவம் ஏற்பட்டது தெரியுமா? நாங்கள் ஒரு பறவைகள் சரணாலயத்திற்குச் சென்று வருகிறோம். ஆஹா எத்தனை நூற்றுக் கணக்கான பறவைகள் தெரியுமா? ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை, ஒவ்வொரு ரகம், ஒவ்வொரு நிறம். பார்க்கவே கண் கொள்ளாக் காட்சி.

பாவம் உன்னைத்தான் இறைவன் இப்படிப் படைத்து விட்டான். கிணற்றுத் தவளைபோல் உலகம் தெரியாமல் வாழ்கிறாய். உன்னை நினைத்தால் எங்களுக்குப் பரிதாபமாய் இருக்கிறது!" என்றன வாத்துக்கள்.

இதைக் கேட்ட ஆமைக்கு அழுகையே வந்து விட்டது.

"நண்பர்களே! நான் இறைவனிடம் இதுபற்றிக் கேட்கத்தான் போகிறேன்" என்றது ஆமை.

வாத்துக்கள் ஆமைக்கு ஆறுதல் சொல்லி விட்டு தங்கள் இருப்பிடம் திரும்பின.

ஆமை அந்த நிமிடமே இறைவனை நினைத்துக் கடும் தவம் இருந்தது. பல நாட்கள் அது ஊன் உறக்கமின்றி உலக ஆசாபாசங்களை மறந்து கடுந்தவம் புரிந்தது.

ஒரு நாள் கடவுள் ஆமையின் முன் தோன்றி:

"ஆமையே! உன் கடுந்தவத்தை மெச்சினோம். உனக்கு என்ன வேண்டுமோ கேள்" என்றார்.

ஆமை கடவுளை ஒரு முறை வணங்கி விட்டு,

"கடவுளே இந்தக் கடினமான ஓட்டுடன் ஏன் என்னைப் படைத்தீர்? இதைச் சுமந்து கொண்டு உலகமே தெரியாமல் ஒரு கிணற்றுத் தவளைபோல் இருக்கிறேன். எனக்கு இந்த ஓடும் பிடிக்கவில்லை. வாழ்க்கையும் பிடிக்கவில்லை.


நான் பறவைகளைப் போல உல்லாசமாக வானில் பறந்து திரிய வேண்டும். ஆகவே எனது முதுகில் இருக்கும் ஓட்டை நீக்கி விட்டு, இரண்டு இறக்கைகளைக் கொடும்" என்றது.

கடவுள் ஆமையைத் தீர்க்கமான ஒரு பார்வையைப் பார்த்து விட்டு,

"ஆமையே! காரணமில்லாமல் முதுகில் நான் ஓட்டைப் படைக்கவில்லை. எல்லாவற்றையும் கணக்கிட்டுத்தான் படைத்துள்ளேன். ஆகவே படைத்ததை இனி என்னால் மாற்ற முடியாது. ஆனால் நீ உனது முதுகில் இருக்கும் ஓட்டின் முக்கியத்துவத்தை விரைவில் உணர்ந்து கொள்வாய்" என்று கூறி விட்டு மறைந்தார்.

சில நாட்கள் கழித்து வாத்துக்கள் வந்து ஆமையைச் சந்தித்து நலம் விசாரித்தன.

"என்ன ஆமை நண்பா! கடவுளை நோக்கி கடும் தவம் இருந்தாய். அடிக்கடி வந்து பார்த்தோம். கடவுள் தோன்றினாரா? நீ வரம் கேட்டாயா?" என்று கேட்டன.



ஆமையின் கண்களில் நீர் திரண்டது.

"தவமிருந்தது வீண். ஏற்கனவே படைத்ததை மாற்ற முடியாது என்று கடவுள் கையை விரித்து விட்டார்" என்று தளதளத்த குரலில் சொன்னது ஆமை.

வாத்துக்களுக்கு எப்படி சமாதானம் சொல்வதென்றே தெரியவில்லை.

அப்போது–அருகிலிருந்த புதரில் இருந்து சலசலவென்று சத்தம் கேட்டது. வாத்துக்கள் இரண்டும் திரும்பிப் பார்த்தன.

"ஐயோ! வேட்டை நாய்! ஓடு!" என்றது ஒரு வாத்து.

இரண்டு வாத்துக்களும் பறக்க முயன்றபோது, இரு வேட்டைநாய்களும் பாய்ந்து ஆளுக்கு ஒரு வாத்தைப் பிடித்தன.

இதைக் கண்டு நடுங்கிப்போன ஆமை 'விருட்' டென்று தன் உடலை ஓட்டுக்குள் இழுத்துக் கொண்டு அந்த இடத்திலேயே கிடந்தது.

வாத்துக்களின் மரண ஓலத்தை ஓட்டுக்குள் இருந்தபடியே ஆமையால் கேட்க முடிந்தது.

அப்போது ஆமை,

'கடவுளே! எனக்கு ஓட்டை படைத்த தன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டேன். ஆபத்து சமயங்களில் என்னைக் காப்பாற்றிக்கொள்ள இந்தச் செயலை அடிக்கடி செய்தாலும், இறக்கைகளின் மேல் கொண்ட ஆசையால் இந்த ஓட்டின் முக்கியத்துவத்தை மறந்தே போய் விட்டேன். அதை எனக்கு உணரச் செய்ததற்கு நன்றி!' என மனதிற்குள் சொல்லிக்கொண்டது ஆமை. •

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!





மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 16.12.1995.
வர்ணம் தீட்டும் போட்டி இல: 120
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 117

பரிசுக்குரியவர்:
எம்.எம்.மதனியா.
சதாத் மகா வித்தியாலயம்–அகுரஸ்ஸ.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| பி.விஸ்வநாதன். புு/உடப்பு தமிழ் மகா வித்தியாலயம், உடப்பு. | சு.சரண்யா. பொன்சேகா பிளேஸ், கொழும்பு.4. |
| மு.சிவகாமி பத்/ஹைலன்ஸ் ம.ம.வி.ஹட்டன். | எம்.இஜாஸ் இப்றாஹிம். துனுவில ரோட், அக்குறணை. |
| பி.ஆனந் ராஜன். புனித அந்தோனியார் கல்லூரி, வத்தளை. | செல்வி.சிவானந்தன் சுகன்யா. மேரிஸ் ரோட், பம்பலப்பிட்டி, கொழும்பு. |
| எம்.சேவியர் துஷாந்தன். தி/கோணேஸ்வரா இந்துக் கல்லூரி. | வேலு. நவரட்ணசாமி. நு/சரஸ்வதி, தமிழ் மகா வித்தியாலயம். |
| பி.பானுபிரியா. மாணிக்கவாசகர் வீதி, திருகோணமலை. | சி.ரேகா வாணிஸ்ரீ. கலரவில தமிழ் வித்தியாலயம், சாமிமலை. |

## ஆயுர்வேதம்



*** ஆயுர்வேதம் என்றால் என்ன?**

ஆயுர்வேதம் என்றால் பண்டைக் காலத்திலிருந்து இந்தியாவில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஒரு வகை சிகிச்சை முறை. சமஸ்கிருத மொழியில் 'ஆயு' என்றால் வாழ்வு என்று அர்த்தம். 'வேத' என்றால் அறிவு என்று பொருள். அதாவது மனிதனின் உடம்புக்கு எது நல்லது, எது கெட்டது என்று ஆராயும் விஞ்ஞானம் ஆகும்.

***இந்த முறையிலான சிகிச்சை எப்போதிலிருந்து கொடுக்கப்பட்டு வருகிறது?**

கி.மு.5000 வருடங்களுக்கு முன்பிருந்து.

***ஆயுர்வேதத்தின் அடிப்படைத் தத்துவங்கள் என்ன?**

இதன் தத்துவம்: வாதம், பித்தம், கபம் என்று எமது உடம்பில் மூன்று வகை உண்டு. இந்த மூன்றும் உடம்பில் சீராக இருந்தால் ஆரோக்கியமானவர்கள் என்றும், இவற்றில் ஏதாவது ஒன்று சீர்குலைந்திருந்தால் ஒரு மனிதனுக்கு உடலில் நோய் இருக்கிறதென்றும் அர்த்தம்.

***ஆயுர்வேதத்தில் அறுவைச் சிகிச்சை உள்ளதா?**

இருக்கிறது. ஆயுர்வேதத்தில் சிறந்த டாக்டர் சுஸ்ருதா என்ற இந்தியர். இவரை இந்திய அறுவைச் சிகிச்சை முறையின் தந்தை என்று கூறுவார்கள். இவர் அறுவை சிகிச்சை பற்றி 'சுஸ்ருதா சம்ஹிதா' என்ற நூலை எழுதியுள்ளார்.

***தாவரங்கள் மட்டும் தான் ஆயுர்வேத மருந்து செய்யப் பயன்படுகிறதா?**

இல்லை. தாவரங்கள் மட்டுமன்றி மிருகங்களிடமிருந்து கிடைக்கின்ற பொருட்கள் மற்றும் செம்பு, பொன், வெள்ளி, பாதரசம் போன்ற தாதுப்பொருட்களையும் பயன்படுத்தி ஆயுர்வேத மருந்துகள் தயாரிக்கிறார்கள்.

## அபூர்வ சம்பவங்கள்

ஒவ்வொரு வருடமும் பௌதீகம், இரசாயனம், மருத்துவம், இலக்கியம், பொருளாதாரம் ஆகிய துறைகளுக்கான நோபல்பரிசு ஸ்வீடன் தலைநகரான 'ஸ்டொக்ஹோ'மில் நடைபெறும் விழாவில் அளிக்கப்படும். ஆனால் அமைதிக்கான நோபல் பரிசு மட்டும் நோர்வே நாட்டின் தலைநகரான 'ஒஸ்லோ'வில் நடைபெறும் விழாவில் வழங்கப்படும்.

'லெனின்கிராட்' எனப்படும் ரஷ்ய நகரில் ஒரு அருங் காட்சியகம் உள்ளது. இதில் வியத்தகு விஷயம் ஒன்று பாதுகாக்கப்பட்டு வருகிறது. அவ்வியத்தகு விஷயம் எது தெரியுமா? தங்கத்தினால் செய்யப்பட்ட ஒரு செடியாகும். இது யாரால், எப்போது செய்யப்பட்டது என்ற தகவல் ஏதுமில்லை.

## வாரம் ஒரு நாடு

## இத்தாலி

**தலைநகர்–** ரோம்
**பரப்பளவு–** 3,01,253 சதுர கிலோமீற்றர்.
**மக்கள் தொகை–** 5.78 கோடி
**மொழி–** இத்தாலியன்
**எழுத்தறிவு–** 97%
**சமயம்–** கிறிஸ்தவம்
**நாணயம்–** லிரா
**தனிநபர் வருமானம்–** 16,830 டொலர்
**வரலாறு:–**

ஆல்ப்ஸ் மலைத் தொடரிலிருந்து மத்திய தரைக்கடல் வரை நீண்டு அமைந்துள்ள ஐரோப்பாவின் நெடிய தீபகற்பம். சிசிலி, சாடினியா, எல்பா, கேப்ரி ஆகிய மத்திய தரைக் கடல் தீவுகள் இத்தாலியைச் சேர்ந்தவையாகும்.

இத்தாலி ஒரு காலத்தில் ரோமப் பேரரசின் தலைமைப்பீடமாக இருந்தது. இடைக் காலத்தில் பல சிறு இராஜ்யங்களாக நசிந்து போய் விட்டது. ஸவாய் மன்னன் இரண்டாம் விக்டர் இம்மானுவல் அரசரான பின்னரே, நவீன இத்தாலி வளரத் தொடங்கியது. இத்தாலியின் முதல் பாராளுமன்றம் 1861ல் உருவானது. 1922 இல் மன்னரின் வேண்டு கோளுக்கிணங்க முசோலினி ஆட்சியேற்றார். முசோலி ஒரு சர்வாதிகாரியாக விளங்கினான். 1946 இல் குடியரசானது.

**பொருளாதாரம்:**

கோதுமை, கொடிமுந்திரி,



இனிப்புக் கிழங்கு, பழங்கள், காய்கறிகள் ஆகியன முக்கிய விளைபொருட்கள். உலகிலேயே மிகுந்த தொழில் மயமான நாடுகளுள் இத்தாலியும் ஒன்று. மின் கருவிகள், இயந்திர மின்சாரக் கம்பி, மோட்டார் ஊர்திகள், இரசாயனப் பொருட்கள் ஆகியன முக்கிய உற்பத்திப் பொருள்களாகும். •

## பேனா ஸ்டாண்ட்

**இதற்குத் தேவையான பொருட்கள்:**
*கண்ணுள்ள தேங்காய்ச் சிரட்டை
*துண்டுகளாக வெட்டப்பட்ட வர்ணக் காகிதங்கள்
*ஒட்டுவதற்குப் பசை.

**செய்யும் முறை:**

தேங்காய்ச் சிரட்டையில் உள்ள தும்புகளை நீக்கி நன்றாகச் சுத்தப்படுத்துங்கள். அந்தக் கண் உள்ள பகுதியில் மூன்று ஓட்டைகள் போட்டுக் கொள்ளுங்கள். இப்போது சிரட்டை முழுவதும் பசை பூசி, வெட்டி வைத்துள்ள வர்ணக் காகிதங்களை ஒட்டுங்கள். இன்னமும் அழகு சேர்க்க வேண்டுமெனில், அழகான பொம்மைப் படங்களை ஒட்டுங்கள். இப்போது அதை மேசை மீது வைத்து விட்டு, பேனா, பென்சில் போன்றவற்றை அந்த மூன்று ஓட்டைகளுக்குள் வைத்து விடுங்கள்.

அழி ரப்பர், பிளேட் போன்றவற்றை உங்கள் பேனா ஸ்டாண்டுக்குள்ளே போட்டு வைத்தால் தொலையாமல் இருக்கும்.






படிப்பகம்

## உயர்ந்த குற்றம் — 13

பட்டுக்கோட்டை பிரபாகர்

பூட்டைத் திறந்து உள்ளுக்குள் வந்து......

"பம்பாய் போறேன்னு காரெடுத் துக்கிட்டுப் போனே.... வேறெங்கே போனே? இங்கே என்ன ஆயிடுச்சி தெரியுமா? எப்படிச் சொல்றதுன்னு புரியலையே... சொல்றேன். எப்படி தாங்கிக்குவேன்னும் தெரியலையே...."

"டேய் என்னடா? என்ன ஆச்சி?"



"அரிசி ட்ரம்முக்குள்ளே போட்டு வச்சிருந்த பணப்பார்சலைக் காணோம்."

"காணமா? விளையாடறியா?"

"சத்தியமா காணம்டா. இருக்கான்னு பார்ப்போம்னு நேத்து திறந்து கை விட்டுத் துளாவிப்பார்த்தேன். தட்டுப்படலை. ட்ரம்மையே கவிழ்த்துப் பார்த்துட்டேன். காணோம். எனக்கு எதுவுமே புரியலை."

கண்கள் துடிக்கக் கட்டிலில் இருந்து எழுந்த சுபா செல்வத்தின் சட்டையைக் கொத்தாகப் பிடித்தான். "டேய்! என்கிட்டே ராங் வச்சிக்கிட்டே...? நான் எப்படிப்பட்ட வன்னு உனக்குத் தெரியும். பார்சலைக் கொண்டாந்து உன் கைலதான் கொடுத்தேன். என் கண்ணு முன்னாடியே அதை ட்ரம்முக்குள்ளே போட்டே. இது உனக்கும், எனக்கும் தான் தெரியும். அதுவா இறக்கை முளைச்சிப் பறந்துடுச்சா?"

"நீ இப்படி எல்லாம் கேப்பேன்னு எனக்குத் தெரியும். நான் இதை எடுக்கணும்னு நினைச்சிருந்தா நீ வந்து கேக்க வரைக்கும் இங்கேயே உக்காந்திருக்க மாட்டேன். இன்னேரம் டெல்லி, கல்கத்தான்னு பறந்திருப்பேன். சத்தியமாய் பணத்தைக் காணோம். நீ என்னை அடி, கொல்லு! உண்மை இதான்."

செல்வத்தின் வார்த்தையில் இருந்த நியாயம், சுபாவின் கைகளைத் தளர்த்தியது.

"யாருக்குடா தெரியும்? வேறே வாய்ப்பே இல்லையே...."

"அதான் எனக்கும் புரியலை. இன்னொரு விஷயம்..."

"என்ன?"

"நேத்து பெங்களூர்லேருந்து ராஜன் உன்னைத் தேடிக்கிட்டு இங்கே வந்தார்."

"உன் வீட்டுக்கா? ராஜனா?"

"ஆமாம். ஆமாம்"

"அவர் ஏன் இங்கே வந்தார்?"

"கேட்டேன். விபரம் சொல்லலை. நீ வந்ததும் அவரைப் பார்க்கச் சொன்னார்."

"எங்க இருக்கார்?"

"வுட்லண்ட்ஸ்ல தங்கிருக்கார். ரூம் நம்பர் 107."

" எனக்கு எதுவுமே புரியலை. ட்ரம்முக்குள்ளே வச்ச பணத்தைக் காணோம்னு சொல்றே. பெங்களூர்லேருந்து ராஜன் வந்திருக்கார். ஒரே குழப்பமா இருக்கு. கொஞ்ச நஞ்சம் இல்லைடா அஞ்சு லட்சம்!

"சரி நீ போன காரியம் என்னாச்சி? ஒப்படைச்சுட்டியா?"

"ஆச்சு, ரெண்டு வகைல பணம்னு ரொம்ப சந்தோஷமா இருந்தேன். கெடுத் துட்டியேடா பாவி!"

"நான் என்னடா செஞ்சேன்? ப்ராமிஸா நான் எடுக்கலை."

"உன்னை நம்பலாமா செல்வம்?"

"ப்ளீஸ், நம்பு"

"ராஜனை பார்த்துட்டு வந்துடறேன். இரு"

சுபா முக்கிய சாலைக்கு வந்து, ஆட்டோ பிடித்து வுட்லண்ட்ஸ் வந்தான். கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்ததுமே...

"வந்துட்டியாடா கம்மனாட்டி!" என்றார் ராஜன். ராஜன் இவ்வளவு கோபமாய் இருந்து சுபா பார்த்ததே இல்லை.

"என்ன சார்? ஏன் சார் திட்டறிங்க? சக்ஸஸ்ஃபுல்லா காரியத்தை முடிச்சுட்டு வர்றேன்."

"பொய் பேசினே வாய்ல ஒரு பல்லு தங்காது படவா. சொல்லு, எவ்வளவுக்கு வித்தே? ஷேட்டை விட அவன் அதிகமா எவ்வளவு கொடுத்தான்? யார்கிட்டே வித்தே?"

"நீங்க கேக்கறது எதுவுமே எனக்குப் புரியலை சார் ஷேட்டுக்கிட்ட அஞ்சு லட்சம் பேசினேன். அட்வான்ஸ் போக வர வேண்டிய தொகை நாலு. இதோ பாருங்க பணம்" என்று சூட்கேஸ் திறந்து காட்டிவிட்டு மூடினான். "பேசினபடி அவரும் நடந்துக்கிட்டார். நானும் நடந்துக்கிட்டேன். எந்தப் பிரச்சனையும் இல்லாமல் பையனை கார் மாத்திட்டுத் திரும்பிட்டேன். புனேல தங்கினேன். நீங்க சொன்ன மாதிரி காரையும் வித்துட்டேன். நாப்பத்தி ஒண்ணுக்கு வித்தேன்."

ராஜன் அவனை தீர்க்கமாகப் பார்த்தார்.

"சுபா, நீ நிஜம்தான் பேசறியா?"

"ஆமா சார் என்ன குழப்பம்?"

"நீ ஏமாத்திட்டதா கிஷன்சந்த் சொல்றான். பம்பாய் எல்லையில் அவன் ஆள் பேசினபடி காத்திருந்தானாம். நீ வரவே இல்லையாம்"

"ஷேட்டுக்கு புத்தி எதுவும் பிசகிடுச்சா? பிரௌன் கலர் அம்பாஸிடர் டி.எம்.க்யூ 7171 அனுப்பறேன். வெள்ளை கர்சீப் ஆட்டி வண்டியை நிறுத்துவான், பயணம் சுகமான்னு கேப்பான். அவன்கிட்டே பணம் வாங்கிட்டுப் பையனை ஒப்படைச்சுடுன்னு சொன்னார். அதே மாதிரி பிரௌன் கார், அதே நம்பர், வெள்ளை கர்சீப் ஆட்டி நிறுத்தினான். பயணம் சுகமான்னு கேட்டான். பணம் கொடுத்தான். இதோ பாருங்க பணம்! நம்பமாட்டேங்கறீங்களே என்னை?"

ராஜன் கொஞ்ச நேரம் யோசித்தார்.

"சுபா, அப்படின்னா... கிஷன்சந்தும் ஏமாந்துட்டான். நீயும் ஏமாந்துட்டே?"

"நான் ஏமாறலை. இதோ நாலு லட்சம்" என்று கட்டிலில் கவிழ்த்தான் சூட்கேஸை. பொல பொலவென்று நூறு ரூபாய்க் கட்டுக்கள் கொட்டின.

"ஒரிஜினல்தானான்னு பாரு...."

சுபா இரண்டு கட்டுக்களை எடுத்து டர்ர்ர் என்று புரட்டிப் பார்த்தான். "நான் என்னைக்கும் ஏமாற மாட்..." என்றவன் நிறுத்தினான். அந்த நூறு ரூபாய்க் கட்டை உன்னிப்பாகப் பார்த்தான். கட்டின் மேல் நோட்டின் வெள்ளைப் பகுதியில் **'GOD BLESS YOU'** என்று சிகப்பு பால்பாய்ண்டில் எழுதப்பட்டிருக்க......

யோசித்தான். இதே போல சிகப்பு பால்பாயிண்டில் எழுதின இதே போன்ற நோட்டுக் கட்டைச் சமீபமாகப் பார்த்தேனே....

பளிச் என்று நினைவுக்கு வந்தது.

சரவணகுமாரின் அப்பா ஜீவானந்தத்திடம் பார்சலாக வாங்கிக் கொண்ட ஐந்து லட்சத்தை ஒரு சந்தில் காரை நிறுத்தி, உள் விளக்கைப் போட்டு, பார்சல் பிரித்து சரியாக இருக்கிறதா என்று சோதித்தபோது ஒரு கட்டில்...

மைகாட்!

இங்கே அரிசி ட்ரம்மில் வைத்த பணப் பார்சலைக் காணோம். அதே கட்டு பம்பாயில் என்னிடம் கொடுக்கப்படுகிறது. எனக்குக் கொடுக்கப்பட்ட பணம் திருடப்பட்டு மறுபடி எனக்கே தரப்பட்டு.....

இது யார் வேலை?

ஏமாந்து போன அவமானம் அவன் முகத்தில் சிவப்பு தந்தது.

"சார், பணத்துக்கு ஆசைப்படுவேனே தவிர, கட்சி மாறமாட்டேன். உண்மையான பணம் தான் கொடுத்திருக்கான். ஆனா மெட்ராஸ்லேர்ந்தே என்னை எவனோ வாட்ச் பண்ணி இருக்கான். இங்கே திருடி, அங்கே கொடுத்து அற்புதமா என்னை ஏமாத்திட்டான். நான் பையனை ஒப்படைச்சவன் முகம் எனக்கு மனசுல அப்படியே இருக்கு. இந்தப் பணம் எல்லாம் அப்படியே இருக்கட்டும். நீங்க வச்சிக்கங்க. நான் பம்பாய் போறேன். கிஷன்சந்தை பார்த்து விவரம் சொல்றேன். மறுபடி அந்தப் பொடியனைப் பிடிச்சி ஷேட்கிட்டே ஒப்படைக்கிற வரைக்கும் எனக்குத் தூக்கமில்லை. அதுக்கு முன்னாடி இது ஜீவானந்தம் விளையாடிய விளையாட்டான்னு மட்டும் தெரிஞ்சிக்கலாம்."

"உனக்கு முன்னாடி நான் தெரிஞ்சிக் கிட்டாச்சி சுபா. சரவணக்குமார் இன்னும் வந்து சேரலை. அவர் சோகமாத்தான் இருக்கார். போலீஸ் சரவணகுமார் இன்னும் மெட்ராஸ்லதான் இருக்கான்னு நம்புறாங்க. என்னென்னவோ முயற்சிகள் பண்றாங்க"

"அப்படின்னா எனக்கு உடனே பம் பாய்க்கு ஒரு விமான டிக்கெட் ஏற்பாடு செஞ்சித் தாங்க சார். இந்தத் தடவை தோற்க மாட்டேன்." என்றான் உறுதியாக சுபா.

பம்பாய்.

கிஷன்சந்த் பான் கடைவாயில் இடுக்கிக் கொண்டே ரத்தக் கொதிப்புக்காரனாய் சுபாவைக் கையை ஆட்டி, ஆட்டி சப்தம் போட்டான்.

"நீ பொய் சொல்றே. உனக்கு லட்சம் மேல ஆசை. வேற ஆள் கைலக் கொடுத் திட்டே. நம்மளை தராட்டில்ல வுட்டே."

"சும்மா அதையே சொல்லாத சேட்டு. நானே ஏமாந்துட்டேன். இதுவரைக்கும் இப்படி ஏமாந்ததே கிடையாது. சத்தியமா நாம பேசிக்கிட்ட அத்தனை விஷயமும் நடந்துச்சி. அதே கார். அதே நம்பர். வெள்ளைக் கர்சீப் ஆட்டினான். பயணம் சுகமான்னு கேட்டான். பணம் கொடுத்தான். நான் நம்பாம என்ன செய்றது?"

"நாம் போன் மேல பேஷ்னதை ஒட்டுக் கேட்டான்னு சொல்றே?"

"அப்படித்தான் ஏதோ ஆயிருக்கு நீ அனுப்பிச்ச ஆசாமி யாரு?"

கிஷன்சந்த் மேஜைக்கடியில் கையை செலுத்தி பித்தான் அழுத்த, கதவு திறந்து உள்ளே வந்தான் சிகப்பிலிருந்து பிறந்த ஜிப்பாப் பையன், "க்யா?"

"என் சொந்த மகனை அனுப்ச்சேன்யா, இவன்தான்"

"நான் பையனை ஒப்படைச்சது இவன் கிட்டே இல்லை. நல்லா மூஞ்சி ஞாபகமிருக்கு. கறுப்புதான். வகிடில்லாம தலை சீவியிருந் தான். தொங்கு மீசை, கழுத்திலே சிலுவை. மனசுல முகம் அப்படியே பதிஞ்சிருக்கு, விட மாட்டேன். ஷேட்டு, எனக்கு ஒரு உதவி செய்யி?"

"என்ன?"

"ஒரு கார் இல்லைன்னா மோட்டார்பைக் கொடு. ஒரு வாரம் டைம் கொடு. அவனைப் பிடிச்சி, என்ன செஞ்சா பதில் வரும்னு எனக்குத் தெரியும். அந்தப் பச்சாவைக் கொண்டாந்து உன் கைல ஒப்படைச் சுட்டுதான் தண்ணியைத் தொடறதுன்னு தீர்மானிச்சுட்டேன்."

"நம்புறேன். பார்க்கலாம்." என்று ஒரு சாவி எடுத்துக் கொடுத்து, "வாசல்ல நிக்கிது கேண்டி ரெட் கலர்ல ஹீரோ ஹோண்டா. புறப்படு. அப்பப்ப தகவல் கொடு"

சுபா வெளியே வந்து ஆத்திரம் அத்தனையும் பைக்கின் கிக்கரில் செலுத் திச் சீறி நகரத்தின் அடைசலான டிராஃபிக் கில் நுழைந்து கொண்டான்.

பார்க்கர் ஸ்மித்தும், ப்ரூடி ஜேம்சுமாக இரண்டு கார்களில் ஃபிலடெல்பியாவில் புறப்பட்டு நியுயார்க் நகர விளிம்பைத் தொட்டபோது, அமெரிக்கர்கள் தோண்டித் தோண்டி பள்ளங்கள் நிறைந்த நிலா உச்சிக்கு நகர்ந்து கொண்டிருந்தது. கறுப்பு வெல் வெட்டில் விசிறின வைரங்களாய் நட்சத் திரங்கள் சதா கண் சிமிட்டின. நேரம் பத்தரையைக் கடந்திருக்க... சாலைகளில் வாகனங்கள் குறைந்திருந்தன. ஓவர் பிரிட்ஜுகளின் ஓரங்களில் நீல பல்புகள் அலங்கரித்தன. ஒரு கட்டிட உச்சியில் டிஸ்ப்ளே சார்ட்டில் 'நாளை நாம் வாஷிங்ட னின் பிறந்த நாளைக் கொண்டாடுவோம் மகிழ்ச்சியாக' என்று ஆங்கிலத்தில் மறுபடி மறுபடி அதே செய்தி ஓடி வந்து கொண்டி ருந்தது.

மேடிஸன் ஸ்ட்ரீட் வந்து தனது அபார்ட்மெண்ட்டின் பார்க்கிங்கில் பார்க்கர் ஸ்மித் நிறுத்தியதும், பின்னால் வந்த காரும் நின்றது.

மூவரும் மாடிக்கு வந்தார்கள்.

ஷூக்கள் டாக், டாக் என்று சப்திக்க நடந்தார்கள்.

பார்க்கர் ஸ்மித் கதவருகில் நின்று பஸ்ஸர் அடித்தார்.

காத்திருந்த நேரத்தில் மென்த்தால் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டார். கதவு திறக்கவில்லை. மறுபடி அடித்தார்.

"வீட்டில் பையனைத் தவிர உங்கள் மனைவி மட்டும்தானே?" என்றான் ஜான்சன்.

"ஆமாம். வெளியில் எங்காவது போய் விட்டாளா?"

அப்படிப் போக மாட்டாளே...."

அருகில் இருந்த லெட்டர் பாக்சில் எதுவும் செய்தி இருக்கிறதா என்று பார்த்தார். காலியாக இருந்தது. ஒரு மெமோ பேடும், பேனாவும் தவிர.

பார்க்கர் ஸ்மித் பிறகு தன் பாண்ட் பாக்கெட்டில் இருந்த சாவி எடுத்துக் கதவைத் திறந்தார். உள்பக்கம் வழக்கமாக சாவிமாட்டும் இடத்தில் மற்றொரு சாவி இருக்கிறதா என்று பார்த்தார். இல்லை.

"ஸ்டுப்பிட் கர்ள்! பொறுப்பாகப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டுச் சென்றால், இப்படி அவனைத் தனியே விட்டு விட்டு எங்கோ போயிருக்கிறாள். வாருங்கள், அந்த அறையில் தான் சரவணகுமார் இருக்கிறான்."

பார்க்கர் ஸ்மித் அந்த அறையின் கைப்பிடியைத் திருகி உள்ளே வந்து, "ஹோ! காட்!" என்றார்.

படுக்கையில் சரவணகுமார் இல்லை. அறை முழுவதும் பரக்கப்பரக்கப் பார்த்தார். இணைந்த பாத்ரூமுக்குள் போய்ப் பார்த்தார். கட்டிலுக்குக் கீழே பார்த்தார். பீரோக்களைத் திறந்து திறந்து பார்த்தார்.

"என்ன ஆயிற்று மிஸ்டர் பார்க்கர்?"

"இதே கட்டிலில் தான் படுக்க வைத்திருந்தேன். எங்கே போனான்?"

மற்றொரு அறையிலிருந்து ம்ம்,ம்ம் என்ற முனகல் சப்தம் கேட்க, நேராக அங்கே ஓடினார். இருவரும் தொடர்ந் தனர். லேசாகத் திறந்திருந்த கதவை முழுவதுமாகத் திறந்து அதிர்ந்தார்.

நின்ற நிலையில் டிரெஸ்சிங் மேஜை யோடு இணைத்து நைலான் கயிறால் கட்டப் பட்டிருந்தாள் ரெய்ஸா. வாயில் துணி அமுக்கப்பட்டிருந்தது. தலை கலைந்திருந்தது. புஜத்தில் கவுனின் கைப்பகுதி கொஞ்சம் கிழிந்திருக்க... நகக் கீறல்கள் தெரிந்தன. நெற்றியின் ஓரத்திலிருந்து ரத்தம் கசிந்து தாடை வரை கோடுபோட்டுக் காய்ந்து இருந்தது. சொட்டியிருக்க வேண்டும். கவுனின் மார்புப் பகுதியில் கொஞ்சம் ரத்தம்.

"ரெய்ஸா!ரெய்ஸா!" என்று பதற்றத் துடன் அவளை அணுகி வாய்த்துணியை எடுத்தார் பார்க்கர் ஸ்மித். கட்டுக்களைப் பிரித்தார். இதற்குள் ப்ரூடி ஜேம்ஸ் ரெஃப்ரிஜிரேட்டர் திறந்து வாட்டர் பாட்டில் எடுத்து வந்து முகத்தில் சுள், சுள் என்று தெளித்தார். மூவருமாகத் தூக்கி கட்டிலில் படுக்க வைத்தார்கள். பார்க்கர் ஸ்மித் போனுக்கு ஓடி டாக்டருக்குச் சொல்லி விட்டு வர... ஜான்சன் நெற்றிக் காயத்தைத்துடைத்துக் கொண்டிருந்தான்.

ஐந்து நிமிடம் கழித்து கண் விழித்து மலங்க மலங்கப் பார்த்தாள் ரெய்ஸா.

"அப்படியா? காங்கிராஜு".... ஸாரி மெனி ஹேப்பி ரிட்டன்ஸ் ஆஃப்த டே. உனக்கு பர்த்டேன்னதும் உற்சாகமா? அதில வார்த்தைகளே மாறி மாறி வருது. ஸ்வீட் கொடுக்க வர்றியா, வாயேன். வீட்லதான் இருக்கேன். புரோக்கிராம்? எதுவும் இல்லை. என்ஜாயிங் த சண்டே. இரு இங்கிலிஷ் படம் இருக்கு, ஒரு தமிழ் படம் இருக்கு. பார்க்கலாம்னு இருக்கேன். சீச்சீ, நல்லபடம்மா. கார் என் கிட்டதான் இருக்கு. எங்க போகணும்? மாங்காடு விட்டுட்டியே.... போலாம். எங்க வேணாலும் போலாம். வர்றேன். உன் கூட வர்றதுக்கு என்ன? சுசியா? பயப்படாதே, வரமாட்டா. இன்னிக்கு அவ ஹாஸ்டல்ல ஃப்ரெண்டு ஒருத்திக்கு சேஷஹால்ல அபாஷன்னு... சீச்... கல்யாணம்னு போயிருக்கா. சாப்பிட்டு தான் வரு..."

"சாப்புடாமயே வந்துட்டேன். போன்ல யாரு?" என்றாள் சுசிலா வாசலில் நின்று.

கையில் ரிசீவரை வைத்துக் கொண்டு ஒரு வினாடி விழித்த பரத், நீ வா. நேர்ல பேசிக்கலாம் என்று வைத்து விட்டு, "யாரோ வரலட்சுமியாம்... உன் சினேகிதியாம். உன்னைப் பார்க்கணுமாம். இங்க இருக்கியான்னு கேட்டா. அதான் சொல்லிட்டிருந்தேன் நீ வந்துட்டே"

"மெனி ஹேப்பி ரிட்டன்ஸ்லேர்ந்து கேட்டுக்கிட்டிருக்கேன் பரத் சொல்லுங்க. போன்ல யாரு," என்றாள் சுசிலா. பனியனில் என்ன எழுதியிருந்தது? இதானே கேள்வி? சொல்லிவிடுகிறேன்.

'NOT ONLY FOR CHILDREN' என்று இருந்தது.

"வேற யாருமில்லை சுசி. நம்ம மாதவிதான்."

*(தொடரும்)*

## பேனா நண்பர் அரங்கம்













பெயர்: எம். நவ்ஷாட்
வயது: 20
முகவரி: 3, மொஹிதீன் மாவத்தை, ஹூரிமலுவ, நம்புக்கணை.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: ஏ. வின்சன்ட்
வயது: 19
முகவரி: 33/2, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13.
பொழுது போக்கு: புத்தகம், பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். சியாத்
வயது: 17
முகவரி: 103, புதுக்குடியிருப்பு, பத்துலு ஓயா.
பொழுது போக்கு: பத்திரிகை வாசித்தல்.

பெயர்: ஜி. கணேசலிங்கம்
வயது: 25
முகவரி: P.O. BPX-916, K.S.F. CAMP-5, 1301D SAFAT, KUWAIT.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனாநட்பு, கரப்பந்து.

பெயர்: ஆர். றியான்ஸி
வயது: 17
முகவரி: 59, மார்க்கட் பிறேஸ், அநுராதபுரம்.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: பி. ராணி
வயது: 40
முகவரி: P.O.BOX-281, AMMAN. JORDAN.
பொழுது போக்கு: தொலைக்காட்சி, பத்திரிகை.

பெயர்: எம். ரம்ஸான்
வயது: 24
முகவரி: P.O.BOX-456, DHAHRAN AIRFORT, DAHRAN-31932, K.S.A.
பொழுது போக்கு: வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை.

பெயர்: முகமட் பைசல்
வயது: 17
முகவரி: 404/10, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு-07.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: கே. சிவா
முகவரி: KOLIN PLAZT.6, 6300 ZUG, SWITZERLAND.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: ஆர். ரமேஷ்
வயது: 19
முகவரி: லெஜர்வத்தை தோட்டம், கந்தேகெதர.
பொழுது போக்கு: கிரிக்கெட், பத்திரிகை.

பெயர்: ஆர். பரமநாதன்
வயது: 23
முகவரி: உடப்பு 6ம் வட்டாரம், சிலாபம்.
பொழுது போக்கு: வானொலி, தொலைக்காட்சி.

பெயர்: எம். ஜிப்ரி
வயது: 21
முகவரி: 481, பள்ளி வீதி, கல்முனை-05.
பொழுது போக்கு: வாமையானவை.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

"நாங்கள் வெற்றி பெறுவது நிச்சயம்: ஏனெனில், நாங்கள் தொழிலாளி மக்களோடு ஒன்று சேர்ந்து நிற்கிறோம்" என்று உறுதியாகவும், உரத்தும் கூறினாள் சோபியா.

"அவர்களிடம் ஒரு மகா சத்தி மறைந்து கிடக்கிறது; அவர்களால் எதையும் சாதிக்க முடியும். அவர்களது மதிப்பையும் சக்தியையும் அவர்களை உணரச் செய்ய வேண்டியதே முக்கியம், அதை உணர்ந்துவிட்டால் அவர்கள் உடனே சுதந்திரமாகத் தாமே வளர்ச்சி பெறத் தொடங்குவார்கள்......"

அவளது பேச்சு தாயின் இதயத்திலே பற்பல உணர்ச்சிக் கலவைகளை உண்டாக்கியது. ஏதோ ஒரு காரணத்தால், அவள் சோபியாவுக்காக நட்புரிமையோடும், மனத்தாங்கலில்லாத ஒரு அனுதாபத்தோடும் வருத்தப்பட்டாள்; இம்மாதிரியே அவள் எளிய வார்த்தைகளை, புரியும் வார்த்தைகளையே மேன்மேலும் பேச வேண்டுமெனத் தாய் விரும்பினாள்.

"உங்களது சிரமங்களுக்கெல்லாம் பலனளிக்கப்போவது யார்?" என்று அமைதியுடனும் வருத்தத்துடனும் கேட்டாள் தாய்.

# தாய்

# 54

"நமக்கு ஏற்கெனவே விருது கிடைத்து விட்டது" என்றாள் சோபியா. அந்த வார்த்தைகள் பெருமிதத்தோடு ஒலிப்பதாய்த் தாய்க்குத் தோன்றியது. "நாங்கள் ஒரு புதிய வாழ்க்கைப் பாதையைக் கண்டு பிடித்திருக்கிறோம்; அதுவே எங்களுக்குத் திருப்தி அளிக்கிறது. நமது இதயங்களின் பரிபூரண சக்திகளோடு நாம் வாழ்கிறோம். வாழ்க்கையில் நாம் இதைவிட வேறு என்னதான் எதிர்பார்ப்பது?"

தாய் அவளை ஒரு முறை பார்த்து விட்டு, கண்களைத் தாழ்த்திக்கொண்டு மீண்டும் சிந்தித்தாள்:

'மிகைலுக்கு இவளைப் பிடிக்காது!'

அந்த இனிய காற்றை நெஞ்சு நிறையச் சுவாசித்தவாறு அவர்கள் விரைவாக -ஆனால் அவசரமின்றிச் சென்றார்கள். தான் ஏதோ ஒரு புண்ணிய யாத்திரை செல்வது போலத் தாய்க்குத் தோன்றியது. தூரந்தொலைவிலுள்ள ஒரு தேவாலயத்துக்கு, அந்தத் தேவாலயத்திலுள்ள அற்புதச் சித்திவாய்ந்த தெய்வத்துக்கு ஒரு விடுமுறைப் பிரார்த்தனைக்காக குழந்தைப் பருவத்தில் மகிழ்ச்சி பொங்கச் சென்று வந்த நினைவைத் தாய் ஞாபகப்படுத்திப் பார்த்தாள்.

சமயங்களில் சோபியா வானத்தைப் பற்றியோ காதலைப் பற்றியோ இனிமையான குரலில் ஏதாவதொரு புதிய பாட்டைப் பாடுவாள். அல்லது வயல் வெளிகளைப் பற்றியும் வனாந்திரங்களைப் பற்றியும் வோல்கா நதியைப் பற்றியும் பாடியுள்ள பாடல்களை ஒப்புவிப்பாள். தாய் அதையெல்லாம் கேட்டு, புன்னகை புரிவாள்; தன்னை மறந்து அந்தப் பாடல்களின் இனிமையில் மனம் இழந்து அதன் தாள லயத்துக்குத் தக்கவாறு தலையை ஆட்டிக் கொள்வாள்.

அவளது இதயத்துக்குள்ளே வேனிற் கால இரவில் கமகம வென்று மணம் வீசும் ஒரு சிறு அழகிய நந்தவனத்தில் இருப்பதைப் போல், அமைதியும் தன்மையும் சிந்தனையும் நிரம்பி இருந்தது.

***

அவர்கள் தாங்கள் சேர வேண்டிய இடத்துக்கு மூன்றாவது நாளன்று வந்து சேர்ந்தார்கள். தார் எண்ணெய்த் தொழிற்சாலை எங்கே இருக்கிறது என்பதை, தாய் வயலில் வேலை பார்த்துக் கொண்டிருந்த ஒரு முஜீக்கிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்டாள். இதன்பின் அவர்கள் மரம் செறிந்த செங்குத்தான பாதையின் வழியே நடந்து சென்றார்கள்; அந்தப் பாதையில் மரவேர்கள் படிக்கட்டுகளைப் போல் குறுக்கும் மறுக்குமாக ஓடி நடப்பதற்கு வசதியளித்தன. நிலக்கரித் தூளும் மரத் துண்டுகளும் தார் எண்ணெயும் படிந்த ஒரு இடத்தில் வந்து அந்தப் பாதை முடிந்தது.

"ஒரு வழியாக நாம் வந்து சேர்ந்து விட்டோம்" என்று சாவகாசமாகச் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு கூறினாள் தாய்.

மரக்கிளைகளாலும், கம்புகளாலும் கட்டப்பட்ட ஒரு குடிசைக்கு முன்னால், ஒரு மேஜை கிடந்தது; மூன்று பலகை கொண்ட அந்த மேஜை தரையோடு அறையப்பட்ட ஒரு மரக்குதிரையின் மீது இருந்தது. உடம்பெல்லாம் தார் எண்ணெய் படிந்திருக்க, தனது சட்டையின் முன்பக்கம் முழுவதும் திறந்து விட்டவாறு, ரீபின் அந்த மேஜையருகே உட்கார்ந்து எபீமோடும் வேறு இரு இளைஞர்களோடும் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். தம்மை நோக்கி வந்த அந்தப் பெண்களை முதன் முதல் கண்டவன் ரீபின் தான்; அவன் தன் கையை நெற்றிக்கு நேராக உயர்த்திப் பிடித்துக் கூர்ந்து பார்த்துவிட்டு மௌனமாக அவர்களது வரவை எதிர் நோக்கி இருந்தான்.

"தம்பி மிகயீல்! சௌக்கியமா?" என்று தூரத்திலிருந்தவாறே கூறினாள் தாய்.

அவன் தன்னிடத்தை விட்டு எழுந்து அவர்களை நோக்கி நிதானமாக நடந்து வந்தான். தாயை அடையாளம் கண்டு கொண்டவுடன் அவன் சட்டென நின்று, புன்னகை புரிந்தவாறே தனது கரிய கரத்தால் தன் தாடியை வருடிவிட்டுக் கொண்டான்.

"நாங்கள் பிரார்த்தனைக்குப் போகிற போக்கில்" என்று கூறிக்கொண்டே முன் வந்தாள் தாய். "போகிற வழியில் என் சகோதரனைப் பார்த்துவிட்டுப் போகலாமே என்று நினைத்தேன். இவள் என் தோழி ஆன்னா"

தன்னுடைய குயுக்தியைக் கண்டு தானே பெருமைப்பட்டவளாய், தாய் ஓரக்கண்ணிட்டு சோபியாவின் கண்டிப்பும், ஆழ்ந்த உணர்வும் நிறைந்த முகத்தைப் பார்த்தாள்.

"வணக்கம்!" என்று ஒரு வறண்ட புன்னகையோடு அவள் கையைப் பிடித்துக் குலுக்கினான் ரீபின்; சோபியாவுக்கு வணக்கம் செலுத்தினான். "பொய் சொல்லாதே, நீ இப்போது ஒன்றும் நகர்ப் புறத்தில் இல்லை. இங்கு நீ எந்தப் பொய்யுமே சொல்லத் தேவையில்லை. எல்லோரும் நம்மவர்கள்."

தானிருந்த இடத்திலிருந்தே எபீம் அந்த யாத்திரிகர்களைக் கூர்ந்து பார்த்தான்; பிறகு தன் பக்கத்திலிருந்த தோழர்களிடம் இரகசியமாக ஏதோ சொன்னான். அந்தப் பெண்கள் இருவரும் அருகே நெருங்கி வந்தவுடன் அவன் தன்னிடத்தைவிட்டு எழுந்து, அவர்களுக்கு மௌனமாக வணக்கம் செலுத்தினான். அவனது சகாக்கள் அந்த விருந்தாளிகள் வந்ததையே கவனிக்காதவர்கள் மாதிரி அசைவற்று உட்கார்ந்திருந்தார்கள்.

"நாங்கள் இங்கே பாதிரியார்கள் மாதிரி வாழ்கிறோம்" என்று சொல்லிக் கொண்டே பெலகேயாவின் தோளில் லேசாகத் தட்டினான் ரீபின். "யாருமே எங்களைப் பார்க்க வருவதில்லை. முதலாளி அயலூருக்குப் போயிருக்கிறார்; அவர் மனைவி ஆஸ்பத்திரியிலே கிடக்கிறாள். அதனாலே அநேகமாக இங்கே எல்லாம் என் மேற்பார்வைதான். சரி, உட்காருங்கள். ஏதாவது சாப்பிட விரும்புவீர்கள், இல்லையா? எபீம்! நீ போய்க் கொஞ்சம் பால் கொண்டுவா."



# மக்சீம் கார்க்கி

எபீம் அந்தக் குடிசைக்குள்ளே நுழைந்தான். அந்த யாத்திரிகர்கள் தங்கள் முதுகில் தொங்கிய பைகளைக் கீழே இறக்கினார்கள். நெட்டையாகவும் ஒல்லியாகவும் இருந்த ஒரு இளைஞன் எழுந்து வந்து, மூட்டையை இறக்கி வைப்பதற்கு உதவி செய்தான். உருண்டு திரண்டு பறட்டைத் தலையுடன் அவனது தோழன் ஒருவன் மேஜையின் மீது முழங்கைகளை ஊன்றியவாறு உட்கார்ந்திருந்தான்; தனது தலையைச் சொறிந்து கொண்டும், ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்துக் கொண்டும் அவன் அவர்களைக் கூர்ந்து பார்த்தவாறே ஏதோ சிந்தித்தான்.

தார் எண்ணெயின் கார நெடியும், அழுகிப்போன இலைக்குவியல்களின் நாற்றமும் சேர்ந்து இந்தப் பெண்களின் புலன்களைக் கிறக்கின.

"அவன் பேர் யாகவ்" என்று அந்த நெட்டை வாலிபனைச் சுட்டிக் கொண்டே சொன்னான் ரீபின்; "அடுத்தவன் பெயர் இக்நாத். சரி, மகன் எப்படி இருக்கிறான்?"

"சிறையிலிருக்கிறான்" என்று பெருமூச்சுடன் சொன்னாள் தாய்.

"மறுபடியுமா?" என்றான் ரீபின்; "அவனுக்குச் சிறை பிடித்துப் போயிற்று போலிருக்கிறது."

இக்நாத் பாடுவதை நிறுத்தினான்; யாகவ் தாயின் கையிலிருந்து கைத்தடியை வாங்கிக் கொண்டே சொன்னான்:

"உட்காருங்கள், அம்மா."

"ஏன் நிற்கிறீர்கள்? உட்காருங்கள்" என்று சோபியாவைப் பார்த்துச் சொன்னான் ரீபின். ஒன்றும் பேசாமல் அவள் ஒரு மரக் கட்டையின் மீது அமர்ந்து ரீபினையே கவனித்துக் கொண்டிருந்தாள்.

"அவனை இவர்கள் எப்போது கைது செய்தார்கள்?" என்று கேட்டுக் கொண்டே, தாய் உட்கார்ந்திருந்த இடத்துக்கு எதிராக உட்கார்ந்து தலையை ஆட்டினான் ரீபின். "நீலவ்னா, உனக்கு அதிருஷ்டமே கிடையாது!"

"ஆமாம், எல்லாம் சரியாய்த் தானிருக்கிறது."

"பழகிப் போய் விட்டதா?"

"இல்லை. எனக்கு அது ஒன்றும் பழகிப் போய்விடவில்லை. ஆனால், அதை விட்டால் எனக்கு வேறு கதி இல்லை."

"ஹூம்!" என்றான் ரீபின்: "நல்லது அதைப்பற்றி எங்களுக்குச் சொல்லேன்."

எபீம் ஒரு ஜாடியில் பால் கொண்டு வந்தான்; மேஜை மீதிருந்த கோப்பையை எடுத்து அதை அலம்பிவிட்டு அதில் பாலை ஊற்றினான். பிறகு தாய் கூறிக் கொண்டிருக்கும் கதையையும் அவன் காதில் வாங்கிக் கொண்டே அந்தப் பால் கோப்பையை சோபியாவிடம் நீட்டினான். சத்தமே செய்து விடாதபடி சாமான்களை புழங்குவதில் அவன் மிகுந்த ஜாக்கிரதையோடிருந்தான். தாய் அந்த விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லி முடித்த பின்னர் ஒரு மௌன அமைதி நிலவியது; அந்தச் சமயத்தில் யாரும் யாரையுமே பார்க்கவில்லை. இக்நாத் மேஜையின் முன்னிருந்தவாறே மேஜைப் பலகை மீது நகத்தால் கீறிக் கொண்டிருந்தான். எபீம் ரீபினுக்குப் பின்னால் வந்து அவனது தோளின் மீது தன் முழங்கையை ஊன்றியவாறு நின்றான். யாகவ் ஒரு மரத்தின் மீது சாய்ந்து, தனது கைகளைக் கட்டிக் கொண்டு தலையைத் தொங்கவிட்டவாறிருந்தான். சோபியா அந்த முஜீக்குகளைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தாள்....

"ஹூ-ம்-ம்" என்று மெதுவாகவும் உவகையற்றும் முனகினான் ரீபின். "அப்படியா? அவர்கள் பகிரங்கமாகவே கிளம்பி விட்டார்களா?"

"நாமும் இந்த மாதிரி ஒரு அணிவகுப்பை நடத்த முனைந்தால்" என்று ஒரு கசந்த புன்னகையோடு பேசினான் எபீம்; "அப்படிச் செய்தால் முஜீக்குகளே நம்மை அடித்துக் கொன்று தள்ளி விடுவார்கள்."

"ஆமாம். நிச்சயம் அவர்கள் கொன்று தள்ளி விடுவார்கள்" என்று தலையை அசைத்து ஆமோதித்தான் இக்நாத். "நானும் தொழிற்சாலை வேலைக்கே போகப்போகிறேன். இங்கே இருப்பதைவிட அங்கு நன்றாயிருக்கிறது."

"பாவெல் மீது கோர்ட்டில் விசாரணை நடக்கும் என்றா சொல்கிறாய்?" என்று கேட்டான் ரீபின். "அப்படியானால் அவனுக்கு என்ன தண்டனை கிடைக்கும்? அதைப்பற்றி ஏதாவது கேள்விப்பட்டாயா?"

"கடுங்காவல். இல்லாவிட்டால் சைபீரியாவுக்கு நிரந்தரமாக நாடு கடத்தப்படுதல்" என்று அமைதியுடன் கூறினாள் அவள்.

அந்த மூன்று இளைஞர்களும் ஒரே சமயத்தில் அவள் பக்கம் திரும்பினார்கள்; ரீபின் மட்டும் தலையைத் தாழ்த்திக் கொண்டு கேட்டான்:

"அவன் அதைச் செய்த போது, இந்த மாதிரி தனக்கு ஏதாவது நேரும் என்று தெரிந்துதான் செய்தானா?"

"ஆமாம். தெரிந்தே செய்தான்" என்று உரத்த குரலில் சொன்னாள் சோபியா.

எல்லோரும் ஒரே சிந்தனையால் உறைந்துவிட்ட மாதிரி அப்படியே அசைவற்றுப் பேச்சற்று மூச்சற்று இருந்தார்கள்.

"ஹூம்!" என்று முனகி விட்டு மெதுவாகவும் வருத்தத்தோடும் பேசினான் ரீபின். "அவனுக்குத் தெரியும் என்று தான் நானும் நினைத்தேன். முன் யோசனையுள்ள மனிதன் கண்ணை மூடிக் கொண்டு திடுதிப்பென்று இருட்டில் குதிக்க மாட்டான். பையன்களா! கேட்கிறீர்களா? அவர்கள் தன்னைத் துப்பாக்கிச்சனியனால் தாக்கக்கூடும், அல்லது சைபீரியாவுக்கு நாடு கடத்தக்கூடும் என்று தெரிந்திருந்தும், அவன் தன் செய்கையை நிறுத்தவில்லை. அவனது பாதையில், தாயே குறுக்கே விழுந்து தடை செய்திருந்தாலும், அவன் இவளையும் மீறித் தாண்டிச் சென்றிருப்பான். இல்லையா, நீலவ்னா?"

"ஆமாம், அவன் செய்வான்" என்று சொல்லிக் கொண்ட நடுங்கினாள் தாய்; அவள் பெருமூச்செறிந்தவாறு சுற்றுமுற்றும் பார்த்தாள். சோபியா அவள் கையை அமைதியாகத் தட்டிக் கொடுத்துக் கொண்டே, நெற்றியைச் சுருக்கி விழித்து ரீபினை கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தாள்.

"இவன் ஒரு உண்மையான மனிதன்!" என்று அமைதியாகக் கூறிக் கொண்டே, தனது கரிய கண்களால் அங்குள்ளவர்களைப் பார்த்தான் ரீபின். மீண்டும் அந்த ஆறு பேரும் மோன அமைதியில் ஆழ்ந்து விட்டார்கள். சூரிய கிரணங்கள் தங்கத் தோரணங்களைப் போல் காற்றில் தொங்கி ஊசலாடின. எங்கோ ஒரு அண்டங்காக்கை கத்தியது. தாயின் மன நிலை மே தினத்தின் நினைவாலும், பாவெல், அந்திரேய் இருவரையும் காணாத ஏக்கத்தாலும் குழம்பித் தடுமாறியது. அந்தக் காட்டின் நடுவிலே காலித் தார் எண்ணெய்ப் பீப்பாய்கள் உருண்டு சிதறிக் கிடந்தன, தரையைக் கீறிக் கிளம்பிய மரவேர்கள் எங்கு பார்த்தாலும் துருத்தி நின்றன. அந்தக் காட்டின் எல்லையில் ஓக் மரங்களும் பெர்ச் மரங்களும் மண்டிப் பெருகி, அசைவற்று கரிய நிழல்களைத் தரை மீது பரப்பிக் கொண்டிருந்தன.

திடீரென்று யாகவ் அந்த மரத் தடியிலிருந்து விலகி, வேறொரு பக்கமாகச் சென்றான்.

"அப்படியானால், பட்டாளத்தில் சேர்ந்தால் இந்த மாதிரி ஆட்களை எதிர்ப்பதற்காகத்தான் என்னையும் எபீமையும் அனுப்புவார்களோ?" என்று உரத்து, தன் தலையைப் பின்னுக்கு வாங்கி நிமிர்ந்தவாறே கேட்டான் யாகவ்.

"வேறு யார்மீது உங்களை ஏவி விடுவார்கள் என்று நினைத்தாய்?" என்றான் ரீபின். "அவர்கள் நமது கைகளைக் கொண்டே நம்மை நெரித்துக் கொல்வார்கள்- அதுதான் அவர்களுடைய தந்திரம்!"

"எப்படியானாலும் நான் பட்டாளத்தில் சேரத்தான் போகிறேன்" என்று உறுதியோடு சொன்னான் எபீம்.

"உன்னை யார் தடுக்கிறார்கள்?" என்று சத்தமிட்டான் இக்நாத். "நீ பாட்டுக்குப் போ. ஆனால், நீ ஒரு வேளை என்னையே சுட நேர்ந்தால், தயை செய்து என் தலைக்குக் குறி பார்: வீணாக வேறிடத்தில் சுட்டு என்னை முடமாக்கி விடாதே; சுட்டால் ஒரேயடியாய்க் கொன்று தீர்த்துவிடு" என்று சிறு சிரிப்புடன் சொன்னான் இக்நாத்.

"நீ சொல்வது எனக்கு ஏற்கனவே தெரியும்" என்று வெடுக்கென்று பதில் சொன்னான், எபீம்.

"ஒரு நிமிஷம் பொறுங்கள், பையன்களா!" என்று தன் கையை உயர்த்திக் கொண்டே சொன்னான் ரீபின். "இதோ இந்த அம்மாளுடைய மகன்தான் இப்போது மடியப் போகிறான்!" என்று தாயைச் சுட்டிக் காட்டினான்.

(தொடர்ந்து வரும்)

# பாசங்கள் பரவசம்

பதுளை நோக்கி புறப்படும் பஸ் இது. நான் கடைசி ஆசனத்தின் ஜன்னலருகில் அமர்ந்திருக்கின்றேன். அக்கா வீட்டில் 2 நாட்கள் தங்கிவிட்டு இன்று என் வீட்டுக்குச் செல்கிறேன். வீடு என்றதும் முதலில் நினைவிற்கு வருவது எனது ஒரு வயது "செல்லக்குட்டி" தான். அவனுக்குத் தான் என்மீது எத்தனை பாசம்! நானில்லாமல் எப்படி 2 நாட்கள் இருந்திருப்பானோ தெரியவில்லை. சாப்பாடு கூட நான் தான் கொடுக்கவேண்டும். அம்மாவின் நச்சரிப்பினால் தான் நானும் அக்காவீட்டிற்கு செல்ல நேர்ந்தது. இல்லாவிட்டால் என்னால் மட்டும் அவனைப் பிரிந்திருக்க முடியுமா என்ன?



அக்கா என்னை இன்னும் 2 நாள் தங்கும்படி எவ்வளவு கெஞ்சினாள். "சுட்டிப் பயல் தவித்துப் போயிருப்பான்" என்று மன்றாடி கிளம்பும்படியாகிவிட்டது.

பாவம் "அவன்." நான் சாதாரணமாக கடைக்குச் சென்றாலே வரும் வரை கவலையாய் இருப்பான். நானும் எங்கு சென்று வந்தாலும் "அவனுக்கு" சாப்பிட ஏதாவது வாங்கிவருவேன். இதனால் தினமும் என் தாய்க்குலத்துடன் சண்டைதான். "யாரோ பெத்தபிள்ளைக்கு காட்டும் பாசத்தை கூடப் பிறந்த சகோதரிக்குக் காட்டு" என்பாள். பதிலுக்கு நானும் ஏதாவது கூற யுத்தம் தான். இன்றும் "அவனுக்காக" நிறைய இனிப்புகளும் பிஸ்கட்களும் கூடவே கொண்டு செல்கிறேன்.

செல்வி. அ. தமயந்தி. பதுளை

"அவன்" எம் வீட்டிற்கு வந்து இன்றோடு சரியாக 1 வருடமும் 2 மாதமும் ஆகின்றது. எமது நட்பு 1 வருட நட்பு. ஆண்டாண்டு பழகியவர்கள் கூட 1 நிமிடம் சரி முகத்தை தூக்கி கொண்டு இருந்திருக்கலாம். ஆனால் நான் "அவன்" வரம்பு மீறி சேட்டைகள் செய்தால் கூட கோபிப்தேயில்லை. இவனுடைய தாய் தந்தையரை எனக்குத் தெரியாது. எனது தாத்தா தான் ஒருநாள் "இவனை என்கையில் ஒப்படைத்து இவனை நன்கு வளர்த்து, பெரியவனாக்கும் பொறுப்பு உன்னுடையது" என்று கூறி கண்ணை மூடிவிட்டார். அன்றிலிருந்து இந்த சுகமான சுமையை நான் தான் சுமக்கின்றேன். "அவனை" சீராட்டி அவனுக்கொரு தந்தையாக, சகோதரனாக, தோழனாக இருந்து வளர்ப்பது நான் தான்.

"இவன்" குறும்புகளை இரசிப்பதிலேயே நேரம் போவது தெரியாது. மழலையின் மொழியினில் மகிழாதவர் யார்? நான் ஒன்று கேட்க அவன் பாஷையில் ஏதோ கூறி மகிழ்வான். உண்மையில் நான் உலகில் யார்மீதும் காட்டாத அன்பை "அவன்" மீது காட்டுகின்றேன். இந்த 2 நாள் பிரிவுதான் என் வாழ்வில் "அவனை" அதிகமாகப் பிரிந்த நாட்களாக இருக்கும்.

காலைக்குளிர் தாளாமல் "ஏன் விடிகின்றது" என்று கண்ணயரும் போது கூட "இவன்" குரல் கேட்டதும் ஓடிச் சென்று தழுவுவேன் நான். பலர் எம்மைப்பார்த்து பொறாமைப்பட்டதுண்டு.

பஸ் பதுளையை வந்தடையவும் எனது மன ஓட்டம் கலையவும் சரியாக இருக்கின்றது. அவன் நினைவுகளை மீட்டதில் 5 மணித்தியாலப்பயணம் 5 நிமிடம் போல் ஓடிவிட்டது. இப்போது தான் கண்களை வெளியில் சுழலவிடுகின்றேன். வானம் மப்பும் மந்தாரமுமாக இருப்பதைப் பார்த்தால் இப்போதே மழை பெய்து விடும் போல் இருக்கிறது. "அவனை"ப் பார்க்கும் ஆசையிலும் கையில் குடையில்லாத பயத்தாலும் வேகமாக வீடு நோக்கி நடக்கின்றேன்.

கேட் திறக்கும் சத்தம் கேட்டதும் ஓடி வருகின்றான் எனது "செல்லக் குட்டி." ஆ.... எத்தனை சந்தோஷம் அவன் முகத்தில், "எங்கே என்னை விட்டுப் போயிருந்தாய்" என்பது போல் வாலை ஆட்டிக்கொண்டு குரைக்கின்றான். பாய்ந்து வந்து என்காலை இறுகப்பிடிக்கின்றான். "டாமி" என்று நானும் அவனை அணைக்கின்றேன். மனிதர்கள் கொண்ட பாசத்தைவிட எதிர்பார்ப்பு இல்லாத இந்த நன்றி உள்ள மிருகம் கொண்ட பாசம் என்றும் நிகர் அற்றது.



படிப்பகம்

www.padippakam.com

# சிறுகதை

# கருகும் மொட்டுக்கள்



## ஆத்மராஜா றூத் சந்திரிக்கா

**கோ**பியண்ணன் அதிர்ந்து போனான். திருமணம் நடந்து ஒரு வாரம் கூட ஆகவில்லை. அதற்குள் யாழ்ப்பாணத்திற்கு ட்ரான்ஸ்பர் வந்திருந்தது. சரியான அநியாயம்.

'இறைவன் விட்டவழி' என்று எங்களுக்குச் சமாதானம் சொன்னாலும் உள்ளுக்குள் உதறலெடுத்து விட்டதென்பது எனக்குப் புரிந்தது. "நீயேதும் ஏடாகூடமாய் கதைச்சிருப்பாய், தண்ணியில்லாத காட்டுக்குப் போட்டு வாட்டவேணுமெண்டு நினைச்சிருப்பாங்கள். எல்லாம் உன்ரை வாய்க்கொழுப்பு"

ஐயா இரைந்தார் உச்சஸ்தாயியில். அண்ணை வெலவெலத்துப் போனான். "சத்தியமாய் நானொருத்தருக்கும் ஒண்டும் பேசேல்ல ஐயா, என்ரை பாட்டுக்கு கடமையைச் சரிவரச் செய்தனான். ஏனிப்பிடியொரு உசுப்பலோ தெரியேல்ல, என்ன செய்யுறது நான் போறன்".

"எங்கையடா...?"

"வேறையெங்க தெல்லிப்பளை மகாஜனாவுக்குத்தான், வேறையென்ன செய்யேலும்......?"

"மகாஜனா இப்ப மருதனார் மடத்திலையெல்லோ கொட்டில் பாடசாலையாய் இயங்குது" நான் அவசரமாய் கேட்டன். "அங்க போய் வீணாய் சாகப் போறியே?" ஐயா பதறினார்.

"விதியெண்டால் மாற்றேலுமே....., ஏன் செவ்வேளவையும் அங்க உயிரோடு சீவிக்குதுகள் தானே?" ஐயா மௌனித்தார்.

கோபியண்ணை மனுஷியையும் கூட்டிக்கொண்டு போய்விட்டான். வடமராட்சியில் அடிகிடியெண்டதுமே என் சர்வாங்கமும் பதறும், கோபியண்ணையை நினைச்சு உதறும். அண்ணி கர்ப்பமாயிருப்பதை அறிந்ததும் அம்மாவும் ஐயாவும் ஆள் மாறியாள் கடிதமெழுதி ஒருபடியாய் அண்ணியை எடுத்துப் போட்டினம். அதுவும் ஏழாம்மாசத்தில். 'நல்ல வேளை இந்தப் பிரச்சனைகாலத்தில் இஞ்சாலப்பக்கம் வந்து சேர்ந்தது' எனும் நிம்மதி எங்களுள்.

அண்ணி அளவளவாய் குழந்தைக்கான உடைகள் தைத்து அடுக்கிவைத்தாள். அறை முழுவதும் அழகழகான குழந்தைப் படங்கள் மாட்டிப் பூரித்தாள். பிறக்கப்போகும் குழந்தை பற்றி, குழந்தையின் இலட்சணம் பற்றி, எதிர்காலம் பற்றி-நிறைய கனவுகள் கண்டாள். கற்பனை உலகில் உலாவந்தாள். அண்ணி முகத்தில் தாய்மைப்பூரிப்பும் வியாபித்திருந்தது. குழந்தை ஆணா பெண்ணா எனும் வாக்குவாதம், குழந்தைக்கு பெயர் வைப்பது பற்றிய சர்ச்சை, குழந்தை அண்ணன் போல ஆறடியா... அண்ணி போல சிவப்பா... எனும் எதிர்பார்ப்புகள் அப்படியிப்பிடி ஏராளமான ஆவல்கள். அண்ணிக்கு வலியெடுத்தது. பிரசவவலி.

பிறந்தது அழகானதொரு ஆண்குழந்தை-இறந்து.

விக்கித்தோம்-விழிகசிந்தோம். அத்தனை கனவுகளும் ஒரு கணப்பொழுதில் கருகிக் கனலாகிவிட்டது போல....., ஒப்பற்ற ஓவியம் தீயிலிட்டுச் சாம்பலாகி விட்டது போல....., கனவுராஜ்ஜியம் சிதறிச் சிதைந்து கலைந்து போனது போல..., ஓர் உயிரோவியம்.. உயிர்ப்பிழந்து கிடந்தது.

'தாயின் மன அழுத்தங்களும், சூழலின் அதிர்வுகளுமே இக்குழந்தையின் இறப்புக்கான காரணம்'-மருத்துவர் யதார்த்தத்தை அனுசரித்துக் கருத்துச் சொன்னார். அண்ணி வலி தெளிந்து, அதிர்ச்சி வாங்கி ஸ்தம்பித்து பின் உணர்வாகி குலுங்கிக் குலுங்கியழுதாள். பத்துமாதங்கள் பட்ட ரணங்கள் அழுகையாக வெளியேறியது. எத்தனை எதிர்பார்ப்புகள்? எல்லாமே பொய்யாகிப் போயின. என்ன செய்வது?

கர்ப்பச் சூழலை விட்டுக் கழன்ற பின்பு வாழ்கைச் சூழல் போர்க்களமாவது தான் இயற்கை. தேசமே போர்க்களமாகியதால் உயிர்கள் பூமிக்கு வரப்பயந்து இறக்கின்றதா? எனும் வினாவந்து மனதில் மோதியது. மனம் கசிந்தது.

அங்குமிங்கும் சிதறியோடும் அவலத்தால் எத்தனை உயிர்கள் கர்ப்ப அறையிலே கண்ணை மூடிக் கொள்கின்றன? குருஷேத்ரமாய் மாறிய மண்ணில் பாதம் படுவதை விரும்பாத தளிர்கள் கர்ப்ப அறையிலேயை கல்லறையமைத்துக்கொள்ள முயல்கின்றனவா....? எத்தனை எத்தனை எண்ணிலடங்கா அஸ்தமனங்கள்!

அண்ணி சோர்வாய் இருந்தாள். ஒரு ஜென்மமே விரயமாகிவிட்ட பாவனையில் பட்ட வேதனையும் கவலையும் அப்பிக்கிடக்க தாய்மையுணர்வு பஸ்பமாகிவிட்ட தோறணையில். கோபியண்ணன் மௌனித்திருந்தான். "அண்ணை" பின்புறமாய் தோளில் கரம் பதித்த என்னை அண்ணாந்து பார்த்தான். என் விழித்திரை விலகிற்று. ஹிருதய ஓலம் பொங்கி வழிந்தது என் விழிகளின் வழியாக-அழுகை-பலவீனம்தான்-இழப்பிலும் கூடவா? பல வேளைகளில் அழுகை வேதனையின் வடிகாலாகி இதய பாரத்தை வெளியேற்றி விடுகிறது. பாரம்பரியம் பேணிக்கொள்ள மண்ணில் படர்ந்து தவழ்ந்து, செடியாகி, மரமாகி, விருட்சமாக வேண்டிய தளிர் முளையிலே கருகிப்போன சோகம் அண்ணனை உலுக்கிவிட்டிருந்தது.

"தலைவிதியைப் பறிகொடுத்த எங்கடை சனத்தின்ரை அவஸ்தைகளில் இது ஒரு சிறு துளி" என்றான் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு. தன்னையும் தேற்றி எங்களையும் தேற்றிக்கொள்வதற்குப் பிரயத்தனப்படுகிறான் என்பது தெளிவானது. ஐந்து நாள் சோகம் முகத்தில் தேவதாஸ் கோலம் போட்டிருந்தது. கசங்கிய சேட்டும் வாரப்படாத தலைமுடியும் அசல் விசரனாய் முத்திரை ருத்தியது. ஆனால் வார்த்தைக் கோர்வைகளில் நிதானம் சக நியாயம் கலந்திருந்தது. யதார்த்த ஜீரணிப்புகள் அத்தியாவசியமென உணர்ந்தவன் போல விருட்டென எழுந்தான். முகம் கவலை தொலைத்து தெளிவாகியிருந்தது.

"எத்தினை பேர் மலைமலைபோல இழப்புகளைச் சந்திச்சிருக்கினம். அதுகளோடை ஒப்பிடேக்க இது சிம்பிள்-வலு சிம்பிள்" அண்ணியை ஆறுதல் படுத்தினான். அண்ணி ஆச்சர்யமானாள்.... 'இதெப்பிடி எப்பிடி முடிகிறது இவனால்?' என்று விழியகல வினாவினாள். "இறந்த காலத்தின்ரை இழப்புகளை மறக்க வேணும், நிகழ்காலத்தின்ரை நிதர்சனங்களை ஜீரணிக்க வேணும்; எதிர்காலத்தின்ரை நிகழ்வுகளுக்கு தயாராக வேணும்; இதுதான் இன்றைய நியதி! ம்.... எழும்புங்கோ எழும்பிப் போய் முழுகிக் கொண்டு வாங்கோ!" ஐயாவை உசுப்பினான். "கறை படிந்த வரலாறில் நமக்கும் ஒரு துளியாவது பங்குண்டு என்று திருப்திப்படு ராஜி..." என்றான் அண்ணியைத் தோள்தொட்டு.

அண்ணி மெதுவாகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள். சூன்யப் பார்வை தொலைந்தது. "எத்தனை எத்தனை தளிர்கள் கருகிப்போகின்றன...." அண்ணி முகத்தில் அமைதி குடியமர்ந்தது. இனம்புரியாததோர் திருப்திப்பாடு பளிச்சிட்டது. இழப்புச் சோகம் இருதய அடித்தளத்தில் சம்மணமிட்டுக் கண்மூடிக்கொண்டது. வேதனை ஜீரணமானது.

# வேலி



## ஷர்மிளா இஸ்மாயில் - கண்டி

**வா**சற்படியில் கால் வைக்கையில் அப்பா கண்டு கொண்டார். "ஏ...ரகு... எங்கேடா பயணம்? இந்தா இந்த லெட்டரைக் கொண்டு போய் ராஜா அங்கிளிடம் குடுக்கிறியா?" அவன் பதிலை எதிர்பார்க்காது கடிதத்தை கொடுத்து விட்டுப் போய் விட்டார் அவர் பாட்டுக்கு.

ஏதோ ஒபீஸ் சம்பந்தப்பட்ட கடிதம் போல் தென்பட்டது. ராஜா அங்கிளும் ரகுவின் அப்பாவும் ஒரே ஒபீஸில் வேலை புரிபவர்கள். இரண்டு தெருக்கள் தள்ளியிருந்தது ராஜா அங்கிளின் வீடு.

எரிச்சலோடு பயணப் பட்டான் ரகு. நண்பனுடன் ஜாலியாய் மாலை நேர "ரோந்து" போய், சிட்டுக்களை 'சைட்' அடித்து கும்மாளம் போட்டு வரலாம் என "டிப் டொப்"பாக உடுத்திக் கொண்டு போகப் புறப்பட்டால்... இது வேறு.

சைக்கிளை எடுத்தான். எரிச்சல் ஏகமாகியது. 'டயர்' புஸ்ஸென சோர்ந்து போய் காற்றைக் கை விட்டிருந்தது. விடுவிடென நடந்தவன் நேரே ராஜா அங்கிளின் வாசற்படியில் நின்றான்.

"ஓ...ரகுவா...வா...வாடாப்பா... என்ன இந்தப் பக்கமாக இப்ப வழி தெரிஞ்சுதா?" மனதுக்குள் சுள்ளென கோபம் எட்டிப் பார்த்தது. மனுசன் வேறு பெரிதாக வரவேற்புரை கொடுக்கிறார். ஆளிடம் அகப்பட்டுக் கொண்டால் விடுதலை லேசில் கிட்டி விடாது. கதைப்பார் கதைப்பார் ஊர் உலக நாட்டு விடயங்களை ஒரே மூச்சில் அலசி விட்டு மறுவேலை பார்ப்பார். மரியாதையின் நிமித்தம் பொறுமை கடைகொள்ளப்பட வேண்டிய கட்டாய நிலை. பல்வேறு சமயங்களில் ஏற்பட்டதை நினைக்க ரகுவின் இதழில் லேசான புன்னகை கூட எட்டிப் பார்த்தது.

"இல்ல...அங்கிள்...நா...நான் அவசரமா போகனும். ஒரு வேலையிருக்கு" ரகு மறுத்தான். விட்டாரா மனிதர்? கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் உட்கார வைத்து விட்டார். வழமை போல் சூடான தேனீரைத் தந்த ஆண்ட்டி புன்னகைத்து குசலம் விசாரித்து உள்ளே போனார். அங்கிள் கதைக்கு முற்றுப் புள்ளியிடாது பேசினார். ரகு தலையாட்டினான். 'உம்' மென்றான். இடைக் கிடை ஏதோ சொல்லி வைத்தான்.

"சமாதானம் எப்போ வரும் தம்பி? எப்படி வரும் தம்பி? இப்போ பாருங்க.... நாம ஒருத்தர ஒருத்தர் புரிஞ்சிக்கிட்டு விட்டுக் கொடுத்தா என்ன? கொஞ்சம் விட்டுக் கொடுத்து வாழ்ந்தா குடும்பத்துல, நாட்டுல ஏன் முழு உலகத்துலேயே சண்டையில்லாமப் போயிடும்."

"ரொம்ப சரி...." ரகு ஆமோதித்தான். "நீங்க சொல்றது 'கரெக்ட்'அங்கிள்" அங்கிளுக்கு உச்சந்தலையில் ஐஸ் வைத்ததாய் சில்லிட்டு உள்ளங்குளிர்ந்தது. எத்தனை அமோக பாராட்டு. அதுவும் ரகுவின் வாயால்.

அங்கிள் எழுந்து நின்றார். கைகளைப் பின்புறமாய்க் கட்டிக் கொண்டார். "ஒவ்வொரு நாளும் பேப்பர விரிச்சா ஒரே யுத்த செய்திதான். அந்த மாதிரி மனுசங்க ரொம்பவும் கொடுமையா நடந்துக்கிறாங்க. மனிதாபிமானம் அடியோட அழிஞ்சு போச்சு இனி இந்த நாடும் சரி, உலகமும் சரி உருப்படற நாள் எது? ஒற்றுமையா வாழத் தெரியாதவரைக்கும் சண்டை, சச்சரவு தொடர் கதைதான்... அந்த ஆண்டவன் தான் ஒரு முடிவ நல்லதா தரணும்.."

ரகு நெளிந்தான். எப்படி விடுபடுவது? நண்பன் எதிர்பார்த்து ஏமாந்து திட்டிக் கொண்டிருப்பான். "டியூசன்" முடிந்து சிட்டுக்கள் போகும் நேரமும் கடக்கிறது. இனி எங்கே போய் என்ன செய்வது? மனம் எரிந்து புகைந்தது.

ரகு யோசிக்கையில் ஆண்ட்டி ஓடி வந்தார். "இந்தா...பாருங்க...பக்கத்து வீட்டுக்காரன் நம்ம வேலியோர தென்னை மரத்துல காயெல்லாம் பிடுங்கிட்டான். மொத மொதலா மரம் காய்ச்சிருக்கு.... காயெல்லாம் அவனே ஆள் வெச்சு பிடுங்கி எடுத்து....."

ஆண்ட்டியை தொடர விடவில்லை அங்கிள். அவர் முகம் சிவந்தது. கண்கள் உருண்டன. மீசை துடித்தது.

"என்ன?" என்றவாறு சாரத்தின் நுனியை தூக்கிப் பிடித்தவராய் ஆவேசங்கொண்டு இரண்டே பாய்ச்சலில் தாவினார்.

வேலையாளுடன் ஏதோ கதைத்த வண்ணம் நின்றிருந்த பக்கத்து வீட்டுக்காரனின் கழுத்து பிடிபடும் வாக்கில் சேர்ட்டை பிடித்திழுத்தார். கட்டைத் தொண்டையால் கர்ணகடூரமாய்க் கத்தினார்.

"ஏண்டா டேய்! உனக்கு எத்தனை திமிரிருந்தா எங்கிட்ட ஒரு வார்த்தை கேட்காம தேங்காய் பறிச்சிருக்கே? அதுவும் என் வேலியோர மரம். எங்க தாத்தா காலத்துல இருந்து இந்த வேலி எங்களோடது. மரங்களும் எங்களோடது. நேற்று வந்த நீ...." என ஓங்கி அறைய முற்பட அந்த பக்கத்து வீட்டுக்காரன் வெகு அலட்சியமா பதிலிறுத்தான்.

"சும்மா கத்தாதீங்க பெரியவரே.... பறிச்ச காயில சரிபாதி பாகம் போட்டு உங்களுக்கு பாதி எனக்கு பாதியாய் பிரிச்சு எடுத்திருக்கேன். அதை உங்க "வைப்" கிட்டேயும் கொடுத்திட்டேன். நீங்க என்னடான்னா...."

பெரியவர் அதிர்ந்து நிற்க அவர் மனைவியோ "ஐயோ....இதைச் சொல்லத்தான் ஓடி வந்தேன். எங்கே விட்டீங்க...!" "வேலின்னா இரண்டு தரப்புக்கும் சொந்தம் தானே" என ரகு சிரித்தவாறு நடந்தான்.

# கடுகுக் கதைகள் 2

## திருமலை சுந்தரா

### பொய்

**சி**வராமன் பதில் சொன்னான்-

'சாப்பாடு செய்யிற விசயத்தில என் மனைவிக்கு கொஞ்சம் பஞ்சித் தனம் பாருங்க....'

கேட்டவர் உறவினர். அவர் போய் விட்டார்.

அடுத்த நிமிடம்...

மனைவியின் 'செல்' தாக்குதல்கள்...

பீரங்கி...விமான தாக்குதல்கள்...

தாக்குப் பிடிக்காமல் தடுமாறி அகதியாக ஓடநினைத்த சிவராமன் நினைத்துக் கொண்டான்- உண்மைமட்டுமல்ல- சில நேரங்களில் பொய்யும் பேசத் தெரிந்திருக்க வேண்டுமென்று....

### சுத்தம்

**ஆ**ஸ்பத்திரி வாட்டில் ஒரே சத்தம். டாக்டர் சிவராமன் நேர்ஸ் சிவரமணியிடம் காரணம் கேட்டார்.

நேர்ஸ் சிவரமணி ஆஸ்பத்திரி நிர்வாகம் அனுப்பி வைத்த; வாட்டில் மாட்டி இருந்த பலகையை காட்டினாள்.

அந்த பலகையில்....

'வாட்டை சத்தமாக வைத்திருங்கள்'

என்று எழுதி இருந்தது.

சுத்தம் சத்தமாக மாறிப் போனது கண்டு டாக்டர் சிவராமனும் சத்தமாக சிரித்துக் கொண்டார்.



# மீண்டும் தலைப்புச் செய்திகள்.....!

## கிண்ணியா அமீரலி

'**ம**ழையும் முகிலும் கூடுதே!

சங்கீதம் பாடுதே!

சந்தோஷம் தேடுதே!...'

"எம்.மோகன்ராஜின் இசையமைப்பில் ஜெயபாரதிதாசன் இயற்றிப் பாடிய அந்தப் பாடலோடு நிறைவு பெற்ற நிகழ்ச்சி மெல்லிசைப் பாடல்கள்-விடுமுறை விருப்பம்."

"இன்னும் சில வினாடிகளில் எமது செய்தி அறிக்கையை நீங்கள் கேட்கலாம்"

கிஸ்....கிஸ்.....கிஸ்....

"இருட்டு நேரம்.

இதய அபகரிப்புக் கூத்துத் 'தாப'னம்.

செய்திகள்.

வாசிப்பவர்

நேற்று வாசித்தவர்.

"திருகோணமலை மாவட்டக் காதல் மன்ற உறுப்பினரும், கிண்ணியா சைட்டடிச் சங்கத் தலைவருமாகிய 'தெரு. கொழுத்த மாம்பழம்' அவர்கள்- முரசு 127இல் திருகோணமலை ஜெயபாரதிதாசன் எழுதிய 'பிறந்தநாள் வாழ்த்துக்கள்' கதைக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மடத்தடி- பஸ்தரிப்பிடத்தில் விவாகமாகாத காளையர் நலன் கருதி அக்கம் பக்கத்து வீடுகளின் ஜன்னல்களை மூடிவிடுமாறு 'லவ் பெட்டர்ஸ்' அமைப்பாளர் 'தாடி. லவ் பிறேக்கர்' பணித்துள்ளார்.

தனியாக நடமாடும் கலியாணம் ஆகாத சகல சல்வாரிகளுக்கும் தாவணிகளுக்கும் அபராதம் விதிக்கப்படும்.

தனது அனுமதி இல்லாமல் கனவிலும் நனவிலும் கலந்து தன்னைக் கண்காணித்து வரும் காரிகை, அதிக வம்பாளர் என்றும், சுடு தண்ணி மாதிரிக் கடுகடுப்பானவர் என்றும் தன்னை வர்ணித்ததைத் தான் கடுமையாகக் கண்டிப்பதாகத் தெரு. கொழுத்த மாம்பழம், நேற்றிரவு நடைபெற்ற 'சிற்றிடையர் மாநாட்டில்' தெரிவித்தார். தரிப்பிடத்தில் தரித்திருக்கும் செடி கொடிகளையும், சக பயணிகளையும், பாத 'சாரி' களையும் நோட்டமிடுவது தனது பணியல்ல என்றும் அவர் கூறினார். கடந்த நான்கு வாரங்களுக்கும் மேலாகத் தன்னுடைய அடுத்த வளவுக் 'கறுத்தக் கொழும்பானை' காதலித்து வருவதாகவும், தான் செல்லும் பாதையில் தனது தரிசனத்திற்காகக் காலம் பூராவும் கால்கடுக்கக் காத்திருக்கும் அந்தக் காரிகையைத் தனக்குத் தெரியாது என்றும் அவர் தெரிவித்தார்.

கொங்கொங் தேசத்துப் பூங்காவில் தன்னோடு கை கோர்த்துக் கொண்டு 'டூயட்' பாடித் திரிந்த ஈஸ்மன் கலர்க் கனவுகளுக்கும் தனக்கும் எதுவிதமான சம்பந்தமும் கிடையாது என்றும் அவர் மறுப்புத் தெரிவித்தார்.

இதனை அடுத்தே- பஸ்தரிப்பிடத்தில் விவாகமாகாத காளையர் நலன் கருதி அக்கம் பக்கத்து வீடுகளின் ஜன்னல்களை மூடிவிடுமாறு- தாடி லவ் பிறேக்கர் பணிப்புரை விடுத்தார்.

மீண்டும் விளம்பரத்தைத் தொடர்ந்து.... செய்திகள் தொடரும்.....

'அருகில் வீடிருந்தால்.... காதலுக்கு வெட்கம்தான். பார்க்-பீச்... காதலரைப் பெற்றோரிடமிருந்து பாதுகாக்கும்.'

தனியாக நடமாடும் கலியாணம் ஆகாத சகல சல்வாரிகளுக்கும் தாவணிகளுக்கும் அபராதம் விதிக்கும்படி- காதல் விவகார அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இனி வானிலை.

வீடுகளில் சில தாவணி மேகங்கள் கறுத்துக் காணப்படும். அடியுடன் கூடிய உதையும் கண்ணீர் மழையும்.. இனித் தொடர்ச்சியாகப் பெய்யும்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்..."





படிப்பகம்

www.padippakam.com

# ரசிகன் ஏன் வீழ்ந்தான்?



**மா**மன்னர் ரகுநாத பல்லவருக்கு விழிகள் இரண்டும் தணல் துண்டுகள் போல் சிவந்திருந்தன.

"நிர்வாகம் நடத்த நீ சொல்லித் தருகிறாயா? நேற்றுப் பெய்த மழையில் இன்று முளைத்த காளான் நீ, நெடிதுயர்ந்து வளர்ந்த ஆலமரத்துக்கு ஆலோசனை சொல்கிறாயா?"

வார்த்தைகள் பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டங்களாய் வெளிப்பட்டன.

தாங்கிக் கொண்டான் மணிபல்லவன். ரகுநாதபல்லவரின் தம்பி.

மாமன்னராகத் தான் இருந்தும், மகுடம் தன் தலையில் இருந்தும், தம்பி மணிபல்லவனுக்குத்தான் நாடெங்கும் செல்வாக்கு. போகுமிடமெல்லாம் புகழாரம்.

பொறுக்க முடியவில்லை ரகுநாத பல்லவருக்கு.

பதவியும்-புகழும் வெறியாக மாறினால் சித்தம் முழுக்க அதிகார ஆசையே ஆட்சி நடத்தும்.

பசி வந்தால் பறக்காத சில பண்புகள் கூட சிலருக்கு பதவி வந்தால் பறந்து போய்விடுகின்றன.

பதவிக்குத் தரப்படும் பணிவும், மதிப்பும் தமக்கே தரப்படுவதாக தலையில் ஒரு கனம் வந்து தங்கியிருந்துவிடுகிறது.

அண்ணனோ-தம்பியோ-நண்பனோ உறவோ எதுவாயிருந்தாலும் பதவிக்கு முன்னால் தூசு என்ற எண்ணம் மனதில் ஒரு மாசு போல படிந்துவிடுகிறது.

எல்லாப் புகழும் எனக்கே என்னும் தன்னலம் வந்து தலைநீட்டிக் கொள்கிறது.

அடுத்தவர் ஒருவருக்கு புகழ் சேர்ந்தால் தனது புகழ் கெட்டுப் போகுமோ என்னும் பொறாமை உணர்வும் பூத்துவிடுகிறது.

ரகுநாத பல்லவனும் பொறாமைப் பட்டான். மணிபல்லவன் தனது தம்பியேயானாலும் புகழின் உச்சிக்குச் செல்வதில் தன்னை முந்திவிடுவானோ என்ற தன்னல அரிப்பால் தன்னையே சொறிந்தான்.

"ஆட்சி நிர்வாகத்தில் இருப்பவர்கள் மக்களின் சேவகர்களாக இருப்பதற்கு பதிலாக, மக்களின் எஜமானர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். துயர் சுமக்கும் மக்களுக்கு தோள் கொடுக்க வேண்டியவர்கள், மக்களின் தோளில் ஏறிச் சவாரி செய்து கொண்டிருக்கிறார்கள்!"

அதனைத்தான் சொன்னான். அதனையும் பணிவாய்த்தான் சொன்னான் மணி பல்லவன்.

மாமன்னனுக்கு பொறுக்க முடியவில்லை.

சொன்ன கருத்தில் உள்ள நிறையென்ன, குறையென்னவென்று எடை பார்ப்பதை விடுத்து, சொன்னவனை தன்னலத்தால் எடை போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தான் மன்னன்.

வார்த்தைகள் வாளாக மாறிக் கொண்டிருக்க, பொறுமையிழந்த மணி பல்லவன் சபையில் இருந்த வெளியேறினான்.

✪✪✪

**ர**குநாத பல்லவன் விழிகள் இப்போதும் சிவந்துதான் இருந்தன.

காலையில் சிவந்திருந்தது சினத்தால்! இப்போது மாலையில் சிவந்திருப்பது மதுவுண்ட மயக்கத்தால்!

மன்னன்-அதுவும் மாமன்னன். அந்தப்புரத்தில் சுந்தரிகள் அணிவகுத்து நின்றால் தானே மரியாதை.

மன்னவன் விழிகள் யார்மீது தைத்து நிற்கின்றனவோ அவள் மட்டும் நிற்கலாம். மற்றவர்கள் விலகி வெளியே போய் விடுவார்கள்.

இன்றும் அப்படித்தான்.

'வா!" என்றான். வந்தவள் மன்னனின் கழுத்தைச் சுற்றி கைகளால் பின்னிக் கொண்டாள்.

மோகத்தில் மலர்ந்த இதழ்கள். தாகத்தில் தவித்த மன்னனுக்கு தேன் குடத்தில் விழுந்துவிட்ட மகிழ்ச்சி.

படையெடுக்கும் மன்னனுக்கு பாவையின் உடையா தடை போடுவது?

மதுமயக்கத்திலும் மன்னனுக்கு கவிநயம் போகவில்லை.

"நந்தவனத்திற்கு யார் போர்வை தந்தது? வசந்தகாலத்தை வண்ணத் துகிலோ வழி மறித்து நிற்பது? அள்ளக் குறையாத அமுத சுரபியைக் கண்ணால் காணாமல் தடுக்கும் துணிச்சலை துகிலுக்குத் தந்தது யார்?"

கவிநயத்தோடு கரநயமும் சேர, சுந்தரியின் மேனியில் மோகம் மட்டுமே மிஞ்சியிருந்தது. நெற்றியில் தொடங்கி விரலால் தத்தித் தத்தி வந்து இதழ்களில் நிறுத்தினான்.

"சுளைகள் மென்மை. சுவையோ இனிமை. சுந்தரப் பெண்ணே, நீயே எனக்கு சந்தனப் பொய்கை!"

வியந்துவிட்டு விரல்கள் கழுத்தில் வருடி மெல்ல இறங்க, சுந்தரி சிணுங்கி, மன்னன் முதுகில் கரங்களைப் பரப்பினாள்.

"கள்ளின் சுவையும், முக்கனிச் சுவையின் அத்தனை இதமும், பளிங்கு நீரோடையில் குளிப்பதன் சுகமும், பூந்தாது வாரிவரும் தென்றலின் தழுவலும் ... இன்னும்.. இன்னும் பலவித உணர்வுகள், எதனைச் சொல்ல, எப்படிச் சொல்ல, எதனை ஈடாய் எடுத்துக் காட்ட?"!

மதனமாளிகையில் மன்னன் தவித்தான். காமத்தீயில் மன்னன் தகித்தான்.

புகழ்ச்சிக்கு பரிசாய் சுந்தரி கொடுத்தது இதழ்களின் முத்திரை.

மன்னனின் மேலுதட்டை இதழ்களால் வளைத்து, தேனால் நனைக்க, குளிர்ந்த மன்னன், தேகம் முழுக்க நனைய விரும்பி பொய்கையில் குதிக்க ஆயத்தமானான்.

▫▫

**இ**றுதி எச்சரிக்கை வந்தது மணி பல்லவனிடமிருந்து.

"ஆட்சிக்கட்டிலா, அந்தப்புரக் கட்டிலா என்பதை உடனே முடிவு செய்து விடுங்கள். அயலகப் படைகள் எல்லைவரை வந்து விட்டன. மன்னவர் நீர் அந்தப்புரக் கட்டிலில் சுகத்தின் எல்லையைத் தேடிக் கொண்டிருக்கிறீர்."

எச்சரிக்கையை புறக்கணித்தான் மன்னன்.

எரிச்சலின் எல்லைக்குப் போய்விட்ட மணிபல்லவன் நாட்டைக் காக்க சுயமாகவே படை திரட்டினான்.

ராஜபல்லவனுக்கு செய்தி எட்டியது.

"அதிகாரத்தில் பங்கு கேட்கவோ படை திரட்டுகிறான். ஒரே உறையில் இரண்டு கத்திகளா?"

"பங்கு கேட்பது அவர் நோக்கமல்ல. எதிரிகளால் நம் நாடு பங்கு போடப்படக் கூடாதே என்பதுதான் நோக்கம் என்று தெரிகிறது."

கருத்துச் சொன்ன அமைச்சரை வெறுப்போடு நோக்கினான் மன்னன்.

"எனது படைகளும், உங்கள் படைகளும் சேர்ந்து கொள்ளச் சம்மதம். இப்போது தேவை நம் நாட்டின் கௌரவம். சேர்ந்தே எதிர்ப்போம். தேசப் பகையை ஜெயிப்போம்"

மணிபல்லவன் மடல் அனுப்பியிருந்தான். சேர்ந்தே எதிர்த்து வெற்றி பெற்றால் புகழில் பாதி அவனுக்கும் போகுமே.

மனம் ஒப்பவில்லை.

"முதல் எதிரி மணி பல்லவன் தான். எதிரிகளின் கையாளாக எம் நாட்டை விலைபேசும் அவன் தலை உருளட்டும்."

ரகுராத பல்லவன் உத்தர விட்டான். மூண்டது போர். பாய்ந்தது இரத்தம்.

சகோதரப் பகையில் மூண்ட தீயில் இரு தரப்பிலும் விறகாய் எரிந்தன மனித உயிர்கள்.

படைபலத்திலும் பாதியைத் தின்றது உட்பகை யுத்தம்.

தருணம் அதுதான். எல்லையில் நின்ற அயல்நாட்டுப்படைகள் திமு திமுவென்று பாய்ந்து வந்தன.

மகுடம் இழந்து, மன்னன் ராஜபல்லவன் சிறைப் பறவையாய் கூட்டுக்குள் வீழ்ந்தான்.

படைதிரட்டி வந்து பார்த்துக் கொள்ளலாம் என்று மணி பல்லவன் தலைமறைவானான்.



அயல்நாட்டு மன்னன் தனது சபையில் உரத்துச் சொன்னான்;

"ராஜபல்லவன் வீழ்ந்தது நம் வீரத்தால் அல்ல!"

சபை உறைந்து போய் வியப்பாய் நோக்கியது.

"ராஜபல்லவன் ஆட்சி இரும்பு போலத்தான் இருந்தது ஒரு காலத்தில்!"

சொல்லி நிறுத்திவிட்டு சபையைக் கவனித்து, தொடர்ந்தான்;


**"இரும்பைத் தேய்கும் அரம் போன்றது உட்பகை. அரத்தால் தேய்க்கப் பட்ட இரும்பு வலிமை குன்றும்; உட்பகை உள்ள குடியும் அப்படித்தான்!"**

சபை ஆமோதிப்பது போல மௌனம் காட்டியது. "உட்பகையே தேய்க்கும் படை" சபை முணு முணுத்தது.

**"அரம்பொருத பொன்போலத் தேயும்**
**- உரம் பொருது**
**உட்பகை உற்ற குடி"**

அதிகாரம் - 89 குறள் 888

## குறுக்கெழுத்துப் போட்டி இல-130



### இடமிருந்து வலம்

01. இலங்கையின் பொருளாதார நிலை அபிவிருத்தி அடைவதனால் இதன் மதிப்பு சற்று உயர்ந்துள்ளதாம்.
03. இதனை அடக்காவிட்டால் பேராசையாக வளர்ந்து விடும்.
04. மாமன்-மாமி வீடு தேடி வருபவள்.
06. இதில் சக்கரவர்த்தி பட்டம் வாங்கியவர் கம்பர்.
08. நிம்மதியாக இதற்கானதோர் இடமின்றி வடபுலத்தில் அவதியுறுவர் எத்தனை பேர்!
09. இதனால்தான் பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டுமா என்பதில் வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ளன.
11. மங்களகரமான நிகழ்ச்சிகளில் இதற்கு நல்ல மதிப்புண்டு.

### மேலிருந்து கீழ்

01. கடவுள் இல்லை என்பவர்களை இப்பெயர் கொண்டு அழைப்பார்கள்.
02. ஒவ்வொருவருடைய இறுதியும் இவன் கையில் தான்.
03. ..... ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தி புறத்திதான்.
05. உடலில் ஏற்படும் உபாதைகளை நீக்க உதவுவது.
07. சில சிறுவர்களின் குறும்பு இதுவாக மாறுமானால் தாங்க முடியாது.
10. இக் காலத்தில் வட-கிழக்கில் பிராதானமாகத் தேவைப்படுவது.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 16.12.1995இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-130
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

இதற்கான சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-128ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ப | ட் | டி | ணி | ■ | ■ | 2 ஏ |
| 3 கி | ளை | ■ | 4 பா | 5 வ | 6 ச | ர் |
| ர | 7 பி | ர | சா | ர | ம் | ■ |
| ங் | ■ | 8 கு | ங் | கு | ம | ம் |
| 9 க | ண | க் | கு | ■ | த | ■ |
| ம் | ■ | க | ■ | 10 அ | ம் | 11 மி |
| ■ | 12 க | ல் | ல | றை | ■ | டி |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 128இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. ஜான்சினிதேவி சுந்தரராஜன்,கொழும்பு.15
2. செல்வி. ஐ. ஷகீலா, மன்னார்.
3. என். இந்து நேசன், நுவரெலியா.
4. முகமட் ஹஸ்லான், ராஜகிரிய.
5. எஸ். நித்தியகலா, பூண்டுலோயா.
6. எஸ். ஸ்ரீரவி, இரத்தினபுரி.
7. புஸ்பவதி பாலசுப்ரமணியம், ஆக்கரப்பத்தனை.
8. வை. அன்வர், இறக்குவானை.
9. திருமதி. ரி.ஆரிபா, கலகெடிஹேன.
10. என். சந்திரசேகர், அட்டாளைச்சேனை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# சிந்தியா பதில்கள்

**※ காதலில் தோல்வி ஏற்பட்டால்தான் கவிஞன் ஆக முடியுமா?**

ஏ.எஸ்.எம். நவ்சாத்,அக்குறணை-6.

*கம்பனையும், பாரதியையும், கண்ணதாசனையும் தொடர்பு கொள்ள முடியவில்லை என்பதால் வைரமுத்துவைக் கேட்கலாம், நவ்சாத் சொல்வது சரிதானா கவிஞரே?*

*"பொன்மணியை காதலித்து வெற்றி பெற்ற பின்னர்தானே நான் வெற்றி பெற்ற கவிஞனுமானேன்".*

▫▫

**※ நான் ஒரு தொழில் தொடங்க நினைக்கிறேன். அதில் வெற்றிபெற என்ன செய்யலாம்?**

சா. மனோகரன்,வவுனியா.

*என்ன தொழில் என்று நீங்கள் சொல்லவில்லையே! என்றாலும், சேர் வில்லியம் ஆஸ்லர் என்னும் அறிஞர் சொல்வதைக் கேளுங்கள்: எந்தக் காரியத்திலும் வெற்றியின் முதற்படி என்பது அந்தக் காரியத்தில் ஆர்வம் கொண்டிருப்பதுதான்!"*

▫▫

**※ டியர் சிந்தியா! நாம் நினைத்தவுடன் கடவுள் எமக்கு உதவி செய்தால்.....?**

ஜீ. நந்தகுமார், பெல்மதுளை.

*கடவுளுக்கு மதிப்பிருக்காது. சுய முயற்சியே இல்லாமல் நந்தகுமார் நத்தைக் குமாரராகிவிடுவீர்!*

▫▫

**※ அன்பின் சிந்தியா! அரசியலில் ரஜினி காந்த்துக்கு பொருத்தமான பதவி எது?**

எல். பத்மாவதி, கொழும்பு - 10

*அரசியலே தனக்குப் பொருத்தமானது தானா என்று முதலில் ரஜினி ஒரு முடிவுக்கு வரட்டுமேன்!*

▫▫

**※ அரிசி விலை இப்படி ஏறிக்கொண்டே போனால்.....?**

சு.கதிரேசன், அட்டபாகை.

*கண்டித்துப் பேசுவதற்கு எதிர்க்கட்சிக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கும்.*

▫▫

**※ நீங்கள் படித்த (சமீபத்தில்) புதுக்கவிதைகளில் பிடித்த ஒன்றைக் கூறுங்களேன்?**

வி. சசிகலா, ஹட்டன்.

*"கன்னத்திற்கு*
*குழி அழகு,*
*சாலைக்குமா?" (எழுதியவர் பெயர் மறந்தாச்......)*

▫▫

**※ ஹாய் சிந்தியா! கூடிய சீக்கிரம் கோடீஸ்வரியாக ஆசைப்படுகிறேன், என்ன செய்யலாம்?**

ரிஸ்னியா அக்பர், கட்டுகஸ்தோட்டை.

*உங்கள் பெயரே நன்றாகத்தானே இருக்கிறது ரிஸ்னியா?! மாற்றவேண்டாமே!*

**※ அடுத்தவர்களை துன்புறுத்தி ரசிப்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?**

எஸ். மகேஸ்வரி, நுவரெலியா.

*நான் நினைப்பது இருக்கட்டும்; கண்ணதாசன் நினைத்ததைச் சொல்லிவிடுகிறேன். "பிறரை அழவைத்து வேடிக்கை பார்ப்பவர்கள், தங்கள் கண்களில் கண்ணீர் இருப்பதை மறந்து விடுகிறார்கள்."*

▫▫

**※ தமிழ்நாட்டில் திராவிட கட்சிகளுக்கு மதிப்பில்லாமல் போய், காங்கிரஸ் கட்சி மீண்டும் பதவிக்கு வந்தால் என்னாகும்?**

அ. சந்திரசேகர், பதுளை.

*கரைவேட்டிக்காரர்களின் இடத்தில் கதர் சட்டைக்காரர்கள் இருப்பதைத்தவிர, வேறு எந்த முன்னேற்றமும் ஏற்பட்டுவிடாது.*

▫▫

**※ சந்தனக் கடத்தல் வீரப்பன் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ம. உதயகுமார், கொழும்பு-.5

*திரைப்படக் கதை எழுதுகிறவர்களுக்கு அவன் ஒரு அமுத சுரபி மாதிரி. தமிழ்நாடு-கர்நாடகா என்னும் இரு மாநில பொலிசாருக்கும் 'தண்ணிகாட்டிக் கொண்டிருப்பதால் சாமர்த்தியசாலி என்ற பட்டத்தை தாராளமாக வழங்கலாம்.*

**※ மனிதன் ஆசை அற்றவனாகப் படைக்கப்பட்டிருந்தால் உலகின் நிலை எப்படியிருந்திருக்கும்?**

சியானாடமஹ்றூப், இறக்கக் கண்டி.

*ஆதாம்-ஏவாளோடு மனித வரலாறு முடிந்து போயிருக்கும்.*

▫▫

**※ கவர்ச்சிப் புயல் நக்மா அடிக்கடி என் கனவில் வருகிறார், நான் என்ன செய்வது?**

லிட்டோர் பர்னாந்து, கொழும்பு-13.

*ஒன்றும் செய்ய முடியாது....*

▫▫

**※ அரசியல்வாதிகள் நம்நாட்டில் எப்படியிருக்கிறார்கள்?**

சோ. பவானந்தன், மட்டக்களப்பு.

*நம்நாட்டில் என்று எல்லையை ஏன் குறுக்கிவிட்டீர்கள்? அரசியல்வாதிகள் என்பது உலகப் பொது விஷயம். ஷேக்ஸ்பியர் என்ன சொல்கிறார் தெரியுமோ? கேளுங்கள்;*

*"அரசியல்வாதி*
*கடவுளையும்*
*ஏமாற்றக்கூடியவன்."*

▫▫

**※ சமீபத்தில் தாங்கள் ரசித்த ஜோக் ஒன்று....?**

எல். வாகினி, திருமலை.

**சித்திரகுப்தன்**-*மகாராஜா! தாங்கள் ஏன் சந்தனக்கடத்தல் வீரப்பனுக்கு பாசக்கயிறு வீசுவதில்லை?*

**எமதர்மன்**-*வீரப்பன் அருகில் சென்றால் சந்தனவாசம் வீசுவதால், அதில் மயங்கி விடுகிறேன்?*

## கண்டுபிடித்தீர்களா?

13ம் பக்கத்தில் உள்ளவர்கள் நால்வருமே பரிச்சயமானவர்கள்.
(1) எம்.ஜி.ஆர். (15 வயதில்) (2) எஸ்.வி.சேகர் (3) ஸ்ரீதேவி. (4) பிரசாந்த்.

- (நன்றி - விகடன்)



படிப்பகம்


www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 10

இராமனையும் இலக்குவனையும் அழைத்துக்கொண்டு விசுவாமித்திர மாமுனிவர் மிதிலை மாநகர வீதிகளில் செல்லும் போது மேற்கு நோக்கிச் சூரியன் மெல்ல நகர்ந்து கொண்டிருந்தான். வீதிகளில் சாரி சாரியாக மக்கள் சென்று கொண்டிருந்தனர். அரசவையில் அன்றைய அலுவல்கள் முடிவடைந்து பணியாளர்கள் தத்தமது இல்லங்களுக்குத் திரும்பிக்கொண்டிருந்தனர். அமைச்சர்களும் பிரதானிகளும் அதே இராஜபாட்டை வழியாகச் சென்றுகொண்டிருப்பதனால் குதிரை வண்டிகளில் பவனி செல்வோரும் தனித்தனிக்குதிரைகளில் ஏறிச் செல்வோரும் நெருக்குதலை ஏற்படுத்தியமையினால் பாதசாரிகள் வீதியின் இருமருங்கிலுமே ஒருவரோடொருவர் முட்டி மோதிக் கொண்டிருந்தனர். இதனால் வீதியின் மத்தியில் ஒரு பெரிய இடைவெளி விடப்பட்டிருந்தது.

மிதிலை மா நகரின் வடதிசை வாயிலினூடாக விசுவாமித்திரரும் இராம இலக்குவனும் பிரவேசித்து இராஜபாட்டையில் காலடி எடுத்து வைத்ததும் இவர்களைக் கண்ட நகரமாந்தர் தங்களை அறியாமலே தங்கள் கைகளை சிரசின்மேல் குவித்து வணங்கினர். மாமுனிவரின் அங்கத்திலிருந்து

## அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்



எழுந்த காந்த சக்திபடைத்த ஒளியினைக் கண்ட பலர் அவர்தம் பாதங்களில் அஷ்டாங்கமாக விழுந்து தொழுதனர். முனிவரின் பின் தொடர்ந்து வரும் இளைஞர்கள் இருவரையும் கண்டதும் ஒரு கணம் திகைப்பு மேலீட்டால் செயலிழந்து நின்றனர். இதற்கிடையில் வாயிலில் நின்ற காவலர்கள்– விசுவாமித்திர மாமுனிரை முன்னர் கண்டறியாததனால் தடுமாறினர். தெய்வீகக் களை பொருந்திய மகான் ஒருவரும் தேவ குமாரர்கள் போன்ற இருவரும் அரண்மனையை நோக்கி வந்து கொண்டிருப்பதாக சனக மன்னரிடம் ஓடிச் சென்று கூறிவிட்டனர்.

தகவலறிந்த சனக மன்னர் தனது குல குருவான சதானந்தரை அழைத்து நிலமையைக் கூறினார். சதானந்தர் கவுதம மாமுனிவருக்கும் அகலிகைக்கும் பிறந்தவர் என்பதனால், தனது ஞானதிருஷ்டியின் துணைகொண்டு, வருபவர் யார் என்பதனைக் கண்டு கொண்டார்.

"மன்னவா! வந்திருப்பவர் விசுவாமித்திர மாமுனிவர் என்பதனைக் கண்டு கொண்டேன், நாம் நடத்தவிருக்கும் வேள்விக்கு வருமாறு நாம் அனுப்பிவைத்த அழைப்பினை ஏற்று வந்துவிட்டார்." இவ்வாறு சதானந்த முனிவர் கூறியதும் மன்னரின் பதட்டம் பன்மடங்காகிவிட்டது. முன்னறிவித்தல் எதுவுமே இல்லாமல் திடுதிப்பென வந்து விட்டாரே என்று மன்னன் கவலையுற்றான். தெரிந்திருந்தால் நகர வாயிலில் சென்று மகத்தான வரவேற்பளித்து அழைத்து வந்திருக்கலாமே என்று வெதும்பினார். இருப்பினும் காலதாமதம் செய்யாமல் அரண்மனை வாயிலிலாவது வரவேற்பளிக்க முடிவு செய்து, உரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு சகலருக்கும் மன்னர் கட்டளை பிறப்பித்தார்

### முன்னறிவிப்பின்றி வந்த மாமுனிவர்

மாமுனிவர் விசுவாமித்திரர் எங்கு சென்றாலும் அவருடைய வருகையை முன்கூட்டியே அறிவித்து விட்டுத்தான் செல்வது வழக்கம். இது அவர் மட்டுமல்ல, ஏனைய அரசர்கள், பிரமுகர்கள், முனிவர்கள் அனைவரும் கடைப்பிடிக்கும் பழக்கம். ஆனால் விசுவாமித்தரர் முன்னறிவித்தல் எதுவுமின்றி அரச அரண்மனை நாடிச் செல்வது இது இரண்டாவது தடவை.

தன்போன்ற தவசிகளால் நடத்தப்பட்டு வந்த வேள்விகளை நடத்தவொட்டாமல் தடுக்கும் அரக்கர்களை அடக்குவதற்காக தசரத மன்னரின் மகன் இராமனை அழைத்து வர அயோத்தி நகருக்கு எதுவித முன்னறிவிப்புமின்றிச் சென்றிருந்தார். அதே போன்று இராமனையும் இலக்குவனையும் தம்முடன் அழைத்துக்கொண்டு முன்னறிவிப்பில்லாமல் மிதிலை மாநகரை வந்தடைந்திருக்கிறார்.

விசுவாமித்திரர் கடும் கோபக்காரரர் என்பதனை ஏற்கனவே தெரிந்திருந்த மன்னர் சனகரும் அமைச்சர்களும் சதானந்தரும் கதிகலங்கி, முனிவரை வரவேற்கத் தட்டுத் தடுமாறி ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தனர். இதனால் அரண்மனை மட்டுமல்ல அரசரின் அந்தப்புரமே அல்லோலகல்லோலப்பட்டது. அந்தப்புரத்து பூங்காவில் தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருந்த சீதையின் காதுகளுக்கும் சுற்றாடலில் ஏற்பட்ட ஆரவார ஒலிகள் கேட்டன. யாரோ ஒரு முனிசிரேட்டரும் இரு அழகிய இளைஞர்களும் வந்து கொண்டிருக்கிறார்களாம் என்ற தகவல் தோழிகள் மூலம் சீதைக்கும் எட்டியது. தோழிகளுடன் சேர்ந்து அவளும் அந்தப்புர உப்பரிகைக்கு வந்து சேர்ந்தாள்.

விசுவாமித்திரரும் அரச குமாரர்களும் இராஜபாட்டையின் நடு வழியாக வந்து கொண்டிருக்கும் போது ஒரு குறிப்பிட்ட இடத்தை வந்தடைந்ததும் முனிவர் தனது நடையைத் தளர்த்தினார் என்பதை முன்னரே குறிப்பிட்டோம். முக்கியமான காரணம் ஒன்றுக்காகவே விசுவாமித்திரர் அந்தக் குறிப்பிட்ட இடத்தில் சற்றுத் தயங்கி நின்றார், யாகத்தைக் கலைத்து, தவோதனர்களுக்கு இம்சை கொடுத்து வந்த தாடகை முதலான இராக்கதர்களை அழித்த இராமனுக்கு உரிய பரிசினை வழங்குவதற்காகவே விசுவாமித்திரர் இராமனையும் இலக்குவனையும் மிதிலை மாநகருக்கு அழைத்து வந்தார். ஒப்புவமை கூறமுடியாத அந்தப் பரிசினை இராமனின் கண்களில் படவைத்துவிட வேண்டும் என்பது தான் அம்மாமுனிவரின் எண்ணம் போலும்.

தான் மிதிலை வருவதை முன்கூட்டியே மன்னவனுக்கு அறிவிக்காமல் முனிவர் இருந்ததும் காரணத் தோடுதான் என்பதும் புலனாகிறது. ஏற்கனவே தெரிந்திருந்தால் முனிவருக்கும் இராம-இலக்குவனுக்கும் ஒப்பற்ற வரவேற்பு வழங்கப்பட்டிருக்கும். மிதிலைநகர் வாழ் மக்கள் மட்டுமல்லாமல் அயலிலுள்ள பிரதேசங்களிலிருந்தும் எண்ணற்ற மக்கள் வீதிகளில் வந்து குவிந்து கிடப்பர். வீதிகளில் எங்கும் மகர தோரணங்களும் கொடிகளும் வளைவுகளும் கட்டப்பட்டிருக்கும். கொடி, குடை ஆலவட்டங்களுடன் வேத மந்திரங்களை ஓதும் வேதியர்களும் வேத விற்பந்நர்களும் புடை சூழ ஊர்வலமாக முனிவர் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருப்பார், இத்தகைய ஆடம்பரங்களைத் தவிர்த்து தன்னுடைய எண்ணத்தை நிறைவேற்ற நினைத்த மாமுனிவர், இராமனையும் இலக்குவனையும் அழைத்துக் கொண்டு இராஜபாட்டையில் மிக அமைதியாக வந்தார்.

### கண்வழி புகுந்த காதல் கணை

சீதையும் தோழிகளும் அந்தப்புரத்தின் உப்பரிகையில் வந்து வீதியினைப் பார்த்து நின்றனர். அப்போதுதான் சீதையின் கண்களுக்குள் அற்புதமான ஒளி ஒன்று புகுந்து அவளுடைய உள்ளத்தையும் உடலையும் ஆக்கிரமித்தது. அதே நொடியில் வீதியிலிருந்து அந்த உப்பரிகையில் நின்ற சீதையைக் கண்ட இராமனுக்கும் கண்வழி புகுந்த சுடரொழி அவனுடைய கருத்தினையும் கவர்ந்திழுத்துக் கொண்டது.

* * *

### இராஜகுமாரி

***வால்மீகி இராமாயணத்தில் இத்தகைய சுவையான கட்டம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. கவிச்சக்கரவர்த்தி கம்பனோ இராமபிரானையும் சீதாப்பிராட்டியாரையும் முதன் முதலில் சந்திக்க வைத்த கட்டமும் தொடர்ந்து இருவரும் காதல் நோயினால் படும் துயரமும் எத்தகையது என்பதனை மிகவும் சுவையுடன் வர்ணித்திருக்கிறார்.***

**'கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின்**
**வாய்ச் சொற்கள்,**
**என்ன பயனும் இல'**

***இவ்வாறு ஈற்றடியால் வள்ளுவன் கூறிய வாய்மொழிக்கு ஏற்ப கம்பநாட்டாழ்வாரின் கவிதைகளும் விளங்குகின்றன. இருவருடைய விழிகளும் ஒன்றையொன்று எவ்வாறு தரிசித்தன என்பதனைக் கூறுமிடத்து–***

**எண்ண அரு நலத்தினாள் இனையள் நின்றுழி,**
**கண்ணொடு கண் இணை கவ்வி, ஒன்றை ஒன்று**
**உண்ணவும், நிலைபெறாது உணர்வும் ஒன்றிட**
**அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்.**

(பால காண்டம்: 514)

பொருள்:

***இது தான் அழகின் எல்லையோ என்று கூட எண்ணிடமுடியாத எழிலுருவாக நின்ற அவளுடைய கண்களோடு மற்றொருவருடையகண்களும் ஒன்றினை மற்றொன்று கவர்ந்திழுப்பது போன்ற நிலையில் ஒன்றுபட்டு விட்டதன்மையில் அண்ணலாகிய இராமனும் பார்க்கும் அதே சமயத்தில் சீதையும் இராமனைப் பார்க்கிறாள்.***

***இவ்வாறு ஒருவரை ஒருவர் பார்த்த மாத்திரத்திலேயே காதல் வயப்பட்ட இருவரும் காமநோயினால் படும் துன்பங்களை கம்பநாடார் பல பாடல்களில் மிக அற்புதமாகப் படம்பிடித்துக் காட்டுகிறார்.***

* * *

விசுவாமித்திர மாமுனிவர் தான் கருதிய கருமத்தை வெற்றிகரமாக முடித்துவிட்ட மகிழ்ச்சியில் தனது நடையைத் தொடக்கினார். கருத்தையெல்லாம் கன்னிமாடத்து உப்பரிகையில் கண்ட காரிகையிடம் பறிகொடுத்து விட்ட இராமபிரான், உயிரேயற்ற வெறும் சடலம் போல முனிவரைப் பின் தொடர்ந்தார்.

இவ்வாறு மூவரும் அரசருக்குரிய மாளிகையின் வாயிலை அடைந்த அதே வேளையில் சனக மாமன்னனும் சதானந்த முனிவரும் அமைச்சர்கள் முதலான ஏனையோரும் எதிர் கொண்டு நின்றனர். அரசன் முதலில் முனிவரின் அடி தொழுதெழுந்தார். அதே போல் அமைச்சர்கள் முதலானோரும் முனிவரை வணங்கினர். சதானந்தரும் மாமுனிவரை வணங்கினார். விசுவாமித்திரர் அனைவரையும் ஆசீர்வதித்தார். இதே கால கட்டத்தில் சனக மாமன்னனுடைய கண்கள் முனிவரின் அருகில் நின்ற இராமனையும் இலக்குவனையும் கண்டு கொண்டன. அவர்களின் திருவுருவங்கள் அவருடைய உள்ளத்திலும் குடியேறி விட்டமையை மாமுனிவரும் அறிந்து கொண்டார்.

"சனக மன்னனே! இவர்கள் இருவரும் அயோத்திமாமன்னன் தசரதனின் புதல்வர்களான இராமனும் இலக்குவனுமாவர். என்போன்ற தவசிகள் மேற்கொள்ளும் வேள்விகளை அழித்து நிர்மூலம் செய்த அரக்கர்களை அழித்தொழிப்பதற்காக என்னுடன் என் தபோவனம் வந்திருந்தனர். நீர் நடத்தும் வேள்வியினைக் காணவும் உம்மிடமுள்ள சிவதனுசுவினைத் தரிசிக்கவும் இவர்களை என்னுடன் அழைத்து வந்துள்ளேன்" என்று விசுவாமித்திரர் சனக மன்னனுக்குக் கூறினர். தனது நண்பரான தசரத சக்கரவர்த்தியின் புதல்வர்கள் என்பதனைக் கேள்வியுற்றதும், முதன் முதலில் அவர் களைக் கண்டவுடன் ஏற்பட்ட இனம் புரியாத இன்ப உணர்ச்சி, சனக மன்னரிடத்தில் பன்மடங்காகப் பெருகியது. அவர்கள் இருவரை யும் தன்பால் இழுத்தணைத்து உச்சி மோந்து ஆசிகூறினார்.

வரவேற்புபசாரம் முடிவடைந்ததும் மன்னரும் சதானந்தரும் முனிவரையும் அரச குமாரர்களையும் அழைத்துக் கொண்டு, ஏற்கனவே விசுவாமித்திரருக்காக அமைக்கப்பட்டிருந்த மாளிகைக்குச் சென்றனர். சதானந்த முனிவரை அவர்களுடன் விட்டுவிட்டு மன்னர் அரண்மனை ஏகினார். அப்போது இராமனையும் இலக்குவனையும் சதானந்த முனிவருக்கு-தனிப்பட்ட முறையில் அறிமுகம் செய்த முனிவர், "சதானந்தா! உன் தந்தை கவுதமரால் சபிக்கப்பட்ட உன் தாய் அகலிகை இன்று சாபவிமோசனமடைந்துவிட்டாள். கல்லாக இருந்தவள் இன்று தன் சுயஉருவினை அடைந்துவிட்டாள், கவுதம மாமுனிவரும் உன் தாயை ஏற்றுக்கொண்டுவிட்டார், அகலிகை சாபவிமோசனம் பெற உதவியது இந்த உத்தமன் இராமனின் இரு பாதங்களே" என்று கூறியதும் பேரானந்தப் பெருக்குடன் இராமபிரானின் அடிகளில் விழுந்து வணங்க ஓடோடிச் சென்ற சதானந்த முனிவரின் கால்களில் முதலில் இராமரே விழுந்து வணங்கினார். இவ்வரிய காட்சியினைக் கண்ட மாமுனிவரின் கண்கள் பனித்தன.

சற்று நேரம் அங்கேயே தரித்திருந்த சதானந்தரே, இராம-இலக்குவனுக்கு விசுவாமித்திர மாமுனிவரின் வரலாற்றினை எடுத்துரைத்தார். முனிவரின் கதை முழுவதையும் கேட்டறிந்த அரச குமாரர்கள், முனிவர் மீது ஏற்கனவே கொண்டிருந்த மதிப்பைவிட மேலும் பக்தியுடன் கூடிய பெரு மதிப்பினைக் கொண்டனர்.

அடுத்த நாட்காலை உதயத்தின் முன் எழுந்த இராமனும் இலக்குவனும் தங்கள் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு மாமுனிவருடன் யாகசாலை சென்றனர். பல திக்குகளிலுமிருந்து வந்திருந்த முனிசிரேட்டர்களும் அரசர்களும் அங்கு திரண்டிருந்தனர், வேதவிதிப்படி மந்திரோச்சாடனங்கள் இடம் பெற்று தேவதைகளுக்கான அவிர்பாகங்களும் வழங்கப்பட்டன, யாகமும் வெற்றிகரமாக முடிவுற்றது.

### வில்லினை ஒடித்த வீர மைந்தன்

**வே**ள்வி முடிந்து மறு நாள் காலையில் சனக மாமன்னனின் அரசவையில் பல நாட்டு மன்னர்களும் வந்து குழுமியிருந்தனர், முனிபுங்கவருடன் இராமனும் இலக்குவனும் வந்து இருக்கைகளில் அமர்ந்தனர். அப்போது இராக்கதர்களைப் போன்ற வலிவான தோற்றமுடைய பலர் ஒரு இரும்புப் பேழையை இழுத்து வந்து அவையின் நடுவே வைத்தனர்.

அந்தப் பேழையினை இழுத்து வருவது எத்தகைய சிரமமானது என்பதனை, இழுத்து வந்தவர்களின் உடல்களிலிருந்து பாய்ந்து வெளியேறிய வியர்வையே விளக்கியது. அப்பேழை திறக்கப்பட்டதும் அதனுள்ளிருந்த பொருளைப்பார்க்க, அங்கு குழுமியிருந்த அனைவரும் எழுந்து நின்றனர். அனைவரையும் அமருமாறு கையமர்த்திய சனக மன்னன், "அரச பெருமக்களே! இந்தச் சிவதனுசு, பெயருக்கேற்ப சிவபிரானிடத்திலிருந்து எமது மூதாதையர் ஒருவரிடம் வந்து சேர்ந்தது. பூமாதேவியின் அருளால் எனக்குக்கிடைத்த என்மகள் சீதையின் திருமணத்துக்கும் இந்தச் சிவதனுசுவுக்கும் நான் ஒரு தொடர்பினை ஏற்படுத்திவிட்டேன். அதன்படி இந்த வில்லை வளைத்து நாணேற்றும் ஒருவருக்கே என்மகளை மணம் முடித்து வைப்பதாக அறிவித்தேன். எத்தனையோ அரசர்கள் வந்து இந்த வில்லினைக் கண்டதுமே ஒதுங்கிவிட்டனர். மாவீரனான இலங்கை வேந்தன் இராவணேசனும் வந்து பார்த்து தன் கைகளால் வில்லைத்தூக்க முடியாமல் போய்விட்டார். ஆகவே மாநிடர்களால் இத்தனுசுவுக்கு நாணேற்ற முடியாது. தேவர்களுக்கும் மேலான ஒரு புருடனால் தான் இது சாத்தியமாகும்," என்று கூறினார்.

இதனைக் கேட்டதும் விசுவாமித்திரர், "மன்னா! என்னுடன் வந்திருக்கும் தசரத குமாரனான இராமன் இந்த வில்லினைத் தொட அனுமதிப்பீரா?" என்று வினவினார். சனகன் தலை அசைத்ததும் தன் பார்வையினாலேயே இராமனுக்கு முனிவர் ஆணை பிறப்பித்தார்.



இருக்கையை விட்டு எழுந்த இராமன் முதலில் விசுவாமித்திரரை வணங்கினான். பின்னர் சனகமன்னனையும் வணங்கினான். வில்லிருக்கும் பேழையை கூப்பிய கரங்களுடன் மும்முறை வலம் வந்து வணங்கிய பின் தனது இருகைகளாலும் வில்லினை அனாயாசமாகத் தூக்கி எடுத்தான். அவ்வில்லினைத் தொட்டுத் தடவுவதற்கே அஞ்சிய பல அரசர்கள் அதிசயத்துடன் பார்த்திருக்க, தனது இடதுகால் பெருவிரலால் வில்லின் ஒரு முனையை அழுத்தி, கீழ் முனையிலிருந்த நாணை மேலிழுத்து, மேல் முனையில் கட்டுவதற்கு முனையும் போது பெரும் பேரொலியுடன் வில் இரு துண்டுகளாக உடைந்து பூமியில் வீழ்ந்தது.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி இல—08**
**பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள்**

**சரியான விடை** தந்தையின் பெயர்: அசமஞ்சன், மகன் பெயர்: அம்சுமான்

1. செல்வி.எஞ்சலினா டெலத்தி சாமுவேல்
இல.508ß, வெளியேள் வீதி, கொச்சிக்கடை.
2. செல்வி.க.சந்திரகலா
23/13,பன்சலவீதி,இராகலை பஜார்,ஹல்கரனோயா.
3. என்.எம்.நிஹாஜ்
20 மாத்தளை ரோட், கட்டுகஸ்தோட்டை, கண்டி.
4. செல்வன். சுரேன்
சென்பெற்றிக் லேன்ட், மீப்பிட்டிய, நாவலப்பிட்டிய
5. திரு.யோசப் சின்னத்தம்பி, 232/2, சுங்க வீதி, திருக்கோணமலை.

**இராமாயணப் போட்டி 10**

ஒரே ஒரு கேள்வி மட்டும். பதிலை அழகாக தபாலட்டையில் எழுதி அனுப்பினால் போதும். அதிஷ்டசாலிகளான ஐந்து பேருக்கு இலக்கிய நூல்கள்.

**கேள்வி:–** இராமன் உடைத்த வில்லின் பெயர் என்ன?

டிசம்பர் 16ம் திகதிக்கு முன்பாக பதில் அனுப்ப வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி இல:10.
தினமுரசு வாரமலர்
த.பெ. இல— 1772
கொழும்பு.



படிப்பகம்


அருள் ஜுவலர்ஸ்
ARUL JUWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11





அம்மன் ஜுவல்
AMMAN JUWEL

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
29 செட்டியார் தெரு, கொழும்பு 11


## இன்னும் வயதிருக்கு

தோல்விதான். ஆனால், இந்திய பண மதிப்பின்படி ஒன்னே முக்கால் கோடி ரூபாய் கனையாகக் கிடைத்தது ஆனந்துக்கு முழுப்பெயர் விசுவநாதன் ஆனந்த். தமிழ்நாட்டுக்காரர்.

மொத்தம் பதினெட்டுப் போட்டிகள். வெல்பவருக்கு உலக சாம்பியன் பட்டம். தனது 22வது வயதிலேயே - உலக சாம்பியன் பட்டம் வாங்கிய காஸ்பரோவோடு மோதுவது சுலபமல்ல. ஆனாலும் ஆனந்த் 13 முறை ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடித்ததே பெரிய ஆச்சரியமாகக் கருதப்படுகிறது.

ஆனந்துக்கு இப்போது 25 வயதுதான். தற்போதைய தோல்வியால் மன உறுதி பாதிக்கப்படாவிட்டால் ஆனந்த் செஸ் உலகில் வெற்றிக்கொடி நாட்டி தமிழ் உலகுக்கும் பெருமை சேர்க்க முடியும்.

ஆனந்த் சூட்டுப்பட்டது மோதிரக் கையால்தான். செஸ் போட்டிகளில் காஸ்பரோவை வெல்லக்கூடிய எவரும் இதுவரை உருவாகவில்லை. அவரையே 13 முறை டிரா செய்தது சாதனைதானே.

## தளராதே. போராடு


இந்திய கிரிக்கெட் அணிவீரர்களில் அநேகமாக அனைவருக்குமே நட்சத்திர மதிப்பு இருக்கிறது. எக்கச்சக்கமான இரசிக, இரசிகைகளும் இருக்கிறார்கள். மனோஜ் பிரபாகருக்கும் அப்படித்தான். பந்துவீச்சு, துடுப்பாட்டம், பந்து தடுப்பு என்று சகல துறைகளிலும் கில்லாடி. இடையிலே சில காலம் பிரகாசிக்க முடியவில்லை.

அணியிலிருந்தே ஒரேயடியாக ஓரம் கட்டப்பட்டுவிடுவாரோ என்று அவரது ரசிகர்களும், ரசிகைகளும் நொந்து போயிருந்தனர். மனம் உடைந்து போகாமல் கடும் பயிற்சியில் ஈடுபட்டார் மனோஜ் பிரபாகர். பயிற்சி கைகொடுத்துவிட்டது.

சமீபத்திய இந்தியா-நியூஸிலாந்து கிரிக்கெட் போட்டித் 'தொடரின் நாயகன்' என்ற பட்டம் கைமேல் பலனாகக் கிடைத்திருக்கிறது.

பந்துவீச்சில் தனது திறமையை மீளவும் பெற்றுக் கொள்ள தளராமல் போராடி களத்தில் வெற்றிகளை அறுவடை செய்தார் மனோஜ் பிரபாகர்.

பிரபல இந்தி நடிகைகள் சிலரே மனோஜ் பிரபாகரில் பைத்தியமாக இருக்கிறார்கள். நட்சத்திரங்களை கவரும் நட்சத்திரம்.





அரண்மனைக் கெடுபிடி. அரச வம்ச அலட்சியம் எல்லாமே இயந்திரத்தனமாக இருக்க டயானா-தனக்குள் ஒடுங்கிப்போனார். உள்ளே கிடைக்காத மகிழ்ச்சியை வெளியே தேடத் தொடங்கினார். சமீபத்தில் பி.பி.சி. தொலைக்காட்சிக்கு டயானா கொடுத்த பேட்டியில் பளிச் சென்று தெரியும் உண்மை அதுதான்.

## புரியாத புதிர்

டயானாவோடு கைகோர்த்து நிற்கும் இந்த குண்டு மனிதரின் பெயர் பவரோட்டி. டயானாவின் காதலராக இருக்குமோ என்றெல்லாம் தேவையற்ற கற்பனைகள் வேண்டாம். பவரோட்டி சாஸ்திரிய மேற்கத்திய இசை வல்லுநர். இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்.

பவரோட்டி சமீபத்தில் ஒரு நல்ல காரியம் செய்தார். பொஸ்னிய நாட்டுக் குழந்தைகளுக்கு உதவி செய்வதற்காக பெரிய இசை நிகழ்ச்சி ஒன்றை நடத்தினார். பிரபலங்களை அழைத்தால்தான் வசூல் கூடும் என்பதால் டயானாவுக்கு அழைப்பு விடுத்தார். பவரோட்டியின் இரசிகையான டயானா அவரது அழைப்பை ஏற்று நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். தனது அன்பின் அடையாளமாக பவரோட்டிக்கு ஒரு முத்தமும் போனஸாக (கன்னத்தில் மட்டும்) கொடுத்தார் டயானா.

பவரோட்டியின் பாடல் எப்படி இருக்கும் தெரியுமோ? ஆ...என்று ஆரம்பித்து 'ஆ'வை 10 நிமிடங்கள் மூச்சுவிடாமல் இழுத்துப் பாடி அசத்துவதுதான் பவரோட்டியின் ஸ்டைல்.



## அறுவடையாகும் அவலங்கள்

போர் என்பது பந்தாட்டமல்ல. போருக்கு வெளியே இருப்பவர்களுக்கு போர்க்களச் செய்திகளில் தமது தரப்பு எதுவோ அது வெல்வது மகிழ்ச்சி. தோற்றால் சோகம். இரண்டுமே கொஞ்ச நாட்களுக்குத்தான். நிரந்தரமானது எது? போரில் அறுவடையான அவலங்கள்தானே நிரந்தரமானவை. வீழ்ந்தவர் குடும்பம் வாழ்நாள் முழுக்கக் கண்ணீர்க் கடலில். வாழ்வைத் தொலைத்தவர் நிமிரவும் நீண்டநாள் தேவை. வளைகுடாப் போர் முதல், ருவாண்டா உட்பட இன்று வட புலப் போர்வரை அது தான் உண்மை.





வளைகுடாப் போரின் நடுவே தமது சகாக்களுக்கு அஞ்சலி செய்யும் அமெரிக்க வீரர்கள். சேர்த்து வைத்தவர்களை இடையிலே தொலைத்து, சோகம் சுமந்து, எல்லாம் முடிய வெற்றி என்று பிரகடனம் செய்வதால் யாருக்கு லாபம்? மனிதன் இயற்கையை வெல்வது விஞ்ஞான முன்னேற்றம். மனிதனே மனிதனை வெல்வது விபரீதம்.



இப்பத்திரிகை கொழும்பு [illegible] தினமுரசு பதிப்பகத்தாரால் [illegible] டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்